மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

திருமதி. இராஜேஸ்வரி சண்முகம்

20/=

செப்டம்பர் 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RANI GRINDING MILLS

219, Main Street, Malatle,
Sri Lanka.
Phone : 066-2425

VIJAYA GENERAL STORES
(AGRO SERVICE CENTRE)

DEALERS : AGROCHEMICAL, SPRAYERS,
FERTILIZER & VEGETABLE SEEDS

No. 85, Ratnajothy Sarawanamuthu Mawatha,
(Wolfendhal Street), Colombo 13.

Phone : 327011

மல்லிகை

269 செப்ரெம்பர் 2000

'Mallikai' Progressive Monthly Magazine

35 ஆவது ஆண்டு

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவியாதியனைய
கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும்
நடப்பவர் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர்'

அந்தப் 19 நாட்கள்

இந்தத் தடவை சென்னைக்கு நான் சென்றது 'தமிழ் இனி 2000' இலக்கிய விழாவைப் பார்ப்பதற்கே. பார்வையாளனாகத் தான் நான் கலந்து கொண்டேன். இவ்விழா சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் அங்கு நிலவி வந்ததையும் அவதானித்தேன். இந்த வாத, பிரதிவாதங்களில் நான் கருத்தேதுமே சொல்லவில்லை. இப்படியான பெரும் விழாக்கள் பற்றி அதுவும் எழுத்தாளர்கள் ஒருங்கு சேர்ந்து நடத்தும் விழாக்கள் சம்பந்தமாகப் - பல்வேறு கருத்துக்களும் அபிப்பிராயங்களும் நிலவுவது இயல்பானதேயாகும். எனவே எந்த விதமான மனப் பாதிப்புக்களுமற்ற மனநிலையில் தான் இந்த விழாவை வெகு கூர்மையாக அவதானித்து வந்தேன்.

இது சம்பந்தமான மனம் திறந்த கருத்தை கொழும்பில் மல்லிகைப் பந்தலில் நடந்த எழுத்தாளர் கலந்துரையாடலில் வெகு விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

இந்த விழா சம்பந்தமாக என் வரைக்கும் கிடைத்த பெறுபேறு என்னவென்றால் ஏராளமான தமிழகத்து, மலேசிய எழுத்தாளர்களை ஒருங்கு சேரக் கண்டு கதைத்து அளாவளாவியதுதான். மெத்தப் பெரிய மகிழ்ச்சி எனக்கு.

அடுத்து நண்பர் ஜெயகாந்தனின் மகன் ஜெயசிம்மனின் திருமண வரவேற்பில் -ஹோட்டல் காஞ்சியில் கலந்து கொண்டது மற்றும் இலக்கியச் சிந்தனை மாதாந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியதுமாகும்.

இலக்கிய விழாவில் பங்கு கொண்ட மலேசிய, சிங்கப்பூர், இலங்கை எழுத்தாளர்களுக்கு நமது புரவலர் ஹாசிம் உமர் சென்னை பீரீஸ் ஹோட்டலில் மதிய போசன விருந்தளித்துக் கௌரவித்தார். அழைத்த அனைவருக்கும் சந்தன மாலை சூட்டி வரவேற்றது மன நிறைவைத் தந்தது. இவ் வரவேற்பில் கணிசமான இலங்கை எழுத்தாளர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

என்னைப் பொறுத்தவரை இந்த விழாவில் பார்வையாளனாகக் கலந்து கொண்டது பெரும் பயனைத் தந்தது என்றே கூற வேண்டும்.

மல்லிகைச் சுவைஞர்கள் - இவர்களில் பலர் முகம் தெரியாத ரசிகர்கள். பலர் கிராமத்திலிருந்து வந்தவர்கள் - மல்லிகை மலரைக் கேட்டுப் பெற்றனர். என் கையால் மலரைப் பெற்றுக் கொண்டதால் பெருமகிழ்ச்சி அடைந்தனர். கட்டித் தழுவினர்.

இன்றைய கணனியுகத் தமிழ் தமிழக எல்லைப் பிரிவுகளையும் தாண்டி, இலங்கை மண்ணையும் விட்டுச் சென்று அதன் மெய்யான புதிய எல்லைகளுக்கு நகர்ந்து அகன்று, இன்று சர்வதேசத் தளத்திற்கு விரிவடைந்துள்ளதை நான் பூரணமாகத் தெரிந்து கொண்டேன்.

இது ஒரு புதிய அனுபவம் எனக்கு.

-டொமினிக் ஜீவா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனித் துறையில் உங்களை உச்ச நிலைக்கு அழைத்து,
உங்கள் எதிர் காலத்தை ஒளிர்விக்க
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

APTECH
COMPUTER EDUCATION
We Change Lives

320 - 1/1, Galle Road,
Colombo - 03.

மல்லிகை

சத்தியத்தைச் சுமந்து நின்ற மானுடன் சரித்திரத்தில் நிலைத்து நிற்பான்!

இன்று ஆறுதலாக, அமைதியாக இருந்து சிந்திக்கும் வேளையில்தான் இந்தப் பிரிவு எத்தகைய சோக அழுத்தம் வாய்ந்தது என உற்றுணர முடிகின்றது. மனசு விம்முகின்றது.

வளரிளம் பருவ காலத்திலேயே மல்லிகைக்குக் கவிதைகள் எழுதியுள்ளார் கவிஞர் அஷ்ர.்.ப். ஆசிரியருக்குக் கடிதமும் வரைந்திருந்தார்.

கிழக்கின் புதிய சிந்தனையோட்டம், அந்த எழுத்துக்களினூடே மிளிர்ந்ததை எம்மால் அனுமானிக்க முடிந்தது.

அந்தக் கால கட்டத்தில் மல்லிகையுடன் அரும்பிய இலக்கிய நட்புப் புரிந்துணர்வு, கடைசிக்கால கட்டம் வரை நீடித்து வளர்ந்து வந்துள்ளது.

மாதா மாதம் மல்லிகையை விரும்பிப் படிப்பவர்களில் ஒருவராக – தரமான சுவைஞராக – அவர் இருந்து வந்துள்ளார்.

கர்வமில்லாமல் பழகும் அந்த எளிமை, ராஜ தந்திரக் கம்பீரம், எதையுமே கூர்ந்து அவதானித்துப் புரிந்து கொள்ளும் கூரிய மதி நுட்பம் ஆகிய பன்முகப் பார்வை கொண்ட அவர் இறுதிவரை ஒரு தலைவனாகவே இருந்து மறைந்துள்ளார்.

அரசியல், பதவி அந்தஸ்துகளைக் கடந்தும் விசாலமான மனிதனாக – மனிதனை மாத்திரமே – பார்க்கத் தெரிந்தவர், கவிஞர்.

எழுத்தாளர்கள் மீது ஒரு தேவதையைப் போலப் பிரியம் காட்டிப் பரிவுடன் அவர்களை அரவணைத்து வந்தவர், கவிஞர் அஷ்ர.்.ப். பெரும் கனவான். குணவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதான் அவரது அரசியல் அமைப்பில் இலங்கையின் பிரபல முஸ்லீம் எழுத்தாளர்களில் பெரும்பாலோர் அங்கம் வகிக்கின்றனர். முக்கிய பதவிகள் வகிக்கின்றனர்.

அவரது வெள்ளையான நட்பைப் போலவே பாசாங்குகளற்ற திறந்த மனங் கொண்ட அரசியல்வாதியாக அவர் கலைஞர்களிடம் – கவிஞர்களிடம் – தனிச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார்.

நாமறிய இந்த நாட்டில் பல அரசியல் கட்சிகளில் பிரபலமான மக்கள் தலைவர்களாகப் பலர் கடந்த காலங்களில் திகழ்ந்து வந்துள்ளனர்.

அமைச்சர்களாகவும் சிறந்த பேச்சாற்றல் மிக்கவர்களாகவும் நிர்வாகத் திறமையுள்ளவர்களாகவும் மக்கள் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் ராஜதந்திர மதிநுட்பம் செறிந்தவர்களாகவும் பலர் இருந்துள்ளனர். இன்றும் இருந்து வருகின்றனர்.

ஆனால் கவிஞர் அஷ்ர.:.ப் போல மூன்று தேசிய இனங்களையும் சேர்ந்த கலைஞர்களையும் ஒருங்கு சேர நேசித்த, அன்பு காட்டிய ஒரே ஒரு அரசியல் தலைவன் அஷ்ர.:.ப் அவர்கள் தான் எனத் துணிந்து கூறலாம்.

ஏனெனில் அவர் கவிஞர், மானுடத்தை நேசித்த – அதன் குறை நிறைகளோடு – உள்ளன்போடு விசுவசித்த ஒரே ஒரு அரசியல்வாதி அவர் என்றே கூறவேண்டும்.

எனவேதான் அவரது திடீர் மறைவைக் கேட்டு அவரது வீட்டில் அந்த அடைமழையிலும் குழுமியிருந்த கூட்டத்தில் பல்வேறு மொழிப்பட்ட, பிரதேசத்துக் கவிஞர்களையும், கலைஞர்களையும் காணக் கூடியதாக இருந்தது.

அவரது இறுதி அஞ்சலியிலும் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டு தமது துயரத்தை வெளிப்படுத்தினர்.

மொழிக்கு இணைக்கும் சக்தி உண்டு. அதைப்போலவே பிரிக்கும் சக்தியும் அதே மொழிக்கு உண்டு.

கவிமொழியின் ஆளுகைக்குட்பட்ட கவிஞர் அவர்கள் மானுடம் தழுவிய தனது அரவணைப்பால் நம்மையெல்லாம் இணைத்து நின்றார். நாமதனைப் புரிந்து கொண்டோம்.

35 வது ஆண்டு மலர்ப் பிரவேசம்

- ஆ. கந்தையா -

(30.08.2000 அன்று அறிவோர் கூடலில் இடம்பெற்ற மல்லிகை புத்தாயிரமாம் ஆண்டுமலர் பற்றிய விமர்சனக் கருத்தரங்கின் சாராம்சம்)

35 வது மல்லிகை ஆண்டு மலரைப் புரட்டுகின்றேன்.

எனக்குள் ஒரு வியப்பு, சிறு பத்திரிகை ஒன்று 35 வருடங்கள் எதுவித தடங்கலோ, பின்னடைவோ இன்றித் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது அதிசயம் மட்டுமல்ல, பிரமிப்புந்தான். உலகின் பல பாகங்களிலும் வெளிவந்த சிறு பத்திரிகைகள் பற்றி அசை போடுகின்றேன். அநேகமானவை இயற்கை மரணம் அடைந்த வரலாறு தெரிகின்றது.

சனரஞ்சகமான பத்திரிகைகளை வாசகர் எண்ணிக்கையே எடை போடுகின்றது. மேற்படி பத்திரிகைகளின் ஆசிரியன் வாசகனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் உத்திகளைக்கையாளுவான். சிறு பத்திரிகைகள் அவ்வாறு அல்ல. தேடலுக்குட்படும் அறிவுப் பசி கொண்ட வாசகனுக்காக வெளிவருபவை இவை எனவே வாசகர் எண்ணிக்கை குறைவு, பத்திரிகைகளின் இறப்பு வீதம் கூட

இலக்கிய ஏடுகளுக்கு யாழ் மண்ணில் வரவேற்பு மிகக் குறைவு எம்மவர்க்கு என்றும் எப்பொழுதும் காசுப் பெறுமானக் கணிப்பீட்டு மனோ நிலையுண்டு. மாம்பழத்தில் கூட நல்லவைகளை விற்றுப் பழுதடைந்தவைகளை மகிழ்ந்துண்ணும் பக்குவ நிலை அதிகம் உண்டு. இந்நிலையில் சிறு பத்திரிகையான மல்லிகை உயிர்த் துடிப்புடன் 35 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதும் புதுப் பொலிவுடன் தொடர்ந்து வெளிவருவதும் வியப்புக்குரிய தல்லவா?

ஆசிரியரின் மூன்ற கட்டுரைகளை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். இப்பத்திரிகையின் இயக்க சக்தியின் உந்து விசையைக் கண்டு கொள்கின்றேன். பத்திரிகைக்கு தீர்க்காயுள் என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி உணர்ந்து கொள்கின்றேன். கட்டுரைகளை வாசிக்கும் போது மல்லிகை ஆசிரியரின் ஆக்க சக்தியின் கீதம் காதுகளில் கேட்கின்றது. அவரது ஆவேசம் என்னை அதிர வைக்கின்றது. இப்படி ஒரு அனுபவமா? இப்படியான ஓர் அவலமா? இதனூடாகவா இம்மனிதன் இலக்கியம் படைத்தான்? மல்லிகை ஏட்டை வெளியிட்டான்?

ஆசிரியரின் மூன்று கட்டுரைகளும் கவிதைப் பிரவாகம், ஆத்மாவின் அடித்தளத்திலிருந்து வெளிவந்த அறை கூவல் ஆத்மாவில் கருத்தரித்து ஆத்மாவையே வெளிக் கொணர்வதே உண்மையான கவிதை என்பான், ஆர்னோல்ட். ஆசிரியரின் ஆத்மாவின் குமுறலை இம் மூன்று கட்டுரைகளிலும் நாம் காண முடியும். அவர் கண்ட, சந்தித்த அனுபவித்த எத்தனையோ நிகழ்வுகள் அங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியரின் கட்டுரைகளுக்கு அடுத்தபடியாக அரூபத்தின் ரூபம் நெஞ்சைத் தொடுவதாக இருந்தது. தருமு சிவராம் அவர்களது வரலாறு கதைபோல் சொல்லப்படுகின்றது. வசன நடையை ஆசிரியர் கவிதையாக்கிய சிறப்பை அவரது எழுத்தில் காண்கின்றோம். ஒரு அறிஞன் விசரன் என நாமம் சூட்டப்பட்ட அக்கிரமத்தைப் பார்க்கின்றோம். வாசித்து முடிந்தவுடன் எமது மனதுள் எழும் வேதனை சொல்ல முடியாதது. இவ்வாசிரியரது கட்டுரையால் மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை பெற்று நிற்கின்றது.

மலரில் 13 கவிதைகள் காணப்படுகின்றன. யாவும் சமகால நிகழ்வுகளின் வெளிப்பாடாகும். ஒரு கவிதை மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவைகளின் கருப்பொருட்கள் எம்மை, எமது பிரச்சினைகளை, எமது குறைபாடுகளைக் கூறுபவை. இவ்வகையில் அவை எம்மைத் தம்வசம் ஈர்த்து நிற்கின்றன. சில சொற்றொடர்கள் உதாரணமாக நிறுத்துங்கள் நரபலியை கடவுளின் இருப்புக்குக் கட்டடங்கள் தேவையில்லை இறந்த நாள் மறந்த உம்மா இருந்து நான் விட்டேன். பல கட்டை விரல்கள் பத்திரமாய் இருக்கு போன்றவை எமது நெஞ்சைத் தொடுவதுடன் கவிதைகளுக்கு ஒரு பொலிவை, தாக்கத்தை, செறிவைக் கொடுத்து நிற்கின்றன.

செவ்விந்தியன் குறிப்பிட்டதாகக் காலச் சுவட்டில் வாசித்த ஞாபகம் சிறு கதையில் ஈழத்தமிழர் பின்தங்கியிருப்பதும், கவிதையில் தமிழகம் ஈழத்தை விடப் பின் தங்கியிருப்பதாகக் கூறி (ஒரு வேளை அவர் கவிஞராக இருப்பதாலோ என்னவோ) இவற்றைத் தமிழகம் ஏற்காவிடத்து வரலாற்றுத் தவறை செய்த குற்றத்திற்கு அது ஆளாக வேண்டுமெனக் குற்றஞ் சாட்டுகின்றார். தமிழகத்தை விட நாம் சிறந்து நிற்கின்றோம்; சர்வதேசத் தரத்தை நாம் எட்டவில்லை என்பன போன்ற கூற்றுக்களெல்லாம் விமர்சகர்களது கணிப்பீடு. அவற்றை அவர்கள் பார்த்துக் கொள் ளட்டும். எழுத்தாளனது தொழில் எழுதுதல். அவன் விமர்சகனது தேவையைப் பூர்த்தி செய்ய புகுவானாயின் எழுத்தாற்றலை இழந்து விடுவான்.

மிகவும் பின்தங்கிய நாடுகளென முத்திரையிடப்பட்ட சிறப்பாக இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா நாட்டு எழுத்தாளர்கள் எவ்வாறு சர்வதேச தரத்தை எட்டினார்கள்? அருந்ததி ரோய் இந்திய ஆங்கிலத்தில் எழுதி எவ்வாறு சர்வதேச தரத்தை எட்டினார்? இதற்கெனவே அவர் ஒரு நாவலை மட்டும் தான் எழுதினார். இவ்வாறான எழுத்தா ளர்களெல்லாம் சர்வதேச தரத்தை எண்ணி எழுதவில்லை. இன்னுமொரு நாவலை என்னால் எழுத முடியுமெனத் தோன்றவில்லை. என அருந்ததி கூறியது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

மேற்படி எழுத்தாளர்களுக்குள் எழுத வேண்டுமென்ற தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அவர்கள் எதிர் கொண்ட சமூகப் பிரச்சனைகள் அவர்களைப் பேய்கள் போன்று பின்தொடர்ந்தன. ஆத்ம வேதனையில் துடித்தார்கள், எழுதினார்கள்.

இவர்களுக்கு இன்னுமொரு அனுகூலம் இருந்தது. இவர்கள் பல இலக்கிய வடிவங்களுக்குப் பழக்கப்பட்டிருந்தார்கள். பல மொழி ஆக்கங்கள் உடனுக்குடன் கிட்டின. புதுமையைப் புகுத்தவும் முடிந்தது. அருந்ததி ரோய் அவர்களது நாவலை வாசிப்பவர்கள் அவரது எழுத்தினூடாக அவரது இலக்கியப் புலமையைக் கண்டு கொள்வர்.

இம்மலரில் இடம் பெற்றிருக்கின்ற கவிதைகள் ஒரு வித வெறுமையைப் புலப்படுத்துகின்றன. எலியட் ஐரோப்பாவின் வெறுமையை அவலச் சுவையில் தந்தான். எமது கவிஞர்களும் சமூக விழுமியங்களின் சிதைவுகளை, உறவு களின் பிறழ்வுகளை, அரசியல் அயோக்கியத்தனங்களை வடித்துக் காட்டியுள்ளனர். இவைகள் யாவும் இன்றைய மனிதனின் ஆத்ம ஓலங்கள்தாம். இவற்றால் இவர்களது கவிதைகளில் ஒரு விரக்தி புகுந்துதவிடுகின்றது. இக்கவிஞர்களை நாம் காலத்தின் பிரதிநிதிகளாக தரமான கவிதைகளைத் தந்த கவிஞர்களாக ஏற்றுக் கொள்ள முடியும். உண்மையில் இவர்கள் யாவரும் நுட்பச் செழுமை பெற்ற கவிஞர்களா கவே விளங்குகின்றார்களேயன்றி காத்திரமான கவிஞர்களாகக் கொள்ள முடியுமா? என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வேண்டியதொன்றாகும்.

எழுதிவிட்டோமெனில் அவை சிறந்த படைப்புக்களாகி விடுவதில்லை. டோல்ஸ்ரோயின் அன்னா கரினினா பல முறைகள் வெட்டி எழுதிச் செம்மையாக்கப்பட்டதை நாம் மறந்து விடுவதற்கில்லை. அவ்வாறே தலைசிறந்த எழுத்தாளரின் படைப்பென்றால் அது தனித்துவமானது என்றாகிவிட்டது. ஒரு சில ஆக்கங்கள் காலத்தைவென்று நிற்கும் கவிஞனது செறிந்த உணர்வுகள் தன்னிச்சையாக்கப் பொங்கிப் பிரவாகமாகக் கரை புரண்டோடும் போது வடிவம், செறிவு, கருப்பொருள் என்பன தாமே இணைந்து நிற்கும்.

மேலைத்தேய இலக்கியம் செழுமையடைந்ததற்கு மேற்கூறிய காரணங்களும் துணை போயின. மேலைத்தேய வாசகனுக்கு உலகின் எல்லாப் படைப்புக்களும் கிட்டுகின்றன. எனவே அவனுக்கு எம்மை விடப் பல அனுகூலங்கள் உண்டு. ஆகவே தான் மரபுகளை உடைக்கவும், புதிய மரபுகளை ஏற்படுத்தவும் அவர்களால் முடிகின்றது. எமது படைப்பாளிகளும் பிற நாட்டு ஆக்கங்களை அறிந்திருப்பது அவசியம். இவைகள் கைவரின் செவ்விந்தியனது கூற்று நிசமாகும்.

இப்பணியை மல்லிகை முன்நின்று செய்ய முடியும், வேண்டும். இம்மலரில் ஒரு மொழிபெயர்ப்புக் கட்டுரையும், ஒரு மொழி ஆக்கக் கவிதையுமே இடம்பெறுகின்றன. சிறப்பாகச் சிறு கதைகள், கவிதைகள், மொழியாக்கம் செயல்பட்டுத் தமிழ் வாசகன் கவனத்திற்குக் கொண்டு வரல் வேண்டும். இன்றைய தலைமுறையினர் ஆங்கிலத்திற் புலமையற்றவர்களாக இருப்பதனால் இப்பணி அவசியமாகின்றது.

சிறுகதைகளைப் பார்ப்போமாயின் அநேகமானவை சமகால நிகழ்வுகளை யதார்த்தமாகக் காட்டுகின்றன. வரவேற்கத்தக்கது. மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அவைகளுக்குப் பின்புலமாக விளங்கும். அரசியல், சமூகக் காரணிகள், கணவன் மனைவி உறவுகளில் விரிசல்கள், பரம்பரை ஈவு, மனித அவலங்கள் என்பன காட்டப்படுகின்றன. கதை மாந்தர்கள் யாவரும் எம்முடன் ஒட்டி உறவாடும் தன்மை கொண்டு அல்லது எம்மைச் சுட்டி நிற்பவர்களாக விளங்குகின்றார்கள்.

நிகழ்புலம் சரியாக அமைந்து நிகழ்வுகளும் அர்த்தமுடையவையாக இருந்து விட்டால் சிறுகதை முழுமை பெற்றுவிட்டதெனச் சொல்வதற்கில்லை. இன்றைய சிறுகதை என்பது செறிந்த பல பரிமாணங்களைக் கொண்டிருக்கும் ஒரு இலக்கிய வடிவமாகும். எனவே இவற்றை திறனாய்வு செய்வதிலும் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. இம்மலரில் இடம்பெறும் கே.எஸ் சிவகுமாரனின் கட்டுரையில் நாசுக்காக இவைபற்றிச் சுட்டி நிற்பதை யாவரும் கருத்துடன் பார்க்கவேண்டும்.

திறனாய்வு கூட ஒரு வளர்ச்சியடைந்த அறிவியல் பார்வையாக மாறியுள்ள காலம் இது. படைப்பவனைவிடச் சுவைப்பவன் தான் தரம் பார்க்க வல்லவன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழில் தரமான திறனாய்வு நூல்கள் அரிதாகவே காணப்படுகின்றன. படைப்பாளியே பலஇடங்களில் திறனாய்வாளனாக விளங்குவது வேதனைக்குரியது. ரீ.எஸ் எலியட் ஒரு படைப்பாளியாகவும், திறனாய்வாளனாகவும் விளங்கியவர். படைப்பாற்றலைத் திறனாய்வு பாதித்தமை பற்றி அவர் கூறியிருப்பது எம்மவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டியதொன்றாகும்.

சிறுகதை பல நிகழ்வுகளைத் தனது தூண்களாகக் கொண்டு கட்டியமைக்கப்படுவது. இந் நிகழ்வு பல வெளிப்பாடுகள் மையப் புள்ளியாகிய கருப்பொருள் நோக்கிக் குவிய வேண்டும். அத்துடன் அவைகள் மையப்புள்ளிக்கு இன்றியமையாதவையாக இருக்கவும் வேண்டும். எனவே தேவையற்ற நிகழ்ச்சிகள், சொற்பிரயோகம், உரையாடல்கள், வர்ணனைகள் தவிர்க்கப்படல் வேண்டும். கதை நிகழும் பின்புலத்திற்கேற்றவாறு மொழி அமையவேண்டும். ஒரு பழுது ஏற்பட்டாலும் கதைக்கு ஊறு ஏற்பட்டுவிடும். அன்றியும் அதிகம் கூறாது மௌன மொழிமூலம் உணர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டப்படும்போது வாசகன் பல்வேறு படிமங்களைக் கதையில் கண்டு நிற்பான். இந் நிலையிலேயே ஆசிரியனது குறிக்கோள் எட்டப்படுகின்றது. ஆசிரியனின் பிரதி இப்பொழுது வாசகனது பிரதியாக மாறி விடுகின்றதென இவற்றையே நாம் கூறுகின்றோம்.

இவைகளைக் கொண்டு பார்க்குமிடத்து பல அம்சங்கள் கதைகளில் கைவரப் பெற்றிருப்பினும் வடிவக் குறைபாடும், மௌன மொழி ஆதிக்க மின்மையும் காணப்படுவது கவலைக் குரியது. தமிழர்களிடையே இயல்பாகக் காணப்படும் வரம்பு மீறிய கற்பனை வேகம் இதற்குக் காரணமோ தெரியவில்லை. பருவப் பெண்ணாகக் கண்டவன், வில்லை நெற்றிப் புருவமாகக் கண்டவன் எதைத்தான் சிக்கனமாகச் சொல்வான் கஷ்டம் தான்.

கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பிய இலக்கிய நண்பர்களைத் திருப்தி செய்ய ஆசிரியர் முயன்ற தன்மை தெரிகின்றது. அது தவிர்க்க முடியாதது தான். அவ்வாறே படைப்பாளிகளும் ஆசிரியர் கேட்டுவிட்டாரே என்பதற்காக எழுதிய தன்மையும் புலப்படுகின்றது.

ஆசிரியர் பல அம்சங்களைச் சேர்த்திருக்க வேண்டுமென எமக்குப் படுகின்றது. தரமான இலக்கிய மொழியாக்கங்கள், நாடகப் பிரதிகள், விமர்சனங்கள், பெண்ணியம் பற்றிய பெண்களின் படைப்புக்கள், சித்திரம் பற்றிய அறிமுகம், இவைகளுக்கு மேலாக ஏதாவது சிறுகதை பற்றிய திறனாய்வு என்பன இடம் பெறுதல் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு ஆரோக்கியச் சூழலை ஏற்படுத்தும் என நம்புகின்றோம். சிறுகதை பற்றிய விமர்சனம் ஆரம்பத்தில் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தும் காலப்போக்கில் இதுவே எதிர்பார்த்து ஏங்கிநிற்குமொரு பகுதியாகும்.

மொத்தத்தில் மல்லிகை ஆண்டு மலர் அப்பந்தலில் பிரவேசிப்பவர்களுக்கு மணம் தந்து கொண்டேயிருக்கும்.

ஒட்டாண்டிகள்

கவிஞர் ஏ. இக்பால்

தன்னிடம் மற்றவர்
தருவதைத் தவிரக்
கண்டது ஏது மில்லை!

1. உண்டது உடுப்பது
உறையுள் யாவும்
ஒண்டிய வாழ்வுடையோர்!

2. பல்லை இழிப்பதும்
பக்கம் சார்வதும்
பகை கொள்ளாதவர்கள்!

3. சேர்ப்பது எதற்கோ
சிந்தனை யுளதோ
ஆர்ப்பரிப் பேதுமில்லை!

4. ஒட்டாண்டி யாகவே
ஓடி யாடுவோர்
பாட்டாளி களேயல்ல!

5. இந்த இனத்தோர்
எந்தப் பயனையும்
பந்தமாய்க் கொள்ளவில்லை!

6. கந்தல் உடையும்
கசங்கிய உள்ளமும்
எந்த இலட்சியமோ!

7. பாகு பாடுகள்
நோகு மளவு
ஆகு மாவதல்ல!

8. ஊகித்தறிந்து
ஒற்றுமை சிதறும்
தாக மேதுமில்லை!

9. காலம் தள்ளுதல்
காட்டும் வழிகளை
நாளும் கொள்பவர்கள்!

ஏற்கச் சொல்லி எப்பவாவது கேட்டோமா?

- டொமினிக் ஜீவா -

கடந்து போன
ஆயிரமாயிரம்
நூற்றாண்டுகளாக
மேட்டிமைக் குடியினரே
உங்கள் கூட்டத்தினரது
சுயபுராண, சல்லாப வாழ்வின்
முகவரிகளை மட்டும் தான்
கடிவாளப் பார்வையுடன்
உங்களவர்களைக் கொண்டே
பழம் பெரும் இலக்கியங்களாக
ஆக்கித் தந்து
அதிலேயே திளைப்புற்றுக்
கிடந்தீர்கள்.
அன்று
நாங்களெல்லாம்
காணவத்தே போய்விட்டோம்!
உங்களின் குலக் கொழுந்துகளான
புலவர் பெருமான்களை
உருவாக்கி...உருவாக்கி
அவைகளை
சகலரினதும்
இலக்கியங்களாக
நம்பவும் வைத்தீர்கள்.
நாங்களோ
எங்கட ... எங்கட
ஆத்தும வெப்பியாரங்களை
மனப் பொச்சரிப்புகளை
எங்க பரம்பரைக்குக்
காலம் காலமாக
செய்து வந்த அட்டுழியங்களை
எங்க பிறவிக்குத் தெரிந்த பாசையிலே
எழுத்தில் இறக்கி வைக்க
இன்று -
நினைக்கிறோம்.
இதைச் சகிக்கவொண்ணாது
'இழிசனர் இலக்கியம்!' என
இழித்துரைக்கின்றனரே,
உங்களைச் சேர்ந்த
பழம் பஞ்சாங்கங்கள்!
உங்களது இலக்கியத்தில்
எங்களையும்
ஏற்கச் சொல்லி
எப்பவாவது
உங்களைக் கேட்டோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்காக
நீ கடைசியாய்
உச்சரித்த சொல்லை
உனக்காக நான்
உச்சரிக்கிறேன்
"என் நேசனே"

ஒரு பிரமாண்டமான
சப்தம் கேட்டது,
நீ தோன்றினாய்!

இலங்கை அரசியல்
மலை உச்சியில்
நீயொரு
பெரும் சப்தமாகவே ஒலித்தாய்,
சூரிய வெளிச்சமாய்
அந்தச் சப்தம் பரந்தது.

சகல துறை
ஞானங்களையும்
மூலப்பொருளாக்கிய
உன் முகத்தால்
இருள் சூழ்ந்து நின்ற
சில திசைகளில்
வெளிச்சத்தின் கீற்றுக்கள்,

உன் கருத்தியலுக்கு
உடன்படாத என் கருத்தியல்
நீ கருத்துக்கள் சொல்லும்
இயலுக்கு மட்டும்
சம்மதம் தெரிவித்தது

நீ முரண்பட்டாய்
நீ அடம் பிடித்தாய்
ஆனாலும் நேசனே!
நிமிர்விக் பிடி உனை
இறுக்கியே வைத்து இருந்தது.

அரசியல்வாதியே
உனக்காக நான்
எதையும் எழுதவில்லை.
ஆனால் கவிஞனே
இன்று உனக்காக
என் பேனா
கண்ணீரை மையாக்கி
எழுதுகிறது.
எந்தவொரு அரசியல்வாதியின்
மரணத்திற்கும்
கலங்காத என் இதயம்
உன் மறைவுக்காக
மட்டும் அழுகிறது.

மீண்டுமொரு
பிரமாண்டமான சப்தம்
"அரநாயக்க"
மலைத் தொடரின் உச்சியில்
நான் என்ற நீ மறைந்தாய்.

நேசனே!
நீ பதித்து வந்த
சுவடுகள் மறைக்கப்படலாம்
ஆனாலும்,
"நான் எனும் நீ" யினால்
நீ வாழ்வாய்
எங்களோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை அர்ப்பணிப்பு, உழைப்புப் பசளையில் வளர்வது,
அதன் வளர்ச்சிக்கு எமது பாராட்டுக்கள்!

Dr. Pon. Sakthivel
Director & Freelance Journalist

Bright Book Centre (Pvt) Ltd.
5-27, First FLoor, P.O.Box : 162,
Colombo Central Super Market Complex
Colombo - 11. Tel : 434770

கனவாய் அவதாரம்

கே. விஜயன்

சுவர்க்கடிகாரம் நான்கு முறை ஒலித்து ஓய்ந்தது. கந்தசாமி பதறியடித்துக் கொண்டு எழும்புகிறார்.

'கடவுளே' 'கடவுளே' மணி நாலாயி ற்றே என்று குழறிக் கொண்டு 'பட்' 'பட்' டென நெற்றியில் நாலு குட்டுகளுடன் குளியலறைக்கு தாவுகிறார்.

குழாயைத் திறந்தார். சள சள வென பீச்சியடித்த தண்ணீரில் காக்காய் குளியல்.

மனிதவுரிமை சங்கத்தின் கூட்டம் நாலரை மணிக்கு. சமூகசேவா மினிஷ்டர் திருமதி... வருவதாகத் தகவல், கூட்டத்தில் பேசுவதற்காக அருமையான சொற்பொழி வொன்றினை தயார் செய்து ஒத்திகை செய்து கொண்டிருந்த போது தான் மத்தி யானச் சாப்பாட்டின் களைப்பு காரணமாக கோழித்தூக்கம் குபீரென தாவி அணைத் துக் கொள்ள அசுரத் தூக்கத்தில் அயர்ந்த விட்டார். நித்திரை மோகினியின் சூழ்ந்த அணைப்பில் நேரம் பறந்தது மின்னல் வேகத்தில் 'சா எழுதிய சொற்பொழிவு முழுவதையும் நினைவில் பதித்து வைக்க முடியவில்லையே.....'

மனத்திற்குள் அலட்டல், கவலை புழுவாய் நெளிந்தது.

மனுஷி வீட்டில் இருந்திருந்தால் எப்படி யென்றாலும் எழுப்பி விட்டிருப்பாள். அவ ளும் சமையக்கார பெட்டையை கூட்டிக் கொண்டு ஷொப்பிங் போயிட்டாளே... 'கண்டறியாத ஷொப்பிங்' மனத்திற்குள் கடுகடுப்பு சுடு எண்ணையில் கடுகாய் படபடக்கிறது.

குழாய் பீச்சியடிக்கும் நீரில் நனைந்த வாறே கண்ணாடி முன் நின்று முகத்தை அஷ்ட கோனலாக நெளித்து, உதடுக ளைப் பிதுக்கி, கண்களை உருட்டிப் பிரட்டி சொற்பொழிவு நிகழ்த்துவதுப் போல் நாலு வார்த்தைகளை உதிர்ந்தார்.

மௌன உச்சரிப்பு,

ஊமை கைகால்தான் ஆனாலும் சில வார்த்தைகள் முண்டியடித்துக் கொண்டு 'நான் மினிஷ்டர்' என வெளியில் எம்பிக் குதித்தன. குஞ்சுத் தவளைகள் சேற்றிலிரு ந்து எம்பியெம்பிப் பாயுமே அதுபோல.

'யாரேனும் கேட்டு விட்டார்களோ'

மனதில் அச்சம் சிறு நீர்க்குமிழி யென கிளர்ந்து விரிந்து சனலமிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சே' அப்படி ஒன்றுமில்லை.

நெஞ்சைத் தட்டி சாந்தப்படுத்திக் கொண்டு தன்னையே கிண்டலடிப்பது போல மென்மையாகப் புன்னகைக்கிறார்.

குழந்தையின் புன்சிரிப்பு.

என்றாலும் ஓர் அச்சம் புழு வென நெளிந்து ஊர்ந்திட பாத்ரூம் கதவை சட்டெனத் திறந்து எட்டிப் பார்க்கிறார்.

யாரையும் காணவில்லை

'அட மனுஷியும், வேலைக்காரப் பெட்டையும் ஷொப்பிங் பொய்டினம் தானே'

நினைவு மீண்டவராகப் புறு புறுத்து விட்டு மடாரென கதவை மூடுகிறார்.

'ஒனர் மினிஷ்டர் இந்த நாட்டின் சிறுவர் சிறுமியர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவை அனைத்தையும் இல்லாதொழிக்க சட்ட திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.....

பாதத்ரூமிற்குள் மறுபடியும் சொற் பொழிவு ஒத்திகையின் அரங்கேற்றம்.

கந்தசாமி தபால் அதிபராகவிருந்து ஓய்வு பெற்றவர். பிள்ளைகள் மூவரும் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் ஆகி விட்டதன் பின்னர், கந்தசாமி சமதர்மினி அகிலாண்டேஸ்வரி சமேதராய் கொழும்பு வாசியாகிவிட்டார்.

மாதத்தின் ஒழுங்கான வருமானம் பென்ஷன் மட்டும் தான். வீட்டு வாடகை அதனை அப்படியே வாறியெடுத்துக் கொள்கிறது.

எப்படியோ அவ்வப்போது பிள்ளைகளிட மிருந்து பறந்து வரும் அமெரிக்க டாலர்கள் சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்து ஆசனத்திலிருந்து நழுவி விழாமல் காப்பாற்றி விடுகின்றன.

என்றாலும் என்ன? ஆண்டியின் தரித்திரம் ஐயனே அறிவான்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும்

என்ன செய்யலாம்?

யோசனை! யோசனை! யோசனை!

சாய்வு நாற்காலியில் கைகளை தலைக்கு மூட்டாக்கி கண்களை மூடிக்கொண்டு தபசுநிலை. இப்படியே ரிட்டையர்ட் தபால் அதிபரின் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது.

ஒரு நாள்...

முன்னேறுவதற்கு என்ன வழி என்று ஆலோசனை கேட்டு சமதர்மினியின் காதுகளில் குசுகுசுத்தார்.

'என்னப்பா முன்னேற்றம், கண்டறியாத முன்னேற்றம். வயது 65 ஆகுது. சிவனே என்று போய்ச் சேருகிற வழியைப் பாருங்கபா' இது அகிலாண்டேசுவரியின் தாழிப்பு. அகிலாண்டேசுவரி ஒன்றும் மோச மான பெண்மணி அல்ல. என்றாலும் எதை எப்பொழுது பேசுவது என்பதை புரிந்து கொள்ள வேண்டாமோ.

காலையிலிருந்தே அம்மாவுக்கு ஜல தோஷமும் வயிற்றுக் குத்துமாகவிருந்தது. இவற்றின் அவஸ்தையில் நெளிந்து கொண்டு சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதுதான் ஆலோசனைக் காக உள்ளே நுழைந்தாள்.

'என்னப்பா, முருங்கைக்காய் சொதி. கமகமக்குது என்ற கிண்டலோடுதான் உள்ளே நுழைந்தார். வாங்கிக் கட்டிக் கொண்டார்.

என்றாவும் தன் முயற்சியை கந்தசாமி கைவிடவில்லை. மனிதவுரிமைக் குழுவொன்றுடன் ஒட்டிக்கொண்டார்.

மாதம் இருமுறை என்றாலும் பொதுக் கூட்டம், கலந்துரையாடல், காரசாரமான விவாதம், பல்வேறு விவகாரங்கள் குறித்து அலசல். பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுதல், கலைஞர் முதல் அரசியல்வாதிவரை எவராவது மண்டையைப் போட்டுவிட்டால் உடனே அநுதாப அறிக்கை விடுதல் என மனிதவுரிமைக் குழுவின் செயல்கள் சுறு சுறுப்படைந்தன. சில பத்திரிகை ஆசிரியர் களையும் பிடித்துக் கொண்டார். ஓர் அறிக் கையை அனுப்பியதன் பின்னர் தொடர்ச்சி யாக நாலு கோல்களையும் அடித்துவிட்டு 'அவசரம்' என அவரையும் உசுப்பிவிட்டு எப்படியோ அறிக்கையை பிரசுரித்து விடுவார். பத்திரிகைகளில் அடிக்கடி பெயர் பிரசுரமாக சுற்று விட்டாரத்தில் ஐயாவைக் கண்டதும் கும்பிடுதல்கள் அதிகரித்தன.

பொதுக்கூட்டம் நடைபெறும் மண்டபம் பொதுமக்களால் நிறைந்து பேரிரைச்சலுடன் காணப்படும் என்ற மனவுடன் சென்றவருக்கு பேரிடி.

நாலைந்துபேர் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் கழக உறுப்பினர்கள்.

'என்னடாப்பா என்ன விசயம்?'

கந்தசாமி போட்ட சத்தத்தில் 'கொட்டாவிகள்' பதைத்து சிதறின.

'கூட்டம் நடத்த முடியாது ஐயா!' செயலாளர் பையன் தலையை சொறிந்து கொண்டு முணங்குகிறான்.

'ஏன்? என்ன விசயம்?'

'மினிஷ்டர் வரமாட்டாராம்'

'யாரடா சொன்னது'

'நடேசன்தான்'

'நடேசனோ, அவன் தானே கூட்டிக் கொண்டு வாறனெண்டு சொன்னவன். இப்ப என்னவாம், கூப்பிடு ஆளை'

'அவன் வர இல்லை சார், மெசேஜ் ஒன்று அனுப்பியிருக்கிறான்'

கந்தசாமி இடிந்து போனார்.

◆◆◆◆◆

சாய்வு நாற்காலி...

கைகளை பின்னால் மூட்டுக் கொடுத்து, கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்ந்து கிடக்கிறார் மனிதவுரிமைக் குழுத் தலைவர் கந்தசாமி.

மனத்தில் விசனம்.

சமூக சேவை அமைச்சரின் அபிமானத்தை பெற முடியவில்லையே என்ற துயரம். உலக சிறுவர்கள் படுகின்ற துயரத்தை எத்தகையதொரு அற்புதமான சொற்பொழிவாக அவர் எழுதியிருந்தார். சா, பொன்னான வாய்ப்பு நழுவி விட்டதே'.

வாசலில் சந்தடி.

ஷொப்பிங் முடித்து விட்டு அகிலாண்டேசுவரியும் வேலைக்காரச் சிறுமியும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சிறுமி பாரம் தாங்க முடியாமல் பார்சல் ஒன்றை கை தவற விட்டு விட்டால் போலும். அகிலாண்டேசுவரி திட்டுகிறாள்.

'ஏண்டி, கழுத இதை தூக்கமுடியவில்லையே, உனக்கு' மனிதவுரிமைக்குழுத் தலைவரின் கண்கள் திறந்தன.

விழித்துப் பார்கிறாள். 'என்னது பார்சலை கீழே போட்டுட்டாளா' நெஞ்சில் சினம் தீயாக எழுகிறது. பல்லை நெரித்துக் கொண்டு ஓடி சிறுமியின் தலைக் கூந்தலை பிடித்து மடால் மடாலென காலால் உதைக்கிறார். சிறுமி வேதனையில் அலறுகிறாள். ஐயோ விடுங்கோப்பா என தாவிய அகிலாண்டேசுவரியின் செவிகளில் 'இந்த சனியண்ட தரித்திரம் தான் மினிஷ்டரை பார்க்க முடியாது போயிட்டு' என்ற கணவரின் அரட்டல் சப்தம் விழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைப்பந்தல்
அடுத்த வெளியீடுகள்

1. நானும் எனது நாவல்களும் — செங்கை ஆழியான்
2. கார்ட்டூன் ஓவிய உலகில் நான் — சிரித்திரன் சுந்தர்
3. எழுதப்பட்ட அத்தியாயங்கள்
4. கிழக்கிலங்கைக் கிராமியம்

வெளிவந்து விற்பனையாகின்றன!

பத்ர பிரகூத்திய
சிங்கள மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

டொமினிக் ஜீவா சிறுகதைகள்
50 சிறந்த சிறுகதைகளின் தொகுப்பு நூல்

பரபரப்பாக விற்பனையாகின்றது!

எழுதப்படாத கவிதைக்கு
வரையப்படாத சித்திரம்

இலங்கை வானொலியின் இனிய பெண் அறிவிப்பாளர்

- தம்பிஐயா தேவதாஸ் -

அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் பெண்களும் சாதனைகள் படைத்து வருகிறார்கள். அந்த வகையில் ஒலிபரப்புத் துறையிலும் பல பெண்கள் முன்னணியில் நிற்கிறார்கள். இவர்களில் திருமதி. இராஜேஸ்வரி சண்முகத்தை மிகவும் விசேடமாகவே குறிப்பிட வேண்டும்.

கவிக்குயில் என்றால் சரோஜினி, கானக்குயில் என்றால் சுப்புலட்சுமி, இசைக் குயில் என்றால் சுசீலாவும், லதாமங்கேஷ் காரும், சின்னக்குயில் என்றால் சித்திரா என்று அமைவதை நாம் தெரிந்து கொண்டு விடுவோம். இந்தக்குயில்களி டையே வானொலிக் குயில் ஒன்றும் இருக்கிறது. அது ஒரு இலங்கைக் குயில். அதுதான் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் அவர்கள்.

இலங்கை வானொலி வர்த்தக சேவையின் "பொங்கும் பூம்புனல்" மூலமும் கொழும்பு சர்வதேச ஒலிபரப் பின் "பொதிகைத் தென்றல்" மூலமும் இலங்கை இந்திய நேயர்களை மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகில் வாழுகின்ற அனைத்து தமிழ் ரசிகர்களையும் தன் இனிய குரலால் கவர்ந்து வந்தவர்தான் இந்த ராஜேஸ்வரி சண்முகம்.

கொழும்பில் பிறந்து வளர்ந்த திருமதி. ராஜேஸ்வரி சண்முகம் கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர். 1952ஆம் ஆண்டு வானொலிக் கலைஞராகத் தனது ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்தவர். 1971ஆம் ஆண்டு நிரந்தர அறிவிப்பாளராக நியமனம் பெற்று முதலாந்தர அறிவிப்பாளராக உயர்ந்து அண்மையில் ஓய்வு பெற்றார். வானொலி நிலையத்திலிருந்து ஓய்வு பெற்று விட்டாரே தவிர, அவரது இனிய குரல் இன்னும் வானொலிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. அவர் வானொலி நிலையத்தில் சேவையாற்றிய போது செய்த சாதனைகள் மிக அதிகமே.

திருமதி ராஜேஸ்வரி நாடகத்துறை மூலமே முதன் முதலில் கலைத்துறைக்கு அறிமுகமானவர்.

பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் இவர் கண்ணகியாகத் தோன்றி மேடை ரசிகர்களை அதிர வைத்தார். எஸ்.எம். ராமையா எழுதிய "விடிவெள்ளி" என்ற நாடகமே இவர் முதன் முதலில் நடித்த வானொலி நாடகமாகும். சில்லையூர் செல்வராஜன் எழுதிய "சிலம்பின் ஒலி" என்ற தொடர் நாடகத்தில் நடித்துப் பாராட்டுப் பெற்றவர். வானொலி நாடகங்களைப் போலவே உரைச்சித்திர மாத நிகழ்ச்சிகள் எல்லாம் இவர் குரலால் சிறப்புப் பெற்றன.

இலங்கையில் தயாரான பல தமிழ்படங்களின் கதாநாயகிகள் வாயசைத் தனரே தவிர, அவர்களில் பலருக்கு ராஜேஸ்வரி சண்முகமே குரல் வழங்கியிருந்தார். வி. எஸ்.துரைராஜா தயாரித்த "குத்துவிளக்கு" அவற்றுக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

ஒலிபரப்புத்துறையில், வானொலி நாடகங்கள், நிகழ்ச்சி அறிவிப்புக்கள், விளம்பர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளை தயாரித்து குரல் கொடுத்த போதும் கொழும்பு சர்வதேச ஒலிபரப்பில் இவர் தயாரித்து வழங்கிய "பொதிகைத் தென்றல்" என்ற நிகழ்ச்சியே இவருக்கு பெரும் புகழை வாங்கிக் கொடுத்தது. இந் நிகழ்ச்சித் தொடர் 150 வாரங்களுக்கு மேல் தொடர்ந்து ஒலித்தது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சி தமிழ்நாட்டிலுள்ள சாதாரண நேயர்களை மட்டுமன்றி அங்கேயுள்ள பேராசிரியர்களையும் கவர்ந்து விட்டது. ஏன் கவிஞர் வைரமுத்துவை பேசவைத்து விட்டது. அவர் ராஜேஸ்வரிக்கு பாட்டினாலேயே பாராட்டுப் பத்திரம் அனுப்பி இருந்தார்.

"வசந்தத்தில்தான் குயில் கூவுமாம். இந்த வானொலிக் குயிலுக்கு வருடமெல்லாம் வசந்தமாகவே திகழ வாழ்த்துகிறேன். வாழ்த்துக்களோடு வைரமுத்து" என்று பாட்டு எழுதி அனுப்பினார். ராஜேஸ்வரி சண்முகத்தின் மணி விழாவுக்காக கவிஞர் வைரமுத்து அனுப்பிய மணியான வாழ்த்துக் கவிதை அது.

இவருக்குக் கவிஞர்கள், ரசிகர்கள் மட்டுமல்ல, சில நிறுவனங்களும் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன. 1987 இல் அமைச்சராக இருந்த செ.இராசதுரை இவருக்கு "மொழிவளச் செல்வி" என்ற பட்டத்தை வழங்கினார். 1992இல் சாஸ்தா பீடம் "வாசிக கலாபமணி" என்ற பட்டத்தை வழங்கியது. 1994இல் இந்து கலாசார அமைச்சு "தொடர்பியல் வித்தகர்" என்ற பட்டத்தை வழங்கியது. 1995இல் இந்தியாவின் தென் பொதிகைத் தமிழ்ச் சங்கம் "வானொலிக் குயில்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

"இந்தப் பட்டங்களைவிட நேயர்களின் உள்ளங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றனவே வாழ்த்துப் பட்டங்கள்" அவை தான் என்னை மகிழ்வடையச் செய்கின்றன. எந்த நிகழ்ச்சியானாலும் அர்ப்பணிப்புச் சிந்தையுடன் கடமைபுரிந்தேன். எனது குரல் இறைவன் கொடுத்த வரம்' என்று கூறும் ராஜேஸ்வரி தான் தயாரித்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் கேட்கத் தவறுவதேயில்லையாம்.

திருமதி ராஜேஸ்வரியின் குடும்பமே ஒரு கலைக் குடும்பமாகும். கணவர் சண்முகம் யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவில் பிறந்தவர். அரசாங்க உத்தியோகத்தரான இவர் ஒரு அறிவிப்பாளராகப் பல வானொலி நாடகங்களை எழுதினார். சில சிங்களப் படங்களின் மூலக்கதை இவருடையதே.

மகள் வசந்தி இலங்கை வானொலியில் தயாரிப்பாளராகக் கடமையாற்றி இப்பொழுது திருமணம் முடித்து இந்தியாவில் வாழுகிறார்.

மூத்த மகன் சந்திரமோகன் பிரபல பாடகர். இளைய மகன் சந்திரகாந்தன் சுவர்ணவாகினியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

இவர்களைப் போலவே திருமதி ராஜேஸ்வரி சண்முகமும் எமது ஒலிபரப்புத்துறைக்கு மேலும் சேவை செய்ய வேண்டும் என்று நாமும் வாழ்த்துகிறோம்.

நமது எழுத்தாளர் 'நந்தி' தம்பதியினரின் மகள் தெய்வி அவர்களுக்கும் திரு.க. கதிரவேலு தம்பதியினரின் மகன் தபோதரன் அவர்களுக்கும் சமீபத்தில் கொழும்பில் இனிதே திருமணம் நடைபெற்றது. நண்பர்களும் இலக்கிய நெஞ்சங்களும் நேரில் வந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தினர். மல்லிகையும் இவ் வாழ்த்தில் கலந்து கொள்ளுகின்றது.

- ஆசிரியர்

ஒரு பிரதியின் முணுமுணுப்புக்கள்

- மேமன் கவி -

1.

இன்று கலை இலக்கியம் ஓர் பல மான ஆயுதமாக மாறிக் கொண்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டுகளில் இல்லாத அளவுக்கு கலை இலக்கியங்கள் மக்களைச் சென்று அடையும் வழிகள் பெருகி உள்ளன. அதாவது, வெகுசனத் தொடர் சாதனங்களின் பெருக்கம் தான் இதற்குக் காரணம் எனலாம். ஆனால், இந்த ஊடகங்கள் ஆத்ம சுத்தமான கலை இலக்கியங்களைப் பயன்படுத்துகின்றனவா? அல்லது தங்கள் வளர்ச்சிக்கான ஒரு மூலப் பொருளாக கலை இலக்கியங்களைப் பயன் படுத்துகின்றனவா? என்ற சந்தேகமான கேள்வி எழத்தான் செய்கிறது. ஊடகங்களைப் போன்று சில அமைப்புக்களும் கலை இலக்கியங்களைத் தங்கள் வசதிக்காகப் பயன்படுத்திக் கொண்டு, தம்மை வளர்த்துக் கொண்டிருப்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது. அதைவிட்டு அவர்களது அசல் முகங்களை இனங் கண்டு கொள்ளாமல், அவை தம் வெளிப்பாடுகளில் நமக்குப் பிடித்த அம்சங்கள் இருக்கின்றன என்பதற்காகப் பூரித்து போய் அவை தம்மைப் பாராட்டுவது, அவர்களது போலித்தனங்களுக்குத் துணை போவது போலாகிவிடும் என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது.

2.

இந்தக் குறிப்புகள் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது லண்டன் பி.பி.ஸி. தமிழோசையில் தமிழக எழுத்தாளர் திலகவதியின் பேட்டியின் முதற் பகுதி கேட்கக் கிடைத்தது. அப்பேட்டியைக் கேட்ட பொழுது எனக்குள் சில சிந்தனைகள் எழுந்தன.

ஒன்று, முன்பெல்லாம் தமிழக எழுத்தாளர்கள் எழுதும் ஆய்வுகளிலோ, கொடுக்கும் பேட்டிகளிலோ இலங்கைப் படைப்பாளிகளைக் குறிப்பிடுவதே இல்லை. இப்படிக் குறிப்பிட்டாலும், நான்கு ஐந்து பேர்களை, அவர்கள் தனிப்பட்ட முறையில் தெரிந்து வைத்து இருப்பவர்களையே குறிப்பிட்டு வந்துள்ளார்கள். அதைப் பற்றிச் சர்ச்சைகள் எழுந்த பொழுதெல்லாம் தங்களுக்கு விபரங்கள் கிடைப்பதில்லை என்று சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் சமீப காலமாக அப்படியில்லை. நம் படைப்பாளிகளைப் பற்றி விலாவாரியாக குறிப்பிட்டு வருகிறார்கள். அன்று கிடைக்காத தகவல்கள் இன்று எப்படிக் கிடைக்கின்றன? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. உண்மை அதுவல்ல. அன்று நம்மைப் பற்றிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. இன்றைய தேவையின் நி[illegible]பந்தத்தில்தான் நம்மவர்கள் சொல்லப்ப[illegible]டுள்ளார்கள். அதிகம் ஏன்? தமிழகத்தில் நடக்கும் மாநாடுகளில் எல்லாம் அந்த மாநாடுகளின் தீர்மானங்களில் நாம்தான் முக்கியத்துவம் பெற்று இருப்பதையும் இங்கு நினைவு படுத்த வேண்டி இருக்கிறது. மேலும் திலகவதியின் பேட்டியில் லஷ்மியின் எழுத்துக்களையும் ராஜம் கிருஷ்ணனின் எழுத்துக்களையும் ஒப்பிட்டு பேசுகையில், அதிலும் குறிப்பாக லஷ்மியின் எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்களைப் பற்றிப் பேசும் பொழுது நமது மெகா தொலைக் காட்சி நாடகங்கள் (அது என்ன? நமது மெகா தொலைக்காட்சி நாடகங்கள் என்று நான் குறிப்பிடுவது உங்களுக்குக் குழப்பமாக இருக்கும். என்ன செய்வது? செட்லைட் அருளாலும் நமது சக்தி டீ.வியின் அருளாலும் இந்திய தமிழ் தொலைக்காட்சி நிலையங்கள் நமது தொலைக்காட்சி நிலையங்களாக மாறிவிட்டமையால் அப்படி சொன்னேன்)

குடும்பம், ஆலயம், வாழ்க்கை வரையிலான மெகா தொலைக்காட்சி நாடகங்கள் லஷ்மிகரமான பல பெண் பாத்திரங்களைப் படைத்து அளித்து பெண் அடிமைத்தனத்தை இன்னும் ஆழமாக வளர்க்கும் பணியினை உணார்ச்சிகரமாக மேற்கொள்கின்றன. அப்படியும் தப்பித் தவறியும் சத்யா (இதுவும் புதிதாய் சக்தி டீ.வியில் ஆரம்பமாகி இருக்கும் தொடர் நாடகம். அதன் கதாநாயகிதான் சத்யா என்ற பெண் பாத்திரம்) போன்ற லஷ்மிகரமான பெண்களிலிருந்து வேறுபட்டு ஒருத்தி நமக்குத் தெரிய வந்தால், அவளது பக்கத்தில் லஷ்மிகரமான குணங்கள் கொண்ட, சத்யாவின் மீறல்களை ஏற்றுக்கொள்ளாத லஷ்மிகரமான முறையில் வாழ சத்யாவுக்கு உபதேசம் பண்ணுவாள். இப்படிதான் பெண் அடிமைத்தனம் சின்னத்திரையில் விரியும்.

எந்தவொரு தொலைக்காட்சி நாடகத்திலும் பெண் இனத்தின்மீது சமுதாயம் விதித்து இருக்கும் கட்டுப்பாடுகளை உடைத்துக் கொண்டு வெளியே வரும் பெண்ணை காண முடியாது. (விதிவிலக்காக பாலு மகேந்திராவின் கதை நேரப் பெண் பாத்திரங்களை சொல்லலாம்) லஷ்மித்தனமான எழுத்துக்கள் இன்னும் வெவ்வேறு பெயர்களில் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவைக்கு அப்பால் சின்னத்திரை வழியாகப் பெண் அடிமைத்தனத்தின் கருத்தியல் பலமான ஒரு வளையத்தை உருவாக்கித்தான் உள்ளது என்பதை நாம் அவதானிக்கத் தவறக்கூடாது.

3.

அண்மையில் கொழும்பில் தேசிய இன ஒற்றுமைக்காக மொழியாற்றலைப் பயன்படுத்திய சிங்கள, தமிழ், முஸ்லிம் அறிஞர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பெருவிழா நடைபெற்றது. மனசுக்குச் சந்தோஷமாக இருந்தது. இவ்விழாவில் டொமினிக் ஜீவா, எம். எஸ்.எம். அயூப், எம்.எச்.எம்.ஷம்ஸ், ரீ.கனகரத்தினம், அகமட். சம்சாத் பேகம், நிஸார் என் காசிம், சுந்தரம் சௌமியன் ஆகிய தமிழ், முஸ்லிம் அறிஞர்கள் இவ்விழாவில் கௌரவம் பெற்றது மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதற்கு அப்பால் டபிள்யூ. ஆதர் ஜோன் பர்ணாந்து, வஜிர பிரபாத் விஜேசிங்க, கலாசூரி கே.என்.சீ பீரிஸ் விஸ்வநாத் வஜிரசேன ஆகிய சிங்கள அறிஞர்களும் கௌரவம் பெற்றார்கள். உண்மையில் தமிழ், முஸ்லிம் அறிஞர்கள் கௌரவம் பெற்ற பொழுது எனக்கு ஏற்பட்டபூரிப்பை விட பன்மடங்கான பூரிப்பு சகோதர சிங்கள அறிஞர்கள் தமிழுக்கான கௌரவத்தைப் பெற்ற பொழுது ஏற்பட்டது. இத்தகைய சிங்கள அறிஞர் தொகை அளவிலும் மனசளவிலும் உருவாகி இருந்தால் இந்த இனிமையான தேசத்து ஆயிரக் கணக்கான அழகிய உயிர்களை நாம் இழந்திருக்க மாட்டோம் இல்லையா? சிறப்பான இவ்விழாவில் இரண்டு குறைகள். ஒன்று, அரச விழாக்களில் தமிழ் அறிவிப்பாளர்களாக பணியாற்றுபவர்களின் நிலைமை தர்மசங்கடமானது. ரொம்பவும் பயந்த நிலையிலேயே அவர்கள் பணியாற்ற வேண்டியுள்ளது. இவ்விழாவிலும் அந்த நிலைமையை இவ்விழாவில் தமிழ் அறிவிப்பாளராக பணி செய்த பெண்மணியிடமும் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை மொழி பெயர்ப்பாளராக பணி செய்த ராகுலனிடம் காணப்பட்ட நிமிர்வும் தெளிவும் பாராட்டும் விதத்தில் இருந்தது. இரண்டாவது குறை அவ்விழாவின் பேனரில் காணப்பட்ட தமிழ் வாசகங்களில் மொழி என்று இருக்கவேண்டிய சொல் மெழி என்றாக இருந்ததுதான். மற்றபடி இந்த விழா சிறப்பானதுதான்.

நாவிதர் சங்கம்

முல்க்ராஜ் ஆனந்த்
தமிழாக்கம்: கே. கணேஷ்

நவீன இந்தியாவை உருவாக்கும் சிற்பிகளில் எங்களுர் நாவிதப் பையன் சாந்துவும் ஒருவன். அவன் செய்த தொண்டு சரித்திரத்தில் இடம்பெறாமல் போகக் கூடுமாதலால், அதை இங்கே நான் குறித்து வைக்கிறேன். அவ்விதம் அவனை நான் மதிப்பதற்குக் காரணம், அவனும் அறியாமல் அவன் புரிந்த ஒரு சின்னக் காரியம் தான். ஆயினும், நம் தலைவர்களைப் போல் தன்னைப்பற்றி அவன் பிரமாதமாக எண்ணிக் கொள்வதில்லை.

துருத்திய வயிறு வெளியில் தெரியக் கந்தை கட்டித் திரிந்த நாள் முதல் சாந்துவை எனக்குத் தெரியும். அந்த காலத்தில் கிராமச் சந்து பொந்துகளில் சேற்றில் புரண்டும், சிப்பாய் போல் வேடம் தரித்தும், விளையாட்டுக் கடைகள் வைத்தும், நாங்கள் சந்தோஷித்திருப்போம்.

சாந்து என்னை விட ஆறு மாதம் பெரியவன். அதோடு எல்லா வி'யங்களிலும் முன்னாகவே நிற்பான். குளவி பிடிப்பதில் மகா சூரன். கிணற்றுப் படிக்கட்டில் உட்கார்ந்து தண்ணீர் குடிக்கவரும் குளவியை நான் பிடிக்க முயற்சித்தால் அது என் கன்னங்களைக் கொட்டிவிடும். அவனோ அதைப் பிடித்து, அதன் வாலிலுள்ள விஷத்தைக் கக்க வைத்து, சிறு கால்களை மெல்லிய நூலால் கட்டிப் பறக்கவிடுவான். இதேபோல் அவன் எல்லா விஷயங்களிலும் சமர்த்தனாதலால், நான் அவன் கூடவே திரிவேன். நான் பெரியவனான பின்னும், அவன் கெட்டிக்காரன் என்பதே என் எண்ணம். ஏனெனில், அவனைப்போல் விசித்திர வேலைப்பாடு நிறைந்த சிறந்த காற்றாடி, என்னால் பறக்கவிட முடியாது. ஆனால் பள்ளிக்கூடப் பாடங்களில் என்னைப்போல் அவனுக்குக் கணக்குப் போட வராது. ஒருவேளை் அவன் தகப்பன் தன் பரம்பரை நாவிதத் தொழிலை இவனுக்கும் பழக்கியதால், வீட்டில் செய்யக் கொடுக்கும் கணக்குகளைக் கவனிக்க நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், என்றைக்கும் என்னைவிட நன்றாகப் புத்தகத்திலுள்ளதை மனப்பாடமாக ஒப்புவிப்பான். அதோடு, அவன் வசனங்களைப் படிக்கும்போது, பாடுவது போலவே இருக்கும்.

சாந்து உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கையில், நான் சம்பளம் கொடுத்துப் படிப்பதில் என் அம்மாவுக்கு மிகுந்த வருத்தம். மேலும், கீழ்ச்சாதி நாவிதப் பையனோடு சேர்ந்து விளையாடக்கூடாதென்றும், நம் உயர்ந்த சாதி ஆசாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும், அவள் என்னிடம் அடிக்கடி கூறுவாள். என் மூதாதையர்களிடமிருந்து எவையேனும் குணங்களைப் பெற்றேனோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், நான் உயர்ந்தவன் என்ற எண்ணத்தை மட்டும் நிச்சயமாகப் பிதுரார்ஜிதமாகப் பெறவில்லை. அம்மா என் நெற்றியிலும் இடும் நாமமும், உடுத்திவிடும் நெருக்கமான வெள்ளைக் காற்சட்டையும், சரிகை போட்ட சப்பாத்துக்களும், பட்டுத் தலைப்பாவும், எனக்குத் துளி கூடப் பிடிப்பதில்லை. அதற்குப் பதிலாக சாந்து மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புகள் அணியவே நான் ஆசைப்படு வேன். வேலை விட்டு நீங்கிய ஒரு சுபே தார் அளித்த காக்கிக் கால்சட்டை, சிப்பிப் பொத்தான் நிறைந்த கறுப்பு வெல்வெட் கோட்டு, ஒரு காலத்தில் எங்களூர் வக்கீல் லாலா ஹுக்கும் சாந்துக்குச் சொந்தமாக இருந்த வட்டமான கம்பளிக் குல்லா ஆகிய விசித்திர சேர்க்கையான உடைகளை அவன் உடுப்பான்.

சாந்துவின் தகப்பன் பிளேக்கினால் இறந்தபிறகு, தன் இஷ்டம் போல் சுற்றும் சுதந்திரத்தை அவன் பெற்று விட்டான். இதைக்காண, எனக்குச் சற்றுப் பொறாமை தான். சாந்து காலையில் பெரிய மனிதர்க ளுக்கு முகஷவரம், முடிவெட்டுதல் ஆகிய வேலைகளை முடிப்பான். குளித்து உடுப் பான். லாலா ஹுக்கும் சந்த பட்டணத்திற் குச் செல்லும் மூடு வண்டியின் கால் படி யில் தெரியாமல் உட்கார்ந்து கொண்டு ஆறு மைலுக்கு அப்பாலுள்ள பட்டணத்து க்கு இலவசப் பிரயாணம் செய்வான்.

என்னைப் பட்டணத்துக்கு அபூர்வமாகத் தான் என் வீட்டார் அழைத்துச் செல்வார் கள். தன் தகப்பன் இறந்ததும் பள்ளிக்கூடம் விட்டு விலகியதால், குரூரமான உபாத்தி யாயர்களிடம் உதைபடாமல் தப்பித்துக் கொண்டு அவன் வாழும்போது, நான் தினம் நெஞ்சில் பயத்துடன் மூன்று மைல் தொலைவில் ஜோடியாலாவிலுள்ள செக ண்டரி பாடசாலைக்கு வியர்க்க விறுவிறுக் கப் போய் வருவதைக் கண்டு, என் மீது அவனுக்கு அனுதாபம் உண்டு. ஆகை யால், எப்போதும் தான் பட்டணத்திலிருந்து திரும்பி வரும்போது, வர்ணந்தீட்டும் தூவியோ, தங்கநிற மையோ, வெள்ளைச் சீமைச் சுண்ணாம்புக் கட்டியோ, பென்சில் சீவுவதற்காக இரண்டு பக்கமும் கூர்மையா கவுள்ள ஷவர அலகுகளோ ஏதேனும் என க்கு அவன் கொண்டு தருவான். பட்டணத் துக் கடைத் தெருக்களில் தான் கண்ட பலரகமான சாமான்களைப் பற்றியும் கதை கதையாகச் சொல்லுவான். முக்கியமாக, அவன் ஊர் திரும்புவதற்காக லாலா ஹுக்கும் சந்த் மூடு வண்டியின் காலடிப் படியில் உட்கார்ந்து காத்திருந்தபொழுது, ஜில்லாக் கோர்ட்டில் தான் கண்ட துரை கள், வக்கீல்கள், டபேதார்கள், போலீஸ் காரர்கள் முதலியவர்களின் உடைகளைப் பற்றியும் வர்ணிப்பான். வரிசையாக பல் கட்டுவதோடு, புதுக் கண்களும் செய்யும் கலாம் கானின் மேல் சட்டை போல் வாங்க அவனுக்கு ஆசை. தன் அம்மா சேர்த்து வைத்திருக்கும் உண்டியலை இதற்காக உடைக்க வேண்டுமென்று தனக்குள்ளே அந்தரங்க எண்ணத்தை, ஓரிண்டு தடவை என்னிடம் அவன் சொல்லியிருக்கிறான். கலாம்கான் ஓர் இளைஞன் என்னும், ஒரு பக்கமாக வகிடெடுத்துச் சீவியவனென்றும், கஞ்சிகோட்டு முடமுடுத்த தந்தக் காலரும், சுருங்கிய டையும், விசித்திரமான ரப்பர் மேல் சட்டையும், ரப்பர் சப்பாத்தும் அவன் அணிந்திருப்பதையும், மந்திரவாதி போல் ஒரு சீமைத் தோல்பையைத் திறந்து பளபளப்பான எ. கு ஆயுதங்களைக் கலாம் கான் வெளியிலெடுப்பதையும், சார்ந்து வர்ணிப்பான்.

சாந்த ஐந்தாவது வரை ஆங்கிலம் படித்திருந்தான். ஆகையால் டாக்டர் கலாம்கானை போல் உடுத்தி, பாட்டன் தன் தகப்பனுக்குச் சொல்லிக் கொடுத்தது அவன் தனக்குக் கற்பித்த பரு, கட்டி, பிளவை வைத்தியங்களைச் செய்யலாமா என்று, என் யோசனையையும் சில சமயம் அவன் என்னிடம் கேட்பான்.

அவன் விரும்பும் எதையும் ஆதரிக்கம் நான், அதையும் குதூகலத்துடன் ஆதரித் தேன். அளவுக்குப் பெரிதான அழகான தலைப்பாவும் வெள்ளை ரப்பர் கோட்டும் அனிந்து, என் முகம் கூட நன்றாய்த் தெரி யும் படியாக அவ்வளவு நன்றாய்ப் பாலஷ் செய்யப்பட்ட சப்பாத்தும் போட்டுக் கொண்டு, ஒரு நாள் காலையில் என் வீட்டு வாசலில் சாந்து காட்சியளிக்கக் கண்டு, நான் திடுக்கிட்டேன். தொழில் நடத்தக் காலையில் போகும் வழியில் அதை எனக்குத் தெரிவிப்பதற்காகவே, அவன் இப்படி வந்தானாம்.

நான் "ரொம்ப அபாரமாய் இருக்கிறது" என்றேன். நான் பின் செல்ல, தான் தினம் காலையில் ஷவரம் செய்து விடும் மிராசு தார் வீட்டை நோக்கி அவன் சென்றான்.

அந்த நேரத்தில் சந்தில் ஜனச் சந்தடி இல்லாததால், நான் மட்டும் சாந்துவின் டாக்டர் உடையையும், சுவரில் பெண்கள் தட்டியிருக்கும் வரட்டி, சாக்கடையில் ஓடும் நீர் இவை தனட உடையில் படாமல் அவன் கம்பீரமாக நடந்து செல்வதையும் கவனித்தேன். மிராசுதார் வீட்டை அடைந்த வுடன், மிராசுதாரின் மகன் தேவ் கைகொட் டிக் கெக்கலித்து, ஷஷமி'ன் பள்ளிக்கூடப் பாதிரித் துரைபோல் சாந்து உடுத்தியிருக் கிறானே!"என்று ஆனந்தக் கூச்சலிட்டான்.

அப்போதுதான் காலைக்கடன் முடித்து வந்த மிராசுதார் பீஜே சந்து, சாந்தவைக் கண்டதும் "ராம், ராம், ராம்" என்று தம் காதில் சுற்றியிருந்த பூணூலைக் கையால் தொட்டுக்கொண்டு, சாந்துவை நோக்கி, ஷஷபசுத் தோல் பெட்டியும், வேறு எந்தச் சனியனுடைய தோலாலோ செய்த கோட் டையும், வெள்ளைக்காரன் சப்பாத்துக்க ளையும் வீட்டுக்குள் போட்டுக்கொண்டு வந்து என் ஆசாரத்தைப் பங்கம் பண்ண வந்துவிட்டாயா? அயோக்கிய நாயே! ஏது, உன் அப்பன் செத்த பிறகு துளிக்கூடப் பயந்த நடப்பது இல்லை போலிருக்கிறது! வெளியே போ" என்று கத்தினார்.

"சாமி, நான் ஒரு டாக்டர் உடையல் லவோ உடுத்தியிருக்கிறேன்'' என்றான் சாந்து.

"கழுதையே, போய் உன் நாகரிக உடைகளை எறிந்துவிட்டு, கீழ்ச்சாதி அம்பட்டனுக்குரிய உடையை உடுத்தி வா: இல்லாவிட்டால் உன்னைச் சவுக்கால் அடிப்பேன்'' என்றார் "கொழகொழ' என்றிருந்த பீஜே சந்த்.

"ஆனால் சாமி..." என்றான் சாந்து.

"போடா போ, சோம்பேறிப் பயலே! கிட்ட வந்து தொலைக்காதே. வீடு முழுவ தையும் கோமயம் வேறு தெளித்துச் சுத்தி செய்ய வேண்டி வரும்" என்றார் மிராசுதார்.

சாந்து அவமானத்தால் திரும்பி விட் டான். அவன் முகம் சிவந்தது. அவனைப் பிரமாதமாக எண்ணியிருந்த நான் பக்கத்தி லிருக்கையிலேயே அவமானம் அடைந்த வெட்கத்தினால், என்னைத் - திரும்பியும் பார்க்காமல், சந்துக் கோடியில் மளிகை வியாபாரம் செய்யும் தனுராமின் கடையை நோக்கி, அவன் ஓடிவிட்டான்.

மிராசுதாரின் மகன் தேவ், தன் தகப்ப னாருடைய கடுஞ் சொற்களைக் கேட்டு அழ ஆரம்பித்தான். நான் அவனை ஓய வைத்துவிட்டு சந்து முனைக்கு போனேன். இச்சமயம் மிராசுதார் கையில் தராசைப் பிடித்துக் கொண்டே, சாந்துவைக் கேவல மான முறையில் ஷஷகழுதைப் பயலே, உன் குடும்பப் பொறுப்பையும் கிழத் தாயா ரையும் கவனிப்பதை விட்டுவிட்டுக் கோமா ளித் தனமாக ஆஸ்பத்திரிக்பாரப் பயல்க ளைப் போல் அனாசாரமான சட்டையை உடுத்திக் கொண்டு திரிகிறாயே! உன் சொந்த உடையை உடுத்தி வந்தால்தான், உன்னை ஷவரம் செய்ய விடுவேன்"என்று திட்டிக் கொண்டே, தமது உச்சிக் குடுமியை யத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சாந்து இந்தச் சம்பவங்களுக்கெல்லாம், நானே காரணம் என்று எண்ணியவன்போல் உடைந்த மனத்தினனாய், கோபத்துடன் என்னை விட்டு விட்டு ஓடினான். என்னை உயர்ந்த சாதியான் என்ற காரணத்துக்காக வெறுக்கிறான் என்று நினைக்கையில், எனக்கு அழுகை வந்தது. ஷபண்டித பரமானந்தரிடம் போ. போய் நீ உடுத்தியி ருக்கும் உடைகள் அசுத்தமானவையல்ல என்று சொல்' என்று பின்னாலிருந்து கத்தினான். இந்த அபாயமான வி'யத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக, மிராசுதார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த பண்டித பரமானந்தர் அந்தச் சமயத்தில் வீட்டுக்கு வெளியே தோன்றி, ஷஓஹோ, நீயும் அவனுடன் சேர்ந்து கொண்டாயா? உங்களையெல்லாம் இந்தப் பள்ளிப் படிப்புக் கெடுத்து விட்டது. ஏதோ படித்த மனிதன் ஆகப்போவதால் நீ இந்த மாதிரி உடைகளை உடுத்தலாம். ஆனால் இந்தக் கீழ்ச் சாதிப் பயலுக்கு என்ன உரிமை இருக்கிறது? அவன் நம் தலை, முகம், கை முதலியவற்றைத் தொட வேண்டியிருக்கிறது. ஏற்கனவே, கடவுளால் அசுத்தமாகப் படைக்கப்பட்டிருக்கிறான். இன்னுமா அசுத்தம் ஆக வேண்டும்? நீயோ உயர்ந்த சாதிப் பையன்: அவன் கீழ்ச்சாதித் திருட்டுப் பயல்' என்றார். சாந்து இவற்றைக் கேட்டுக் கொண்டே திரும்பிக் கூடப் பாராமல், அவன் ஓடுவதற்குக் காரணமாக இருந்த வசவுகளைவிட ஏதோ ஒரு முக்கியமான விஷயத்துக்காக ஓடுகிறவன் போல் ஓடினான்.

அம்மா என்னைக் கூப்பிட்டு, "சாப்பிட்டுப் பள்ளிக்கூடம் போக நேரமாகிறது' என்று கூறினாள். அதோடு அந்த நாவிதப் பையன் சகவாசத்தைப் பற்றி ஒரு பிரசங்கமே செய்ய ஆரம்பித்து விட்டாள். பள்ளிக்கூடத்தில் நான் முழுதும் சாந்துவின் கதியைப் பற்றி எண்ணியவனாகவே இருந்தேன். பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்புகையில், அவன் தன் தாயாரோடு வசித்து வந்த குடிசைக்குள் சென்றேன்.

அவன் தாய் ஊரில் பெரிய வாயாடிக் கிழவி என்று பெயர் பெற்றவள். அவளுக்கு என் மீது எப்போதும் அன்பு உண்டு. ஆனாலும், அறுபது வருஷங்களாகக் கஷ்டத்துடனும் அவமதிக்கப்பட்டும் வாழ்ந்து வந்தவளாகையால், என்னிடமும் கிண்டலாகவே தான் பேசுவாள். "உன்னுடைய சினேகிதனைப் பார்க்க வந்து விட்டாயா, அப்பா? நீ இங்கே வந்திருப்பது உன் அம்மாவுக்குத் தெரிந்தால், உன்மீது என் திருஷ்டி விழுந்து விட்டதென்று என் கண்களையே பிடுங்கி விடுவாளே! தோற்றத்தில் அப்பாவி போல் இருக்கிறாய். உண்மையிலே அப்படித்தானா? அல்லது உங்கள் கூட்டத்தாரைப் போல் கோள் சொல்லும் வெளிவேஷக் காரனா?' என்று கேட்டாள்.

"சாந்து எங்கே அம்மா?' என்று கேட்டேன்.

"எனக்குத் தெரியாதப்பா. ஏதோ பட்டணத்துப்பக்கம் போய்ச் சாலையோரங்களில் உட்கார்ந்து ஷவரம் செய்து கொஞ்சம் பணம் சம்பாதித்ததாகச் சொன்னான். இனிமேல் அவன் என்ன செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை. இருந்தாலும், அவன் அப்பா ஷவரம் செய்து வந்த வாடிக்கைக்காரர்கள் கோபப் படும்படியாக நடந்திருக்கக் கூடாது. அவன் சிறு குழந்தையாகையால், விசித்திரமான யோசனை வந்து விடுகிறது. அதற்காக அவர்களும் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. நீ அவனை விளையாட அழைத்துப் போக வந்தாயாக்கும். வீதிப்பக்கம் போயிருக்கிறான் போல் இருக்கிறது. விரைவில் வந்துவிடுவான். வந்தவுடன் சொல்லுகிறேன்."

"சரி அம்மா"என்று கூறி வீடு போய்ச் சேர்ந்தேன்.

எங்கள் கூட்டுறவை விரும்பாத பெரியவர்களின் வாயில் விழாமல் இருப்பதற்காக, எங்களுக்குள் ஏற்கனவே செய்துகொண்ட ஏற்பாட்டின் பிரகாரம், சாந்து அன்று மாலை என்னை அழைக்க, வழக்கப்படி சீட்டியடித்தான்.

"வா கடைப்பக்கம் போவோம். என்னிடம் சில வி'யங்கள் பேச வேண்டியிருக்கிறது'' என்றான். போய்க் கொண்டே "இன்று காலை கோர்ட் பக்கம் 'வரம் செய்வதில் ஒரு ரூபாய் சம்பாதித்தேன், தெரியுமா? ஹு"க்கும் சந்த் வண்டி சீக்கிரம் புறப்படாவிட்டால், இன்னும் சம்பாதித்திருப்பேன். பார், இந்த வைதிக முட்டாள்களுக்கு பாடம் கற்பிக்கிறேன். இனி அவர்கள் வீட்டுக்கு ஷவரம் செய்யப் போவதில்லை. லாலா ஹுக்கும் சந்த் மகனிடம் ஐந்து பணத்துக்கு ஒரு ஜப்பான் பைசிக்கிள் வாங்கி ஓட்டிப் பழகிய பின், தினம் பட்டணம் போகப் போகிறேன். எனது நீண்ட கோட், கறுப்புத்தோல் சப்பாத்து, வெள்ளைத் தலைப்பாகை இவைகளுடன் பைசிக்கிளுக்கு முன் உள்ள கொக்கியில் ஆயுதப் பெட்டியை மாட்டிவிட்டுச் சவாரி செய்தால் ஜோராய் இருக்கும் அல்லவா? என்றான்.

"ஆமாம்"என்றேன்.

இந்த விஷயம் எனக்குச் சந்தோ'ம் அளித்தது. சாந்து சைக்கிள் சவாரி செய்யும் காட்சியைக் கற்பனை செய்து பார்த்தால் அல்ல: என் ஆசை விரைவில் பூர்த்தியடையும் என்பதால்தான். சாந்து சைக்கிள் வாங்கினால், பின் சக்கரத்திற்கு மேலுள்ள "காரியரிலே' அல்லது முன் உள்ள "பாரிலோ' என்னை உட்கார வைத்துப் பட்டணத்துக்குக் கூட்டிப் போவான் அல்லவா! அதோடு நான் பழகுவதற்கும் கைமாற்றுக் கிடைக்கும் அல்லவா!

ஊதாரித்தனத்திற்குப் பேர் போன சாந்து சைக்கிள் வி'யமாகப் பேரம் பேசிக் குறைந்த விலையில் அதை வாங்கியது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. பின்பு, ரகசியமாக என்னிடம் ஷஷஇன்னும் ஓரிரண்டு நாள் பொறுத்துப் பார். நீ இதற்கு முன் சிரித்திராதவாறு சிரிக்க வைக்கிறேன்" என்றான். அவனோடு சேர்ந்து அவன் திடீர்ச் செயல்களிலே பழகிய எனக்கு, அதனை உடனே கேட்டுவிட வேண்டுமென்று ஆவல் தோன்றியதால், அப்போதே அதைச் சொல்லும்படி வற்புறுத்தினேன்.

"இல்லை, நீ பொறுத்துப்பார். இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. அந்த ரகஸ்யம் நாவிதர்களுக்கு மட்டும்தான் புரியும். அது கிடக்கட்டும். இந்த சைக்கிளை விடப் பழகப் போகிறேன். நீ பிடித்துக்கொள். அப்புறம் சரியாய்ப் போய்விடும்" என்றான்.

அதற்கு நான் ஷசைக்கிள் பழகும் வழி இது அல்லவே. என் அப்பா பின்னாலிருந்து ஏறிப் பழகினார். அண்ணா பெடலை மிதித்துப் பழகினான்' என்றேன்.

"உன் அப்பா பலூனைப் போலப் பருத்தவர். உன் அண்ணா நெடுங்கால் சிலந்தி. நான் அப்படி அல்ல. நான் பிறக்கும்போதே தலைகீழாகப் பிறந்தேனென்று என் அம்மா சொல்லுவாள்' என்றான்.

"சரி' என்று அவனுக்காக வண்டியைப் பிடித்துக் கொண்டேன்.

சுத்தம் செய்ததால் பிரகாசித்த கம்பிகளையே நான் கவனித்துக் ொண்டிருந்ததால், கைப்பிடியை விட்டுவிட்டினே. சாந்து மறு பக்கத்தில் தொப்பென்று வண்டியோடு சாய்ந்துவிட்டான். மளிகைக்கடையில் மிராசுதாரைச் சுற்றிக் கூடியிருந்த விவசாயிகள் அனைவரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள். மளிகைக்கடைச் செட்டியும் "உனக்கு நன்றாய் வேண்டும். அனாசாரம் பிடித்த பயலே! எலும்பு ஒடிந்து செத்தால் தான் உனக்குப் புத்தி வரும். அதிகப் பிரசங்கி!'' என்று கத்தினான்.

இத்தகைய சங்கடமான நிலைமையை உண்டாக்கிய எனக்கு அவனிடமிருந்து இரண்டு உதை கிடைக்குமென்று எதிர் பார்த்ததற்கு மாறாக, வெட்கத்தால் தலை குனிந்து கொண்டிருந்த அவன் என்னைப் பார்த்து, "முட்டாள் பயலே, உன்னால் பிரயோஜனமில்லை'' என்றான் பிறகு, என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கடைசியில் நான் சிரிக்கப் போகிறேனா? அல்லது அவர்கள் சிரிக்கப் போகிறார்களா? என்று பார்ப்போம்" என்றான்.

"இந்தத் தடவை கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன்" என்று, கீழே கிடந்த வண்டியை எடுத்துச் சரிப்படுத்திக் கொண்டே சொன்னேன்.

"ஆமாம், கழுதைகளே! எலும்பை முறித்துக் கொள்ளுங்கள்'' என்ற ிராசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் கத்தினார்.

"நீ அதைக் கவனிக்காதே. அவர்களுக்கு நமது வேலையைக் காண்பிக்கிறேன்" என்று சாந்து கூறினான். நான் கெட்டியாய் சைக்கிளைப் பிடிக்க, சிரமப்பட்டு மேலே ஏறி, "கையை விட்டுவிடு" என்றான். நான் பிடியைத் தளர்த்தி ஷஷவிட்டுவிட்டேன்" என்றேன். தன் வலது காலால் பெடலை அழுத்தினான். சக்கரங்கள் சுற்றவே ஆபத்தான முறையில் ஒரு பக்கம் சாய்ந்தான். அதே சமயத்தில் மறுபக்கத்தின் பெடலை மிதித்ததால், சைக்கிள் கீழே விழாமல் நிமிர்ந்து, சைக்கிளின் தோல் ஆசனத்தில் சாந்து பய்கரமான முறையில் உட்கார்ந்தான். சைக்கிள் சில வினாடிகள் விழுவது போல் இருந்தது. கைப்பிடி அங்குமிங்குமாகத் தடுமாறியது. இந்தச் சமயத்தில் கடையில் கூடிய கூட்டத்தினின்று கேலிச் சிரிப்புச் சத்தம் கேட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டு சாந்து கலவரமடைவான் என்று எண்ணினேன். சக்கரம் ஆச்சர்யமாய்ச் சுற்ற ஆரம்பித்துவிட்டதாலும், கைப்பிடி ஆச்சரியமாய் ஒழுங்குபட்டுவிட்டதாலும், "சபா' சபா'' என்று சொல்லிக் கொண்டே நான் பின் தொடர, அவன் சைக்கிளை ஓட்ட ஆரம்பித்துவிட்டான். அரை மைல் தூரம் ஓடியபின், இறங்கி மீண்டும் முன்போலவே ஏறிப் பழகினான்.

அவன் புதிதாய்க் கற்ற வித்தையால் ஏற்பட்ட களிப்பில் பங்குபெற நான் எண்ணியிருந்தும்? மறுநாள் என்னை வர்க்கா என்ற ஊரிலுள்ள சித்திகளைப் பார்க்க என் வீட்டார் அழைத்துச் சென்றுவிட்டார்கள். ஆகையால், நான் மறுநாள் அவனைப் பார்க்க முடியவில்லை.

ஆனால் மூன்றாம் நாள் அவன் என்னைப் பார்க்க வந்தான். வந்ததும், முன் கூறிய வேடிக்கையை அன்று காண்பிப்பதாகச் சொன்னான்.

"அது என்ன விஷயம்' என்று கேட்டுக் கொண்டே, நான் பின் தொடர்ந்தேன்.

கிராமத்துக் குசவனின் சூளைக்குப் பின்னே ஒளிந்து கொண்டு ஷஷஅதோ பார், மளிகைக் கடையில் கூட்டம் கூடியிருக்கிறதே, அதில் யார் யார் இருக்கிறார்கள்? சொல் பார்ப்போம்" என்றான்.

கூடியிருந்த பல உருவங்களில் யார் யார் இருக்கிறார்கள் என்று அறிய மாட்டாமல் திகைத்து நின்றேன். "பண்ணையாட்கள் மிராசுதாரைப் பார்க்கக் காத்திருப்பார்கள்" என்றேன்.

"அட முட்டாளே! இன்னொருதரம் பார். அதே மிராசுதாரின் நீண்ட முகவாய்க் கட்டையைப் பார்! 'வரம் செய்யாத அசுத்தமான தாடியோடு அவன் அங்கே நிற்கிறான் பார்" என்றான் சாந்து.

"ஹா, ஹா" என்று சிரிப்புத் தாங்காமல் குதித்தேன். அவன் மீசையில் சிவப்புச் சாயம் ஏறியிருப்பதையும், பிடரியில் வெள்ளை மயிர் தொங்குவதையும் கண்டதும், ஷஷஆஹா, வியாதி பிடித்த சிங்கத்தைப் போல் ஆபாசமாயிருக்கிறதே" என்று கத்தினேன்.

"இ'! சத்தம் போடாதே. அதோ மளிகைக்கடை சவுக்காரைப் பார். நான் நறுக்கி வந்த அவனுடைய நீர் யானை மீசையில் புகையிலை எச்சில் காவியேறிக் குஷ்டரோகி போல் இருக்கிறான். இப்போது நீ கடைப் பக்கம் போய், ஷநீர் யானைகள், நீர் யானைகள்" என்று கத்து. ஒருவரும் உன்னை ஒன்றும் சொல்ல முடியாது" என்றான்.

சாந்துவின் தீவிர சிஷ்யனான நான் தாமதிக்காமல், கடையின் அருகிலிருந்த ஆலமரத்தடியில் உள்ள மேடையை நோக்கி ஓடிக் கொண்டே, ஷஷநீர் யானைகள், நீர் யானைகள்" என்று கத்தினேன். கடையைச் சூழ்ந்திருந்த பண்ணையாட்கள், தங்கள் எஜமானர்களின் முகங்களில் முடி வளர்ந்திருப்பதைக் கண்டு, வாயினால் ஒன்றும் சொல்லாவிட்டாலும், அடக்கி வைத்திருந்த சிரிப்பை வெளிக் காண்பித்தார்கள்.

"பிடி, பிடி அந்தத் திருட்டுப் பயலை. அம்பட்டப்பயல் சாந்துவிடம் இவனும் சேர்க்கை" என்று மளிகைக்கடை சவுகார் உறுமினான். நான் அதற்குள் ஆலமரத்திலேறி, கோவில் சுவரில் தாவி, கோவில் பூசாரியைப் பார்த்துக் கேலி செய்தேன்.

நாவிதப் பையனின் வேலை நிறுத்தச் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. பெரியவர்களின் வினோதமான தாடிகளைப் பற்றி ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும் கேலி செய்யத் தலைப்பட்டார்கள். அவர்களின் ஆபாசத் தோற்றத்தைக் கேலி செய்ததோடு, அவர்களது முன்னிலையிலேயே அவர்களது அழகைப் பற்றிக் குரூரமாகவும் பேசத் தொடங்கிவிட்டார்கள். அதோடு மிராசுதாரிலும் இருபது வயது குறைந்த அவர் மனைவி, அவ்வளவு காலமும் நாசூக்காக இருந்த தன் கணவன் இப்போது ஆபாசத் தோற்றத்துடன் இருப்பதால், மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதென்று சொல்லி, வேறு யாருடனாவது ஓடிவிடுவதாகப் பயமுறுத்தியதாகவும் கூறப்பட்டது.

இந்த நாட்களில் சாந்துவுக்குப் பட்டணத்தில் நல்ல வரும்படி. தனக்குப் புதுத் துணிகளும், புது ஆயுதங்களும், எனக்குப் பல வெகுமதிகளும் வாங்கிய பின்பும், நல்ல மிச்சம் இருந்தது.

அவன் செய்த குற்றத்துக்காக அவனைச் சிறைக்கு அனுப்புவதாகப் பெரியவர்கள் பயமுறுத்தினார்கள். ஷஷசமாதான பங்கம் செய்ததற்காக அவனைப் பொலிசார் வசம் ஒப்புவிக்காதிருக்க வேண்டுமென்றால், அவனைத் தங்களுக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்யும்படி நீ அவனுக்கு உபதேசிக்க வேண்டும்" என்று அவன் தாயையும் முடுக்கினார்கள். ஆனால், சாந்துவின் தாயோ தன் ஆயுள் காலத்திலேயே இப்போதுதான் முதல் தடவையாக நல்ல வருவாயைக் கண்டாளாகையால், தைரியம் கொண்டுவிட்டாள். இவ்வளவு நாளும் அவர்களைப் பற்றித் தான் எண்ணியிருந்ததை எல்லாம் மறைவிலே, சொல்லித் திட்டியவள், இன்று நேருக்கு நேரேயே அதையெல்லாம் சொல்லித் திட்டி விடட்டாள்.

அப்புறம் அவர்கள் வர்க்காவிலுள்ள ஒரு நாவிதனை அழைத்து, சாந்துவுக்கு வழக்கமாய்க் கொடுத்த இரண்டு பைசாக் கூலியை விட்டு முழுசாக ஓர் அணாவே 'வரக் கூலி கொடுப்பதாகச் சொல்லி, வர்க்கா நாவிதனை ஊரிலே நிலைக்க வைக்கலாம் என்று எண்ணினார்கள்.

ஆனால், இதுவரையிலும் தான் செய்த பல யுக்திகளையும் விடப் பெரிய யுக்தியொன்றை, சாந்து இம்முறை கண்டு பிடித்து விட்டான். பட்டணத்தில் நிரஞ்சன தாஸின் ஷவர "ஸலூனைக் கண்ட அவன் மூளையில் ஓர் அபூர்வ யோசனை தோன்றியது. தன் பங்காளிக்காரனான வர்க்கா நாவிதன் உட்பட, தன் கிராமத்துக்கு ஏழு மைல் வட்டாரத்தில் உள்ள சகல நாவிதர்களையும் அழைத்து ஒன்று சேர்த்து, தங்கள் கிராமத்திலேயே ஒரு ஷஸலூன்' ஆரம்பித்து விடுவது என்று அவன் எண்ணினான். தன் சமூகத்தாரையெல்லாம் ஒரு விசேஷக் கூட்டம் கூடச் செய்தான். அந்தக் கூட்டத்திலேயே தன் அறிவுத் திறமையாலும் வாக்கு வன்மையாலும், ஒரு விஷயத்தை எடுத்து விளக்கினான். ஷநாம் ஊர் முதலாளிகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களைத் தேடிப் போவதற்குப் பதிலாக அவர்களே, தம்மைத் தேடி வரும் நாள் வந்து விட்டது என்று முழங்கினான்.

இப்படியாக, ஊரிலே முதல் முதலாக, "சாந்து சகோதரர் 'வரஸலூன்' தோன்றி விட்டது. அதன்பின், எங்கள் பிராயத்திலே பற்பல விதமான தொழிற் சங்கங்களும் ஏற்பட்டு விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திரையுலகம் வீழ்ச்சி காணுகிறதா?

தம்பிஜயா தேவதாஸ்

தொலைக்காட்சியின் வருகையால் சினிமா அழிந்து விடப் போகிறது என்ற கருத்து இப்பொழுதும் நிலவுகிறது. திரைப் படங்கள் அழிந்து விடவில்லை என்றாலும் தொலைக்காட்சியின் தாக்கம் அதிகரித்தே வருகிறது. இந்தத் தாக்கத்துக்கு இலங் கைத் திரையுலகமும் விதிவிலக்கல்ல.

இலங்கைத் திரையுலகத்துக்கு இந்த தொலைக்காட்சி மட்டும் தாக்கமாக அமையவில்லை. வேறு வகையான பல தாக்கங்களும் உள்ளன.

திரைப்பட மாளிகைகளை மூடுவதும் அவற்றில் நிலவும் குறைபாடுகளும் திரைப் படத் தொழிலைப் பாதிக்கின்றன. கடந்த 28 வருடங்களில் இலங்கையில் கிட்டத் தட்ட 150 திரையரங்குகள் மூடப்பட்டுள் ளன. 1972 ஆம் ஆண்டு திரைப்பட விநி யோகம் திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் வழங்கும் முறை அறிமுகமான போது நாடெங்கிலுமாக மொத்தம் 364 திரையரங் குகள் இருந்தன. இப்பொழுது 236 திரையர ங்குகள் மட்டுமே இருக்கின்றன. இது நமது திரைப்படத் தொழிலின் வீழ்ச்சிக்கு நல்ல உதாரணமாகும்.

இவ்வாறு திரையரங்குகள் அழிந்தமை க்கு பல்வேறு காரணங்கள் கூறப் படுகின்றன.

முதலில் 1979ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளிக் காற்றின் தாக்கத்தினால் பல திரையரங்குகள் மூடப்பட்டன. இதனால் கிழக்கு மாகாணத்திலிருந்த பல திரையரங் குகள் அழிந்து போயின. அவற்றை நீண்ட காலமாகத் திருத்தியமைக்கவில்லை. 1983 இல் சிங்கள தமிழ்க் கலவரத்தில் 12 தியேட்டர்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன. அரிய பல திரைப்படங்களும் தீ அரக்கனு க்கு இரையாகின. மருதானை (காமினி), வெள்ளவத்தை(சபயாா), கொம்பனி வீதி (றியோ), கிருலப்பனை(சல்பவர்), தெஹி வளை (றியோ), நீர்கொழும்பு(ராஜ்), பண் டாரவளை(மொடேர்ன்), போன்ற இடங்களி லேயே இவ்வாறு திரையரங்ககள் அழிக்கப் பட்டன. மற்றவை அழிந்து போய் விட்டன.

இதனையடுத்து யுத்தத்தினால் வடகிழக் கில் பல திரையரங்குகள் செயலிழந்தன. வட மாகாணத்தில் 42 தியேட்டர்களும் கிழக்கு மாகாணத்தில் 15 தியேட்டர்களும் செயலிழந்தன. கொழும்பு மாவட்டத்தை அடுத்து அதிக தியேட்டர்களைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாண மாவட்டம் விளங் கியது. அம்மாகாணத்தில் இருந்த 32 தியேட்டர்களில் 10 தியேட்டர்கள் யாழ் நகரில் அமைந்திருந்தன. இப்பொழுது யாழ் மாவட்டத்தில் இரண்டு தியேட்டர்களே தொழிற்படுகின்றன. இவ்வாறு தியேட்டர்கள் செயல்படாததால் இலங்கைத் திரைப்படத் தொழில் மட்டுமல்ல திரைப்பட இறக்குமதி யிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

இலங்கையில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாளில் 2 இலட்சத்து 16 ஆயிரம் பேர் படம் பார்த்தனர். ஆனால் இப்பொழுதோ 82 ஆயிரம் பேரே திரைப் படம் பார்க்கின்றனராம். இந்நிலையில் தியேட்டர்களை நடத்துவது நட்டமான வியாபாரமாக மாறி வருகிறது.

இப்பொழுது பலர் திரைப்பட அரங்கின் பக்கமே போவதில்லை. எல்லோருக்குமே தொலைக்காட்சி பார்க்கும் வசதியிருக் கிறது. இதனாலும் பெரும்பாலும் தியேட்டர் தொழில் பிரச்சனைகளை எதிர்நோக்குகி றது. இப்பொழுது இயங்கும் தியேட்டர்க ளில் கூட நவீன வசதிகள் செய்யப்பட வில்லை. புதிதாக தியேட்டர்கள் கட்டப்படு வதாகவும் இல்லை. இவை எல்லாம் இலங் கையில் சினிமாத் தொழில் வீழ்ச்சிக்கு காரணமாகி விட்டன.

நாட்டின் பல பாகங்களிலும் இதுவரை பல தியேட்டர்கள் மூடப்பட்டுள்ளன. கொழு ம்பில் 15 தியேட்டர்களும், யாழ்ப்பாணத்தில் 29 தியேட்டர்களும் வவுனியாவில் 3 தியேட் டர்களும் மன்னாரில் 4 தியேட்டர்களும் மட்டக்களப்பில் 6 தியேட்டர்களும் திருகோ ணமலையில் 13 தியேட்டர்களும் மூடப்பட்டு ள்ளன. தமிழ்ப் பகுதிகளிலேயே அதிகமான திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன. இதை விட நாட்டின் மற்றப் பகுதிகளில் மொத்தம் 84 தியேட்டர்கள் செயலிழந்துள்ளன. நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது சினிமாத் தொழில் எவ்வாறு முன்னேறும்? இவ்வாறான நிலை எமது நாட்டு சினிமாத் தொழிலை மிகவும் பாதிக்கிறது.

தொலைக்காட்சியின் வருகை, சூறாவ ளியினால் தியேட்டர்கள் சேதமடைந்தமை, போரினால் தியேட்டர்கள் செயற்படாமை, தியேட்டர்களில் நவீன சாதனங்கள் இல்லை போன்ற பல்வேறு காரணங்களி னால் எமது நாட்டு சினிமாத் தொழில் இவ்வாறு அழிவுநிலை வரப்போகிறது. சிங்கள சினிமாத் தொழிலே இவ்வாறு அழிவு நிலையை நோக்கிப் போகிறது என் றால் இலங்கையில் தமிழ்ப்படத் தயாரிப்பை எவ்வாறு எண்ணிப்பார்ப்பது? இலங்கையில் தமிழ்ப்படத் தயாரிப்பு இறந்துவிட்டது என்ற ஒரு நிலையிலேயே இருந்து வருகிறது.

உள் நாட்டு நிலை எப்படி இருப்பினும் வெளிநாட்டில் வாழும் எமது இலங்கைத் தமிழருக்கு தமிழ்ப்படம் பார்ப்பதில் ஆர்வம் அதிகரித்தே வந்துள்ளது. அவர்களில் பலர் தென்னிந்தியத் தமிழ்ப் படங்களைத் தருவித்து அப்படங்களைத் தியேட்டர்களில் பார்க்கிறார்கள். தொலைக்காட்சியிலும் பார்க்கிறார்கள்.

இவர்கள் இலங்கைத் தமிழ்த் திரைப் படங்களைப் பார்க்க ஆசையாக உள்ள னர். ஆனால் நல்ல தயாரிப்புக்களையே இவர்கள் விரும்புகின்றனர்.

இவர்களுக்கு ஏற்ற வகையில் இலங் கையில் தமிழ்ப்படங்கள் தயாரித்தனர். பொருளாதார ரீதியில் வெற்றி பெறும் வாய்ப்பு உண்டு. பலர் வெளிநாடுகளில் தமிழ்ப் படங்களைத் தயாரித்தனர்.

இதுவரை உருப்படியான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படவில்லை என்றே கூற வேண்டும்.

தென்னிந்தியக் கலைஞர்கள் பலர் இப்பொழுது வெளிநாடுகளில் கலைநிகழ்ச் சிகள் செய்கிறார்கள். இவர்களுக்கு இடம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களே ஏற்பாடு கள் செய்கிறார்கள். இந்த ஏற்பாட்டாளர்கள் இலங்கைத் தமிழ்ப்படங்களை அங்கு திரையிடுவதற்கும் தயாராக இருப்பார்கள். எனவே அவர்களுக்கு ஏற்ற வகையில் நாம் படம் தயாரிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. எமது தமிழ்ப்படங்களை வெளிநாடுகளுக்கு எவ்வாறு சந்தைப்படு த்த வேண்டும் என்பதை நாம் முக்கியமாக தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

ஏற்கனவே இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்கள் தோல்வியின் காரணங்க ளில் ஒன்று தயாரிக்க தெரிந்த படத்தை சந்தைப்படுத்தத் தெரியாமையேயாகும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதுடன் சந்தை ப்படுத்துவதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

யாவருக்கும் புகழிடம்

திக்குவல்லை கமால்

ளுகர் தொழுவதற்காகப் பள்ளி வாசலுக்குப் போய்க் கொண்டிருந்தார் ஹமீது மாஸ்டர். சிறுவர்களின் ஆரவாரம் அவரது கவனத்தை ஈர்த்தது.

பள்ளிவாசல் முற்றவெளியில் ஒரு அளவான மேடை அமைத்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. என்ன விஷயமென்றுதான் அவருக்கு விளங்கவில்லை.

'எனத்தியன் மாஸ்டர் யோசிக்கிய?' தொழுதுவிட்டு வந்து கொண்டிருந்த முபீன் நானா கேட்டார்.

"ஸ்டேஜொண்டு அடிச்சீக்கி...ம்... அது தான் பாத்த'

"அஹாதியா புள்ளயளுக்கு பரிசி குடுக்கியாம்'

'ஆ... நல்ல விஷயந்தானே' என்றவாறு பள்ளிக்குள் புகுந்தார்.

தொழுதுவிட்டு வெளிக்கிறதுக்கு வந்த போது வெளியே ஜிலுஜிலு வென்று காற்று வீசிச் சுகம் கொடுத்தது. கொஞ்ச நேரம் அந்தச் சுகத்தை அனுபவிக்க வேண்டும் போலிருந் தது அவருக்கு. வீட்டுக்கு அவசரப்பட்டுப் போய்ச் செய்து கிழிக்க என்னதான் கிடக்கிறது.

தற்செயலாக அவரது கண்ணிலே நோட்டீஸ் போட் தென்பட்டது. அந்த இளஞ்சிவப்பு நோட்டீஸ் அஹாதியா பரிசளிப்பு பற்றியதுதான்.

அதிபர் பள்ளித் தலைவர் பிரதேசசபை உறுப்பினர்... இப்படிப் பலபேரின் பெயர்கள் அதிலே பதிவாகி இருந்தன.

ஹமீது மாஸ்டருக்கு கோபம் கோபமாக வந்தது.

'கண்டவன் நின்டவனெல்லாம் பெரிய மனிசனாகீட்டானியள்...ம்...நாற்பது வருஷம் படிச்சுக் குடுத்திட்டு பென்ஷினெடுத்தக்கோ நிக்கியன். படிச்சவனுக்க மருவாரி குடுக்காத வனியள் எப்பிடியன் முன்னேறிய'

மூட் மாறிய நிலையில் பள்ளிவாசலிலிருந்து வெளியேறினார் ஹமீது மாஸ்டர்.

எஸ் ஸெஸ்ஸி பாஸாகி ஒரு வருடம் மூணு மாசம் வீட்டோடு இருந்து, சரியாகப் பதினெட்டு வயதில் அவருக்கு முதல் நியமனம் கிடைத்தது. இளமைத் துடிப்போடு கண்டிக்குப் போய் வேலையைப் பொறுப்பெடுத்தார். அதைத் தொடர்ந்து இரண்டு வருடம் அட்டாளைச் சேனையில் ட்ரெயினிங் முடித்தார். பொலனறுவையில் படிப்பிக்கும் காலத்தில்தான் கல்யாணம் செய்தார்.

அவருக்கு வாய்த்தவள் பாக்கியசாலி. பத்துப் பன்னிரண்டு ஊர்களில் அவள் வாழ்ந்து பழகி விட்டாள். இடமாற்றம் கிடைத்த இடங்களுக்கெல்லாம் குடும்ப சகிதம் புறப்பட்டாள். என்ன செய்வது...? ஊரில் வேலை செய்ய அவருக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை.

நாற்பத்திரண்டு வருடம் கழித்துத்தான் அவர் பென்ஷன் காரணமாக ஊர் வந்து சேர்ந்தார்.

''அஷ்ர.்.பா சீக்கிரம் சோத்தப் போடுங்கள்.''

மன உஷ்ணமும் வெளி உஷ்ணமும் சேர்ந்து மனைவியின் மீது ஒரு இனந் தெரியாத பாய்ச்சலாக வெளிப்பட்டது.

''பாங்கு சென்னொடனே தொழுதிட்டு சோத்தப் போட்டுப் பாத்துக்கோ நிக்கிய நான்.''

''ஆ..... ஆ அப்ப தின்னொம்.''

மீண்டும் குளிர்ந்து போனார் அவர். இருவரும் தனிக்குடித்தனம் அல்லவா:

"எனத்தியன் ஸ்பீக்கர் சத்தம்?"

"அதுதான் நானும் கேட்டுக்கோ நிக்கிய"

கணவனும் மனைவியும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

''பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில், பல்கலைக் கழகம் பிரவேசித்துள்ள மாணவர்களுக்கு பாராட்டு விழா''

''ம்... நல்ல விஷயம்'' - ஹமீது மாஸ்டர் வாய்விட்டுச் சொன்னார்.

அதைத் தொடர்ந்து பங்கு கொள்ளும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்களின் பெயர்ப்பட்டியலைச் சொன்ன போது அவரது முகம் சுருண்டு போய் விட்டது.

''ம்... எங்கட மகன் பாஸாகி கெம்பஸுக்கு பெய்த்து ஜொப்பும் எடுத்து வருஷக் கணக்கு. தாருசரி பாராட்டுவிழா வெச்சனியளா? அப்ப பெரிச கூத்தடிய'' - ஹமீது மாஸ்டர் பொருமினார்.

''ஒங்கட புள்ள ஊரிஸ்கூல்ல, படிச்சி பாஸாகல்லேன்'' - அஷ்ர.்.பா நியாயப் படுத்தினாள்.

''எங்க படிச்சாலும் ஊருப்புள்ளதானே... ம்...இவனியள் எங்கியன் சரிவார''

இப்பொழுதெல்லாம் கணவன் ஒரு மாதிரியாகவே பேசுவது அவளுக்கு படிப்படியாக விளங்கியது.

நெடுகவும் பிள்ளைகள், பாடசாலை, பெற்றார், காரியாலயம் என்று ஓடியாடித் திரிந்து விட்டு ஒரேயடியாக வீட்டுக்குள் புகுந்து விட்ட தனிமையின் தாக்கமாக இருக்குமோ என்றெல்லாம் அவள் யோசித்தாள்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று எவருமே பக்கத்திலில்லாத நிலை.

ஹமீது மாஸ்டருக்கு இரு பெண்களும் ஒரு ஆணுமாக மூன்று பிள்ளைகள்.

மூவருக்குமே திருமணமாகிவிட்டது. மூத்த மகனும் மகளும் ஆசிரியர்களாகத் தொழில் பார்க்கின்றனர். சீதனம், ஆதனம் என்று பெரிதாக ஒரு தாக்கமும் ஏற்படவில்லை. ஓரளவுக்கு பரஸ்பர விருப்பத்தோடு நடந்தேறிய காரியங்கள்தான். கண்டி... தொடங்கஸ்லந்தை, துந்துவை என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கடைசி மகளை ஊரிலுள்ள வீட்டோடு வைத்துக் கொள்வோமென்றே எண்ணியிருந்தார்கள். அல்லாஹ் அதனை வேறுவிதமாக மாற்றி அமைத்து விட்டான். என்ன செய்வது?

''அஷ்ர.்.பா....?''

''எனத்தியன்''

''நாங்க வந்த இப்ப எவளவு காலமன்?''

''மூணு மாசம் முடிஞ்சேன்''

''இனி இனி''

இந்த மூணு மாசத்தேக்குள்ளேம் ஊரில எத்தின ஜாதி நடந்தன்...?'

'நீங்க எனத்தியன் செல்லிய...?'
'ஸ்கூல் வெளாட்டுப் போட்டி... அஹாதியா பாராட்டுவிழா... பொஸ்தக வெளியீடு...ம்'

'ஆ... இதியளயா செல்லிய... எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலேம் இப்பிடி விஷயமியள் நடக்கியதானே'

'நடக்கியதான்... இப்பிடி விஷயத்துக்கு ஊரிலீக்கிய முக்கியம ஆள்கள் கூப்பிடோணுமேன். நாளொரு பின்ஸி பலா ஈந்திட்டு வந்தீக்கியவன்'

மீண்டும் வேதாளம் முருங்கை மரமேறிய கதைதான்.

'இன்ன பாருங்கோ. இதெல்லாம் படிச்ச பொடியன்மாரட வேலை. அவனியளுக்கு ஒங்களத் தெரிய. நீங்க நாப்பது வருஷம் ஊரு கத்திட்டு வந்தீக்கிய'

'ம்... ஆகுமான மனிசருக்கு அதுபோல மருவாரி செய்யாட்டி இவனியள் எப்பிடியன் இப்பிடி வேலைவெட்டி செய்த'

'இப்பதான் ஒங்களுக்கு வெளங்கிய. இந்திஸ்கூலுக்கு பிரின்சிபல் இல்லாம எவளவு கஷ்டப்பட்டன். கடசி காலத்திலசரி ரெணு மூணு வருஷம் ஊரில வேலை செய்யச்செல்லி நான் கரஞ்சி கரஞ்சி சென்னதானே'

'இவனியள் ஒருநாளும் உருப்படுகிய ல்ல அஷ்ர.்.பா... மொகத்தப் பாத்தாலும் பணியப் பாத்துக்கொண்டேன் போறது'

'கொஞ்சம் கொஞ்சமா மனிசரப் பழகச் சொல்லே எல்லம் சரிவரும்'

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. மனைவியின் வார்த்தைகளும் அவருக்குச் செமிக்கவில்லை.

எழுந்து அங்குமிங்கும் நடந்தவர் மீண்டும் சாய் கதிரையிலே அமர்ந்தார். கண்கள் முகட்டை வெறித்தன.

'நேரம் போனதாலம் வெளங்கல்ல கோப்பி ஊத்திக்கொணுவாரன்'

எழுந்து குசுனிக்குள் சென்றாள் அஷ்ர.்.பா.

அன்று ஹமீது மாஸ்டர் சற்றே வித்தியாசமாக இருந்தார்.

அயன் பிடித்து வைத்திருந்த சேர்ட், ஸாரங்களை உடுத்திக் கொண்டார். கல்யாண காட்சிகளென்று விசேட அழைப்பெதுவும் இல்லாதபோது எங்கே போகப் போகிறாரென்ற யோசனை அஷ்ர.்.பாவுக்கு.

'நான் இன்டக்கி பெரிய பள்ளிக்குப் பொகப்போற' அவராகவே பிரச்சினையைத் தீர்த்தார்.

புதிர் இன்னம் விடுபடவில்லை.

வழமையாக பக்கத்தேயுள்ள சின்னப் பள்ளிக்குத்தான் தொழுகைக்குச் செல்வார்.

'ஆ... பெய்த்திட்டு வாங்கொ'

'எஷா தொழுதிட்டுத்தான் வார'

'நல்லம் நல்லம்'

ஹமீது மாஸ்டர் வெளிக்கிட்டு நடந்தார். நடையிலே புதுத்தெம்பு.

இறுதி மூச்சுவரை அவர் இனி இந்த ஊரில்தான் வாழ்ந்தாக வேண்டும். சும்மா வாழ்ந்துவிட முடியுமா? நாலுபேர் மதிக்கத் தக்கதாக அல்லவா இருக்க வேண்டும். அதிபராக, ஆசிரியராக இருந்த மதிப்பும் கிடைக்காவிட்டால், ஏதாவதொரு வகையில் அதை ஈட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லையே.

அந்தக் காலத்தில் அவரோடு எஸ்ஸெஸ்ஸி பாஸ் பண்ணியவர்கள் மூவர். ஏனைய இருவரும் இன்று உயிரோடு இல்லை.

சம காலத்தில் படித்த இன்னும் இரண்டொருவர் ஊர் மாறிப் போய்விட்டார்கள். சிலர் வசதி வாய்ப்புடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் தொடர்பும் மாஸ்டருக்குக் கிட்டவில்லை.

ஊரில் படிப்பித்திருந்தால் மாணவர்கள் என்றொரு கூட்டம் இருந்திருப்பார்கள்தான். அப்படி இல்லாததின் தாக்கம் இப்போது தான் அவரை வாட்டுகிறது.

ம.்.ரிபுக்கு வந்து சேர்ந்துவிட்டார். பள்ளி வாசல் கலகலப்பாக இருந்தது. 'மஹல்லா நாள்' என்றால் அப்படித்தானே இருக்கும்.

'புதுமுகம்' என்பதாலோ என்னவோ எல்லோரும் சிரித்து வரவேற்றனர். நெருங்கிவந்து பழக முயன்றனர்.

எல்லா எடத்திலேம் மாஸ்டர்மாரு தான் இந்த வேலேல ஈடுபடுகிய. ஸேரும் இந்த வேலேல சேர்ந்தா பெரிய ஹைராயீக்கும்' ஓடோடி வந்து முஸாபஹா செய்தபடி அமீர்ஹாப் சொன்னார்.

அவரைச் சூழ்ந்து நீண்ட தாடியும் நீண்ட ஜிப்பாவுமாக எத்தனை பேர்!

ஹமீது மாஸ்டரின் இலக்கு தவறவிடவில்லை. அவர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

ம.்.ரிபு தொழுகையைத் தொடர்ந்து கஸ்து போவதற்கு அவரையும் சேர்த்துக் கொண்டார்கள். இஷாவுக்குப் பின் பயானுக்கும் காது கொடுத்தார்.

ஜமாஅத் போக விருப்பமானவர்கள் பெயர் கொடுக்கும் நேரம் ஒரு வருடம். நாலு மாதம்...நாற்பது நாளென்று படிப்படியாக இறங்கிவந்து மூன்று நாளில் நின்றது.

புதியவர்களில் ஓரிருவர் எழுந்திருக்க வேண்டும்.

அவரை நோக்கி அனைத்துக் கண்களும் எதிர்பார்ப்போடு நிலைக்குத்தி நின்றன.

ஹமீது மாஸ்டரும் எழுந்து நின்றார்.

குறுகிய நேரத்துக்குள் அவர் எல்லோருக்கும் அறிமுகமாகிக் கொண்டிருந்தார்.

ஒன்பது மணிக்கெல்லாம் எல்லோரும் வெளியிறங்கத் தொடங்கினர். ஹமீது மாஸ்டரும் அவர்களில் ஒருவனாக... நாளை காலையில் ஜமாஅத் போகவேண்டுமே என்ற எண்ணத்தோடு நடந்து கொண்டிருந்தார்.

'டேய் கோழிக் கள்ளனும் ஜமாஅத் பொக எழும்பினடா'

யாரோ ஒருவன் யாரையோ பற்றிச் சொன்னது அவர் காதிலும் விழுந்தது.

'எல்லாக் கள்ளனும் இதிலதான் வந்து சேரிய'. இது அடுத்தவன் குரல்.

ஹமீது மாஸ்டர் துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தார்.

அவர்கள் தங்கள் பாட்டில் தொடர்ந்து கதைத்துக் கொண்டு சென்றார்கள்.

'ஒம்பது மணியாகங்காட்டீம் பள்ளீல நின்டா?' வாசற்படியில் நின்று அஷ்ர.்.பா வியப்போடு கேட்டாள்.

'இன்டக்கி மஹல்லா நாளேன்.்.முடியங்காட்டீம் நின்ட' மகிழ்ச்சியோடு சொன்னார்.

'ம். ஜமாதுக்காரரு காலடிக்கி வந்து வந்து கூப்பிட்டும் இவளவு நாளும் பொகல்ல. இன்டக்கி நீங்களே தேடிப் பெய்த்தீக்கி'

அஷ்ர.்.பாவுக்கு வியப்பாகத்தானிருந்தது.

'அதுமட்டுமல்ல நாளக்கி மூணு நாள் ஜமாஅத்தில பொகேம் பேரு குடுத்தீக்கி.'

'ம்... இப்பதான் ஒங்களுக்கு புத்தி வந்தீக்கி'

'அப்ப மூணு நாளைக்கும் நீங்க...?' தனிமைப் பிரச்சனையைத் தொட்டுக் கேட்டார்.

'அசல் மனிசரீக்கிதானே... அடுத்தூட்டு ஷாமிலாவைக் கூப்பிட்டெடுக்கியன்'

'சரி ஏன்ட பேக்கத்தேடி எல்லாம் ரெடியாக்கி வையங்கொ'

'ம்... வாங்க வாங்கொ சோறு போட்டீக்கி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ர∴பாவுக்குக் குதூகலமாக இருந்தது. கணவனின் போக்கில் ஏற்பட்டு வரும் மாற்றமும் புதிய தொடர்புகளும் அவனது தலையிடியைக் குறைத்து விடும் என்ற எதிர்பார்ப்பு வேறு.

தட்டியெழுப்பிக் கொண்டு அதிகாலை பாங்கொலித்தது. மாஸ்டர் எழுந்து விட்ட கெடுபிடியில் அவர் மனைவியும்.

பேக் ஏலவே தயாராக வைக்கப் பட்டிருந்தது.

'ஐடிங்காட் எடுத்தா?' கோப்பி பருகிக் கொண்டிருந்த கணவனிடம் கேட்டாள்.

'நல்ல காலம் நெனவூட்டின' என்றவாறு ஹெங்கரில் தொங்கிய சேட்களைத் தடவித் தேடியெடுத்து விட்டார்.

'பீம்...பீம்...' வெளியே ஹோன் ஒலி.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தனர். இரண்டு பேர் இறங்கி வருவது தெரிந்தது.

'அமீர்ஸாவும் அக்பர்ஹாஜீம் வார' மனைவியின் காதுக்குள் பெருமை பார்க்காததால் வியப்போடு கேட்டாள்.

'ஓ...இது அக்பர் ஹாஜீட வேன். கம்மவல்ல எயாகண்டிஷன்'

'மாஸ்டர் வாங்கொ' அமீர்ஸாவின் குரல்.

'அப்ப நான் பெயத்திட்டு வாரன் அஷ்ர∴பா'

'அல்லாட காவல்'

வேன் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த அவனது நெஞ்சிலே சொல்லமுடியாத பரவசம்.

வாழ்த்துகின்றோம்

இனிய இலக்கிய நண்பர் ஜெயகாந்தன் ஞானாம்பிகை தம்பதியினரின் குமாரன் ஜெயசிம்மன் அவர்களுக்கும் திரு.கே. பாலசுந்தரம் தம்பதியினரின் மகள் உமா அவர்களுக்கும் சமீபத்தில் சிதம்பரத்தில் திருமணம் இனிதே நிறைவேறியது. பின்னர் சென்னை காஞ்சி ஹோட்டலில் புதுமணத் தம்பதிகளுக்கு வரவேற்பு உபசாரம் இடம் பெற்றது. அரசியல், இலக்கிய, சினிமா, பத்திரிகை உலகப் பிரமுகர்கள் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். மல்லிகை ஆசிரியரும் நேரில் சமூகந் தந்து வாழ்த்தினார். மனமார, நெஞ்சார மல்லிகை புதுமணத் தம்பதிகளை வாழ்த்துகின்றது.

- ஆசிரியர் -

HAPPY PHOTO

Excellent Photographers
For
Wedding, Portraits
& Child Sitting

300, Modera Street,
Colombo - 15.
Tel : 526345

சிறுகதை

மூன்றாவது பக்கம்

செ. யோகநாதன்

தலையில் அடித்துக் கொண்டே பத்திரிகையின் முக்கிய செய்தியினை இரண்டாவது முறையாகவும் படித்தான் மூர்த்தி. மனதினுள்ளே எல்லையற்ற எரிச்சலும் வெறுப்பும் பெருகிற்று. அவனையறியாத அருவருப்பும் உண்டாயிற்று. மூன்றாவது முறையும் பத்திரிகைச் செய்தியினைப் படித்தான். 'எழுத்தாளர் பரசுராமன் கைது. அரசுக்கு எதிரான எழுத்து நடவடிக்கை தான் கைதானதற்குக் காரணமா?' தலைப் புச் செய்தியினை விளக்கிய உள்ளடகத்தில் பரசுராமனின் அரசுக்கு மாறான எதிர்க்குரலே இந்தக் கைதுக்கு அடிப்படைக் காரணமெனப் பேசிக் கொள்ளப்படுகிறது என்ற முடிப்பு இருந்தது.

பரசுராமனை மனதிலே கொண்டு வந்தான் மூர்த்தி. அவன் பரசுராமனின் தகப்பன் கிருஷ்ணமூர்த்தியைத் தேடிச் செல்லும் போதெல்லாம் அவனைக் கவனித்திருக்கின்றான். ஏதாவது ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருப்பான் அல்லது எழுதிக் கொண்டிருப்பான். ஒரு வெள்ளிக்கிழமை என்று நினைவு. கிருஷ்ணமூர்த்தியைத் தேடிக் கொண்டு சென்ற மூர்த்தி, பரசுராமனையே முதலில் எதிர்கொண்டான்.

'அப்பா வெளியிலை போயிருக்கிறார். கொஞ்ச நேரத்திலை வந்திடுவார். உட்காருங்க.'

வேர்வையைத் துடைத்துக் கொண்டே உட்கார்ந்தவனிடம் பத்திரிகையொன்றினைக் கொடுத்தான் பரசுராமன்.

'இதைப் படியுங்க...'

பத்திரிகையை அவன் பெற்றுக் கொண்டதும், 'நான் எழுதிய விஷயம் ஒன்றும் வெளியாகியிருக்குது. படித்துப் பார்த்து அபிப்பிராயம் சொல்லுங்க...' என்றான்.

மூர்த்தியின் மனம் ஒரு நிலையில் இல்லாதபோதிலும் அந்த இளைஞனின் மனது புண்படுவதனை அவன் விரும்பவில்லை. ஆனாலும் அக்கா செல்வதி சொன்ன வார்த்தைகள் காதோடு கேட்டன. 'தம்பி, இனியும் கிருஷ்ணமூர்த்தியை நம்பிப் பிரயோசனமில்லை. அந்த இந்தக் கதை வேணாம். வாங்கின காசைத் திருப்பித் தந்திடு என்று சொல்லி, வேணு மெண்டால் சண்டை பிடிச்செண்டாகுதல் அந்தக் காசை வாங்கிவந்திடு. ஒன்றரை லட்சம் ரூபா. வாங்கி இந்த எட்டாந் திகதியோடை ஒரு வருஷம் முடியப் போகுது. அதுக்கு இன்றைக்கு என்ன வட்டி வரும்...'

பரசுராமனின் கட்டுரையில் கவிஞர் ஒருவரைப் பற்றி காரசாரமாக விமர்சனம் வைக்கப்பட்டிருந்தது. அவரது கவிதையைப் பற்றி எதுவுமே விமர்சிக்கப்படாமல், அவருடைய உடலமைவு, கீச்சிட்ட குரல் சுருட்டுப் பிடிப்பதன் மூலம் அவருடன் யாருமே பேசமுடியாதிருக்கிற நிலை என்பனவற்றை தடுக்கும் வார்த்தைகளில் எழுதியிருந்தான் பரசுராமன். இப்படியானோர் பற்றி போலாந்துக் கவிஞர் இக்னுபாயன் சொன்ன கருத்தும் மேற்கோளாகக் கையாளப்பட்டிருந்தது. அடைப்புக்குறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் இக்னுபாயனின் பெயர் ஆங்கிலத்தில்,

அந்தக் கட்டுரையில் கவிஞரின் தனி அடையாளங்களை மிகக் கீழ்த்தரமாக எழுதியிருந்ததைப் படிக்கையிலே மூர்த்தியின் மனம் அருவருத்தது.

'கட்டுரை எப்படி?'

ஆர்வத்தோடு கேட்டான் பரசுராமன்.

'தனிப்பட்ட முறையில் உங்களுக்கு இவரோடு பிரச்சனையா?'

கீழ்க்கண்களால் பரசுராமன் மூர்த்தியில் பார்வையைப் பதித்தான்.

'ஏன் கேட்கிறீங்க?'

'தனிப்பட்ட முறையிலை அசிங்கமாகத் தாக்கி இருக்கிறீங்க...கவிதையைப் பற்றி ஒரு வரி விமர்சனம் கூட இல்லை...'

நெற்றியை விரலால் வருடினான்.

'ஒரு படைப்பாளிக்கு இரண்டு பக்கங்கள் இல்லை. ஒரே ஒரு பக்கந்தான் இருக்க வேண்டும்...'

'ஆனால் நீங்கள் ஒரு பக்கத்தைத்தான் எழுதியிருக்கிறியள். அதுகூட சரியென்று எப்படி நம்பலாம்?'

பரசுராமனின் முகம் சுருங்கிற்று.

'அவருடைய முழுக்கவிதையையும் படித்தனீங்களா?'

'இல்லை, ஆனால் அவருடைய கவிதை பற்றி சூரியன் சிங்கராசன் எழுதின விமர்சனம் படித்திருக்கிறன்...'

'யார் அது?'

'இப்போது பேசப்படுகிற விமர்சகன்... எனது நண்பன்...'

'ஓ...' என்ற மூர்த்தி, 'அவரைப்பற்றி நான் கேள்விப்படவே இல்லை' என்றான்.

'அவன் ஹங்கேரிப் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் துறை ஆய்வாளன்...'

வியப்போடு கேட்டான். 'எப்படி ஹங்கேரிக்குப் போனவர்? ஆச்சரியமாயிருக்கே.. சொல்லுங்க...'

'இதெல்லாம் அவரவர் கெட்டித்தனம். இன்னும் சொன்னால் அந்தரங்கம்...'

மூர்த்தி பேப்பரை மடித்து வைத்தான்.

'அப்பாவை இன்னுங் காணவில்லையே!'

'வந்திடுவார், பத்து நிமிஷம் பாருங்க. இல்லையென்றால் நாளைக்கு வாருங்க...'

'பறுவாயில்லை, இருக்கிறன்...'

'அப்ப இந்தக் கவிதையையும் பாருங்க...'

பதினாறு பக்கச் சஞ்சிகை. வாங்கினான்.

நெருப்பு, நீர், காற்று, சுழற்சி, சேகரம், துயரம், மீளல் என்ற சொற்கூட்டங்கள், திரும்பத் திரும்ப.

வெறுமையாக அவனைப் பார்த்தான்.

'இந்தக் கவிதைக்கு எனக்கு நிறையவே பாராட்டுக்கள். எனது ரௌத்ரக்குரல் பலரையும் கவர்ந்தது. சிறந்த படிமக் கவிதை என்று சூரியன் சிங்கராசன் எழுதினான். பரசுராமன் என்ற சொல்லின் அர்த்தமாக நான் மாறி விட்டேனாம். புராண காலப் பரசுராமன் கையில் கோடரியைக் கொண்டு திரிந்தது போல நான் பேனாவை ஆயுதமாகத் தரித்திருப்பதாக சூரி குறிப்பிட்டான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'

தலையைச் சொறிந்தான் மூர்த்தி.

'நான் சகல அநீதிகளுக்கும் எதிராகக்குரல் கொடுக்கிறவன். எதற்கும் சமரசப்படாதவன்...'

'தம்பீ...'

'என்ன?'

'அப்பா...'

'நான் என்ன செய்ய?'

சிலகணங்கள் யோசித்துவிட்டு மூர்த்தி சொன்னான்.

'தம்பி, அப்பா வெளிநாட்டுக்கு என்னை அனுப்பி வைக்கிறதாக சொல்லி ஒன்றரை லட்சம் ரூபா வாங்கினவர். வாற எட்டாந் திகதியோடை ஒரு வருஷம் முடியப் போகுது. எனக்கு நம்பிக்கை விட்டுப்...'

சட்டென்று குறுக்கிட்டான் பரசுராமன்.

'யாருங்க... இது அப்பாவுக்கும் உங்களுக்குமான தனிப்பட்ட விஷயம். இதை என்னோட பேச வேண்டாம்...'

சொல்லி வைத்தாற் போல உள்ளே வந்த கிருஷ்ணமூர்த்தி, வெறித்தபடி நின்ற மூர்த்தியை எரிச்சலோடு நோக்கினான். பிறகு பரசுராமனின் பக்கம் திரும்பினான்.

'பரசு, என்ன இங்கை நடக்குது?'

வெறுப்போடு, 'அவரைக் கேளுங்க...' என்றான் பரசுராமன். கண்கள் சிவந்திருந்தன.

'இல்லை...சொல்லு...'

'உங்களோடை உள்ள தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலைப் பற்றிக் கதைக்கிறார். அதுதான் அதைப்பற்றி என்னோடை கதைக்க வேணாமென்றனான்...'

'அது சரிதான்'

மூர்த்தியின் உடல் ஆடிற்று. அக்காவின் கண்ணீர் நெஞ்சை நனைத்தது. இரத்தம் சூடேறிற்று.

'ஐயா, எல்லாம் ஒரு முடிவுக்கு வரட்டும். மன்றாட்டமாகக் கேட்கிறன். நான் தந்த காசைத் தாருங்க. என்ரை வாழ்க்கை நாசமாகப் போச்சுது...'

கிருஷ்ணமூர்த்தி தீர்மானமாக அவனைப் பார்த்தார்.

'என்ன காசு நான் உனக்குத் தர வேணும்?'

அதிர்ந்து போனான் மூர்த்தி. உடல் நடுங்கி வியர்த்தது. கண்கள் மங்கினாற் போல உணர்ந்தான். கைகளைப் பொத்தி தன்னைச் சமப்படுத்தினான். உதடுகள் துடித்தன.

'ஒரு லட்சம்... வெளிநாடு போக ... நான்...'

கிருஷ்ணமூர்த்தி அலட்சியமாகச் சிரித்தான்.

'ஒரு லட்சமொ? யாரிட்டை, எப்போ... சாட்சி இருக்குதோ... எழுத்திலை இருக்குதோ?'

மூர்த்தி துண்டு துண்டாக உடைந்து போனான். உடைந்த துண்டுகள் சட்டென ஒட்டிக் கொண்டன. கோபம் இரத்த ரூபமாய்ப் பெருக்கிற்று. அக்காவின் ஆபரணங்கள் அற்ற தோற்றம், விம்முங்குரல்...

'என்னடா சொன்னனி?'

கிருஷ்ணமூர்த்தியின் சேர்ட் கொலரை இறுகப் பிடித்து உலுக்கினான்.

'டே பரசு இங்கை வாடா... இவனை அடியடா...'

மிருகமாகப் பாய்ந்தான் பரசுராமன். மூர்த்தியை உருட்டி எடுத்தான். காலால் மிதித்தான். காறி உமிழ்ந்தான்.

'இந்தப் பக்கம் இனி வராதை...'

இரவிரவாக யோசித்தபடி இருந்தான் மூர்த்தி. அக்காவின் விசும்பல் நெஞ்சைப் பிய்த்தது. உடல்வலி, மனவேதனையை அமுத்தி மிதித்தது. உறுதியான முடிவுக்கு வந்தான். இரகசியப் பொலிஸாருக்கு கடிதத்தினை எழுதி, கிருஷ்ணமூர்த்தியின் வீட்டு விலாசத்தை தெளிவாகக் குறிப்பிட்டான்.

இன்ரநெட்டில் பரசுராமனைப் பற்றிய விவரங்களை சூரியன் சிங்கராசன் வெளியிட்டான். வெளியே வந்த பரசுராமனின் பேட்டிகள் பத்திரிகையில் வெளியாகின. அவன் பொருட்டு படிமக் கவிதைகள் எழுதப்பட்டன. திடீரென்று பரசுராமன் ஹங்கேரியில் பல்கலைக்கழக ஆய்வு மையத்தில் பணியேற்றதாகச் செய்தி வெளியாகிற்று. அதே பக்கத்தில் ஆறுவரிச் செய்தி: செல்வதி என்ற பெண்ணும் (48) மூர்த்தியும் (26) நஞ்சருந்தி மரணம். காரணம் தெரியவில்லை. புலன் விசாரணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரதியின் முணுமுணுப்புக்கு ஒரு பதில்

ஜின்னாஹ்

'மரபுக்கவிதை, புதுக்கவிதைப் பிரிவினை வாதத்தை மீண்டும் மரபுக்கவிஞர்கள் தூக்கி இருக்கின்றனர். மரபு அறிந்தவர்களே அதனை உடைக்க வேண்டுமெனினும் வன்முறை வாதம் நல்லதல்ல'.

கவிஞர் மேமன் கவிதையின் குற்றச்சாட்டும் அங்கலாய்ப்புக்களும் சென்ற மாத மல்லிகையில் முணுமுணுக்கப்பட்டிருந்தன.

'மரபுக்கவிதை என்பது வெறுக்கத்தக்க ஒன்று அல்ல' என்றும், 'நல்ல புதுக்கவிதையாளன் மரபுக்கவிதையை வெறுக்க முடியாது' என்றும் கூறும் அவர் எந்த அத்திவாரத்தில் நின்று பேசுகின்றார் என்றும் எதை மேம்படுத்த முனைகின்றார் என்பதும் தெளிவாகின்றது.

முதலில் தமிழில் கவிதை என்பது என்ன என்பதை உள்வாங்க வேண்டும். புதிய வரவுகள் வரவேற்கப்படவேண்டியனவே. ஆனால் அவையே தமிழ்க் கவிதை. இலக்கியத்தின் அடித்தளமாக இனங்காட்டப்பட முனைவது தான் சினத்தை மூட்டுகின்றது.

பொருந்தாத ஒரு உவமானத்தை கவிஞர் முன் வைக்கின்றார். அது இலங்கைத் தமிழனுக்கு ஒரு வெள்ளைக்காரப் பிள்ளை பிறந்திருப்பது.

புதுக்கவிதைக்கு எந்தவொரு தமிழனும் உரிமை கோர இயலா. எழுதுபவர்களே சொல்லுகின்றனர் அது மேநாட்டுக்கவிதை இலக்கியத்தின் தமிழ் மாற்றமென்று. அதன் பிதாமார்களாகவும் எவரை எவரை எல்லாமோ சொல்லுவதோடு அதனைத் தத்தெடுத்துக் கொண்ட செவிலித் தாய்மார்களையும் பட்டியலிட்டு, புதுக்கவிதைத் தாத்தா அப்பா, சித்தப்பா, என்றெல்லாம் சொல்லுகின்றனர். வேறு சிலர் அபத்தமாகப் பாரதியை வலிந்து இழுத்துத் தமக்குத் துணை தேடுகின்றான்.

'இந்த மதிப்புக்குரிய மரபுக் கவிதையாளர்' என ஒரு நையாண்டி வசனத்துடன் தொடங்கும் மேமன்கவி தன் குற்றச் சாட்டுக்களை அகர வரிசையில் நிரைப்படுத்தியுள்ளார். அதில் ஆனா.

மரபு தெரிந்தவர்கள் தான் மரபை உடைக்க வேண்டுமென்னும் மரபுக்கவிதைக்காரரின் கூற்று. இது என்ன வேடிக்கை. சுவரண்டை வருபவன்தானே சுவரைத் தாண்டலாம்.

மரபு தெரியாத, யாம் பிலக்கணம் புரியாத சில ஞான சூன்யங்களை நாங்கள் யாப்பென்னும் விலங்கை ஒடித்துக் கவிதை பாடுகின்றோம் எனச் சொல்லும் போது, தெரிந்தவன் தான் அதனை ஒடிக்க வேண்டுமெனில் அதில் தப்பிருக்காதல்லவா?

தவிர புதுக்கவிதையாளன் மரபை ஒடித்துக் கவிதை பாடுகின்றான் என எந்த மரபுவரி அழுதான். மேமன் கவி இதற்கு ஒருவரை உதாரணம் சொல்வாரா. மரபில் உளறிப்போன சிலர் புதுக்கவிதையை தமிழ்க் கவிதைக்குள் இனங் காண்பது கூடவில்லையே.

அதனைச் சொல்லுபவர்கள் புதுக்கவிதை ஜாம்பவான்கள் தான். அதனால் தான் மரபுவாதி எரிச்சலடைகின்றான். உறுதியான ஒரு அடித்தளத்தின் மேல் கவிக் கோபுரம் எழுப்பும் அவன், ஏன் அந்தரத்தில் தொங்குபவர்கள், கண்டு பதற்றமடைய வேண்டும்.

அடுத்து 'கணனியும் கவிதைகளும்' இங்கு பொருள் தப்பாகப் புரிந்து கொள்ளப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சொல்லப்படுவது கணனி கவிதை எழுதுவது பற்றியல்ல, கணனி கவிதையை இனங்காண்பது பற்றியது. ஒரு படைப்பாளி தனது கவிதைகளைச் சரிபார்க்கத் தரும் போது அது செய்யும் பரிசீலனை அதன் முடிவு.

சொற்களில் ஏற்படும் எழுத்துப்பிழைகளை மிக நுட்பமாக அது கண்டறியும். ஏற்கனவே தனக்குள் புகுத்தப்பட்டுள்ள சரியான எழுத்துக்களைக் கொண்டு அவை மீண்டும் தன்னுள் புகுத்தப்படும் சொற்களில் உள்ள பிழைகளைத் துல்லியமாகச் சொல்லி விடுகின்றது. அதுபோல் தான் கவிதை பற்றிய வடிவங்களை முன்னரே அதனுள் புகட்டிவிட்டு, அதற்குப் பொருந்தும் வகையில் நாம் செய்யும் வேறொன்றை அதனிடம் தரும்போது அதன் தவறுகளை அது நமக்குச் சொல்லும். அல்லது அதனை கவிதையல்ல என நிராகரிக்கும். இந்நிலை எங்கு சாத்தியமாகும்.? புகட்டக் கூடிய ஒரு வடிவத்தைப் புகட்டினாலன்றோ. புதுக்கவிதைக்குத்தான் ஒரு வடிவம் கிடையாதே. யாப்பறியாதவர்கள் யாம் பொடித்த படைப்புக்களலல்லவா அவை.

கவிஞர் சொல்கின்றார் புதுக்கவிதைகளை மனனம் செய்ய முடிவதில்லை என்று மரபாளர்கள் கவலைப்படுகின்றனராம். இங்கே மேமன்கவி குழப்பமடைகின்றார். இந்த ஆதங்கம் மரபாளனுக்கு ஏன் வரவேண்டும்? மனத்தில் பதித்துக் கொள்ளத்தக்க ஒரு கரு இருந்தால் மட்டும் போதுமே அதனை மனத்தில் பதிந்து விடும் ஒரு யாப்புள் அடக்கி அதனை அவன் பதித்துக் கொள்வான்: அந்த ஆதங்கம் இருப்பது சொல்லாவிட்டாலும் புதுக் கவிதைக்காரருக்கே.

அத்தோடு அவர் கேட்கும் மற்றுமொரு கேள்வி வியப்பைத் தருகின்றது. 'மனனம் ஆகாத இலக்கியம் நல்லிலக்கியம் ஆகாதா' என்பது.

மனனம் செய்வதைக் கொண்டுதானா ஒரு இலக்கியம் நல்லிலக்கியமாகக் கணிக்கப்படுகின்றது. இதற்கு அவர் சாதகமாக டொல்ஸ்டாயின் படைப்புக்களையும் தொல்காப்பியத்தையும் துணைக்கழைக்கின்றார்.

தொல்காப்பியம் இலக்கிய நூலாக அன்றி அது ஒரு இலக்கண நூலாக அல்லவா கணிக்கப்படுகின்றது. மேலும் அன்று மனனம் செய்து வைக்க வேண்டிய தேவை காரணமாகவே இலக்கணம் தோன்றியது என்கின்றார் நண்பர். இலக்கியத்திற்குத் தானே இலக்கணம் தோன்றியது.

மனிதன் ஓசையைத் துணையாய்க் கொண்டு தன் கருத்தை வெளிப்படுத்தினான். பின்னர் அந்த ஓசைக்கு இயைய இலக்கணம் வகுக்கப்பட்டது. நாட்டுப் பாடல்களுக்கு இலக்கண மூலமென்ன?

மனத்தில் பதிவு செய்து கொள்ளவே மருத்துவக் குறிப்புக்களும் செய்யுள் உருப்பெற்றன என்கின்றார் மேமன்கவி. அது சரியானதே. இதிலிருந்தே மனத்தில் பதித்துக் கொள்ள கவிதைக்கு இலக்கணம் வேண்டுமென்பது புலனாகின்றதே.

மேலும் இன்று ஒன்றைப் பதிவு செய்து வைக்க எம்மிடம் எத்தனையோ சாதனங்கள் இருப்பதால் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டிய தேவையற்றுப் போகின்றது என்னும் குழந்தைத் தனமான மேமன் கவியின் வாதம் வருத்தத்தைத் தருகின்றது.

ஒரு செய்தியை மனத்தில் பதித்து வைப்பதற்கும், கணனியில் பதி[illegible]ற்கும் எத்தனை வேறு பாடுகள். நி[illegible]ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டுக் கொள்ளும் நமது மூளையை உலகில் எந்தக் கணனியினாலும் வென்றுவிட முடியுமா? மூளை நம்மோடுதான் இருக்கின்றது. கணனி வீட்டில் உறங்குகின்றது. அதற்கு வீடு சென்று உயிர் கொடுத்து, தேடிய பின்னர் தான் தேவையானது தேறும். இதனைக் கணனியுடன் உறங்கும் கவிஞர் மேமன் ஏற்றுக் கொள்வார்.

இராமாயணமம், மாகபாரதமும் மனனம் செய்யப்பட்டதால்தான் வாழுகின்றனவா? இது அவரின் மற்றுமொரு கேள்வி. அதற்கு 'ஆம்' என்பதே எமது பதில்.

என் மனத்தில் கம்பன் வாழ்வதும், அவன் காவியம் வாழ்வதும், நான் மனனம் செய்து கொண்ட அவன் கவிகளாற்றான். அதுமட்டுமா வள்ளுவனின் குறளும் அவ்வையின் ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும் நமது மனத்தில் அழியாது நிலைப்பது மனனம் செய்யப்பட்டதால்தான். அவ்வாறு அவை எழுதப்பட்டதால்தான்.

மேமன் எந்தச் சிந்தாந்தத்தைத் தன் அறிமுகத்திற்காகத் தாங்கிக் கொண்டிருந்தாலும் அவர் அடிமனத்தில் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கும் ஆழமான பதிவு திருக்குர்ஆனின் வசனங்கள் தரும் அற்புதமான ஓசை நயத்தை ஏற்றுக் கொண்டு மனனம் செய்வதன் மேன்மைகளையும், மனனம் செய்ய மொழிக்கு இலக்கணம் வேண்டும் என்பதையும் நிச்சயம் ஏற்றுக் கொள்ளும். இதனை ஒரு பிழையான கருத்து என மேமன்கவி கூறவும் மாட்டார்.

அத்தோடு மற்றுமொரு உதாரணத்தையும் முன் வைக்கலாம். புதுக்கவிதையின் தாத்தா இந்தியாவின் மேத்தா முதல் இலங்கையில் எங்கள் மேமன் முதல் இன்றுள்ள புதியவர்கள் ஈறாய் புதுக்கவிதையின் மேன்மை சொல்ல பெரும்பாலும் உதாரணமாய்க் கொள்ளும். இரவில் வங்கினோம்... என்பதும் 'நாங்கள் சேற்றில் ... என்னும் இரு புதுக்கவிதைகளைத் தானே. அதற்குக் காரணம் என்ன? அனைவரின் மனத்திலும் பதித்துக் கொள்ளத் தக்கதாய் அதில் பேசப்படும் ஓசைக்குக் காரணமான யாப்பமைதி தானே.

மேமனின் 'ஈ' எழுத்து ஆதங்கம் 'இந்த மரபாளருக்கும் புதுக்கவிதை பற்றித் தெரியாததனாலோ என்னவோ துணுக்குகளை எல்லாம் புதுக்கவிதைகளாக எண்ணி மரபுக் கவிதைகளோடு ஒப்பிடுகின்றார்கள்' என்பது.

இங்கே ஒன்று புரிகின்றது. மேமனின் கருத்துப்படி புதுக்கவிதைக்கும் ஒரு அளவுகோல் உண்டு என்பது. உண்மைதான். இருக்க வேண்டும் என்பது தானே எமது அவா. அது எது?

'நல்ல மரபுக் கவிதைகள் போல நல்ல புதுக்கவிதைகளும் தமிழ் இலக்கியப் பரப்பில் பதிவாகி உள்ளன" என்கின்றார் கவி.

எங்கே! புத்தகங்களில், கணனிகளில் தானே. மனத்திலன்று அல்லவா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதே.

''மரபிலோ, அன்றிம் புதிதிலோ எழுதப் பட்டாலும் அவை கவிதைகளாக இருக்க வேண்டும்." இதனை ஓசையை, கருவை முதலாய்க் கொண்டு மரபுக்கவிதைகளை அளந்துவிடலாம். புதுக்கவிதைக்காரர்கள் ஒருவர் கவிதை என்பதை மற்றவர் துணுக்கு என்னும் போது நல்லது கெட்டதைப் புரிந்து கொள்வது.

இலக்கணம் இல்லாத ஒன்றை கவிதையல்ல என ஒதுக்குவது, தந்தையின் உருவத்தில் தனையன் இல்லை என ஒதுக்குவது போலாம்.

இங்கே தந்தை மகன் உவமை பொருந்தாது ஒரு மனிதனையும், கைகால் இல்லாத முண்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதே பொருந்தும்.

முண்டத்தை நாம் ''முண்டம" என்போம். அதில் யாருக்கும் மறுப்பில்லை. ஆனால் அதுவும் மனிதன் தான் என்பதன்றி ''அதுதான் மனிதன்" என்று சாதிக்க முயல்வதும் தான் வேண்டாம் என்கின்றோம்.

இறுதியில் ஒன்று புதுக்கவிதை தமிழுக்குள் வந்த ஒரு புதுவடிவம் என ஏற்றுக்கொள்வோம். இயலுமாயின் நம் மொழிக்கியைய ஒரு ஒழுங்கமைப்பை நிறுவுவோம். அது வேண்டாம் கட்டுப்பாடும், ஒழுங்குகளும், விலங்குகள் என்றால், அது இருக்கும் வடிவத்தில் விட்டுவிடுவோம். ஆனால் வீண் பிடிவாதம் செய்யாமல் அனைவரும் நம் மொழியின் உயர்வைத் தெரிந்து கொள்ள கவிதை இலக்கணத் தைப் பயில்வோம். பின்னர் அதனை உடைப்பது பற்றிச் சிந்திப்போம்.

வாழ்த்துகிறோம்.....

லண்டனில் வாழ்ந்து வரும் இலக்கிய நெஞ்சம் மிக்கவரான சிறீகெங்காதரனின் சகோதரி பாப்பாவுக்கும், திரு. சு. இராஜரத்தினம் அவர்களுக்கும் கொழும்பில் நடந்த திருமணத்தையொட்டி வெள்ளவத்தையிலுள்ள ஹோட்டல் ஒமேகாவில் வரவேற்பு உபசாரமொன்று நடைபெற்றது. ஏராளமான நண்பர்கள் இந்த இராப் போசன விருந்தில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இதில் குறிப்பிடக்கூடிய அம்சமென்னவென்றால் வந்தவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப் பெற்ற வாழ்த்துப் பைகளில் ஈழத்து எழுத்தாளர்களது படைப்புக்களும் இடம் பெற்றிருந்தன. முக்கியமாக ஒவ்வொரு பையிலும் மல்லிகை இடம் பெற்றிருந்தது, எமது நெஞ்சுக்கு இதமாக இருந்தது. இது ஒரு குறிப்பிடத்தக்க சம்பவமாகும். பலரும் இதைப் பாராட்டினர். பலரும் தொடர்ந்து பின்பற்றத்தக்க முன் மாதிரியாகும் இது. ஓர் இலக்கிய நேசிப்பு நெஞ்சத்தால் மாத்திரமே இதைச் செயல்படுத்த முடியும் என்பது இங்கு கவனிக்கத் தக்கதொன்றாகும்.

மல்லிகையின் சார்பாக மணமக்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

- ஆசிரியர்

மல்லிகை ஆண்டுச் சந்தா

சுவைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் மல்லிகையுடன் தொடர்புகொள்ளுங்கள்

ஆண்டுச் சந்தா 250/-

தனிப்பிரதி 20/-

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

201 - 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு - 13

தொலைபேசி : 320721

தொலைநகல் : 320721

(காசுக்கட்டளை அனுப்புவோர் Dominic Jeeva, Kotahena. P.O எனக் குறிப்பிடவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானியலின் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும்

லெனின் மதிவானம்

சொத்துடமையை தமதாக்கிக் கொண்டு ஆதிக்கம் மிகுந்தவர்களாகக் காணப்பட்ட வேளாளர் தமக்கு அடிமைகளாகக் கொண்டு வந்த சாதிய ரீதியாகத் தாழ்த்தப் பட்ட மக்களைத் தமது நிலங்களில் சிறுசிறு குடிசைகள் அமைத்துக் குடியேற்றினர். தமக்குத் தேவையான அடிமைகளைத் தென்னாட்டிலிருந்து விலை கொடுத்து வாங்குபவர்களாகவும், பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்ற போது சீதனப் பொருட்களுடன் சேர்த்துத் தமது அடிமைகளையும், தாரை வார்ப்பு செய்கின் றவர்களாக வேளாளர் சாதியக் குழுமத்தி னர் காணப்பட்டனர். அத்துடன் தத்தமது கிராமங்களில் காணப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்ளையும் தமக்கு அடிமைகளாக்கிக் கொண்டதுடன், அவர்களின் உழைப்பை யும் சுரண்டத் தலைப்பட்டனர். தமது வேலைகளைச் செய்யத் தவறுமிடத்து பகிரங்கமாகக் கட்டிவைத்துத் தண்டிக்கவும், தமக்கெதிராக மக்கள் எழுகின்றபோது தமது நிலங்களிலிருந்து வெளியேற்றவும் குடிசைகளுக்கு தீ மூட்டவும் (ஓலையினால் அமைத்திருந்ததால் இலகுவாக தீ மூட்ட லாம். இதன் காரணத்தால் தாழ்த்தப்பட்ட வர்கள் வீடுகள் கட்டுவதற்கும் வேளாளர் எதிராக இருந்தனர்) செய்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பிற நாட்டினர் கூட இச் சாதிய அமைப்பு முறையினை அப்படியே பாதுகாக்கத் தலைப்பட்டனர். பறங்கிசிறை, கம்பனிசிறை முதலியன சாதியத்தால் அவர்கள் பெற்ற லாபத்தின் வெளிப்பாடாகவே காணப்படு கின்றது எனலாம். யாழ்ப்பாண சமூக அமைப்பின் அடிநிலை மக்கள் ''இழப்பதற்கெனச் சொத்துடமையேதுமில் லாத கூலி அடிமைகள்'' ஆவர். நிலப் பிரபுத்துவம் தோற்றுவித்த சொற்ப கூலிக் காக உடல் உழைப்பை விற்கும் அடிமை வர்க்கமாகவே இப்பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு உடமை யாளனுக்கும், உழைப்பை விற்பவர்களான தலித் மக்களுக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தியுறவே, யாழ்ப்பாணச் சமூகத்து மனிதவூடாட்டத்தின் அடிப்படையாகும். இ·து ஓர் முரண்பாடுடைய உறவு. அது வும் நேச முரண்பாடன்றி பகை முரண்பா டேயாம். வரலாற்றை பரிணாமமடையச் செய்யும் வர்க்க போராட்டம் என்பது சாதி யம் வடிவிலே இங்கு காணப்படுவதனை அறியலாம்.

ஓர் நாகரீக சமூகத்தின் மூலத்தைப் போலவே ஒருபுறமான சமூகவுருவாக்கமும் மறுப்புறமான ஒடுக்கு முறைகளின் செயற் பாடும் தாம் தனித்துவமான இனம் என்ற உணர்வை பலப்படுத்தியிருக்கின்றது. இந்த உணர்வின் பிரக்ஞையின் எதிரொலியா கவே வட இலங்கையில் சாதிய எதிர்ப்பு போராட்டங்களும், சேவையாற்றும் இந்திய உற்பத்திகளும் தோன்றியுள்ளன. அண்மை க்காலத்தில் இவ்வுணர்வின் முக்கியத்துவம் முனைப்படைந்து வந்துள்ளதை காண லாம். இவ் விடயத்தில் தொனிக்கின்ற பொருளை மேலோட்டமாக அர்த்தப்படுத் திப் பார்க்கும் போது குறுகிய வாதமாக படலாம். சற்று ஆழமாக நோக்குகின்ற போது தான் ஓர் ஒடுக்குமுறைக்கு உட் பட்ட மக்கள் சமுதா யத்தின் இனத்துவ அடையாளத்தை சமூக வுருவாக்கத்தை அங்கீகரிக்கும் போக்காகவும் இக்குரலை காண முடிகிறது.

அவ்வகையில் யாழ்ப்பாண சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் காலத்துக்கு காலம் ஏதோ ஒரு வகையி லும் அளவிலும் முனைப்படைந்தே வந்துள் ளது எனலாம். இருப்பினும் அதன் ஆரம்ப கால போராட்டங்கள் ஓர் ஸ்தாபன மயப் படுத்தப்பட்ட போராட்டங்களாக முன்னெடு க்கப்படவில்லை. அவ்வகையில் நோக்கு கின்ற போது 1910ம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற வட இலங்கை தொழிலா ளர் சங்கம் இத்துறையில் முதற்கட்ட சாதனையாக அமைந்திருந்தது. இதன் உச்ச வளர்ச்சியான, பரிணாமத்தை நாம் அறுபதுகளில் தோற்றம் பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்ட எழுச்சியில் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வியக்க எழுச்சிக்கு பின்புலமாக இருந்த சர்வதேசிய, தேசிய நிலைமைகள் பற்றி நோக்க வேண்டியது அவசியமான தொன்றாகும்.

''அறுபதாம் ஆண்டுகள் சர்வதேசிய ரீதியாகப் பெரும் எழுச்சிகளும், போராட்டங் களும் முன்னெழுந்து சென்ற தசாப்த கால மாகும். ஆசியாவிலே அமெரிக்க ஏகாபத் தியத்திற்கு எதிரான நேரடிப் போராட்டத்தில் வியட்னாம், லாவோஸ், கம்போடியா மக் கள் புயலென எழுந்து நின்று போராடினர். அதன் எதிரொலி ஏனைய ஆசிய நாடுக ளில் மட்டுமன்றி உலகம் பூராகவும் எதிரொ லித்தது. ஆபிரிக்க நாடுகளில் காலனித்து வத்திற்கும் எதிரான போராட்டங்கள் ஒன் றன் பின் ஒன்றாக முன்னேறிச் சென்றன. லத்தீன் அமெரிக்கா நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் வலுவடைந்தன. அமெரிக் காவில் வெள்ளை நிற வெறிக்கு எதிராக கறுப்பு இனமக்கள் பெரும் போராட்ட சுவாலையை உருவாக்கினர்.

ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்க ளும், மாணவர்களும் முதலாளித்துவத்தின் விளைவுகளுக்கு எதிராக வேலைநிறுத்தங் களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர். இதே காலப் பகுதியில் தான் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் புரட்சி கர கருத்துகளுக்கும், நவீன திரிபுவாத கருத்துகளுக்குமிடையான வாதப் பிரதி வாதங்கள் உச்ச நிலையை அடைந்தன. அதைத் தொடர்ந்து சீனாவில் கலாச்சாரப் புரட்சி இடம்பெற்றது. இந்தியாவில் நக்சல் பாரி போராட்டம் வெடித்தது.

இத்தகைய சர்வதேச எழுச்சிகளினதும், போராட்டங்களினதும் தாக்கம் இலங்கையி லும் எதிரொலிக்கச் செய்தது. தென்னிலங் கையில் தொழிலாளர்களின் போராட்டங்க ளுடன் பல்கலைக்கழக மாணவர்களின் முன்னுதாரணம் மிக்கப் போராட்டங்கள் முன்சென்றன. மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மத்தியில் புரட்சிகர கருத்துக்கள் பரவி வர்க்கப் போராட்டப் பாதையில் நம்பிக்கை வைத்து அணி திரண்டு போராட முன் வந்தனர்''

(வெகுஜனன், இராவணா - 1989)

இக்கால கட்டத்தில் வட இலங்கையில் வீறு கொண்டெழுந்த தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கமானது புதியதோர் பரி ணாமத்தை எட்டியிருந்தது. அவை மக் களை நோக்கி வேர் கொண்டு கிளை பரப்பியபோது, புத்திஜீவிகள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என பல ஆளுமைகளை ஆகர்ஷித்திருந்தது. தீண்டாமைக்கு எதிரான போராட்டமானது சொத்துடையவர்களுக்கும், சாதிய வெறி யர்கட்கும் எதிரான போராட்டம் என்பத னையே இவ்வியக்கம் அடிநாதமாகக் கொண்டிருந்தது. எதிரி யார்? நண்பன் யார்? என்பதில் மிகத் தெளிவான பார் வையை முன்வைத்தது. தெளிவாக நோக் கின் சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதி ரான வர்க்கப் போராட்டம் என்ற சமூக விஞ்ஞானத் தளத்துடன் இணைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தமை அதன் பலமான அம்சமாகும்.

யாழ்ப்பாண தமிழ் நாவல்கள் கூறும் தலித் உணர்வுகளும் போராட்டங்களும்.

இத்தகைய பின்னணியில் வட இலங்கையில் சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளையும், முரண்பாடுகளையும், போராட்டங்களையும் சித்தரிக்கும் நாவல்களை எடுத்து நோக்குகின்றபோது அவை பின்வரும் இரு தளங்களில் / நிலைப்பாடுகளில் இலக்கியமாக்கப்பட்டுள்ளதை காணலாம்.

1. சாதிய அமைப்பின் வெளிப் பரிமாணத்தை எடுத்துக் காட்டி, அதனை மனமாற்றத்தினூடாக தீர்த்துவிடலாம் என்ற நிலைப்பாடு.
2. சாதியத்தின் அகப்புற பரிமாணங்களைக் கண்டு, அதன் மூலவேரான பொருளாதார மாற்றத்திற்கான சமூக மாற்றப் போராட்டத்தை முன்நிறுத்தும் நிலைப்பாடு. இடைக்காட்டார் எழுதிய நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (1925) நாவலே யாழ்ப்பாண தலித் மக்கள் பற்றி தோன்றிய முதல் நாவலாகும். ஓர் உயர்சாதி ஆணுக்கும், தாழ்ந்தசாதிப் பெண்ணுக்கும் பிறக்கின்ற குழந்தையான நீலகண்டன் தனது தந்தையின் சொத்துக்களை அனுபவிக்க முடியாமல் இடறுவதையும், பின்னர் அவ்விடையூறுகளை வென்று சொத்துக்களைப் பெறுவதையும் இந்நாவல் காட்டுகின்றது. இத்தகைய போக்கில் கால் பதித்து நிற்கின்ற நாவல்களாக அழகவல்லி (1925) நெல்லையானின் காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1937) முத்தம்பி செல்லையாவின் சுந்தரரை அல்லது இன்பக் காதலர் (1938), செல்வநாயகத்தின் சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி (1938), முதலியன அமைந்து காணப்படுகின்றன. இவற்றில் சாதிய முரண்பாட்டின் கொடுமைகள் சில மனிதாய கருத்துக்களினூடாக எடுத்துக் கூறப்படுகின்றது என்ற போதினும் முனைவர்.கோ. கேசவன் குறிப்பிடுவது போல ``இவை சாதிய முரண்பாட்டின் வெளிப் பரிணாமத்தையே சுட்டிக் காட்டின'' என்பதே பொருந்தும்.

டானியலின் சமகாலத்தில் யாழ்ப்பாண தலித் மக்கள் பற்றி எழுந்த நாவல்களில் முன்னர் குறிப்பிட்ட முதலாவது பிரிவில் அடக்கக்கூடிய நாவல்களாக செங்கையாழியானின் பிரளயம் (1975), சொக்கனின் சீதா (1963), தி.ஞானசேகரனின் புதிய சுவடுகள் முதலியவற்றினைக் குறிப்பிடலாம். கலப்புத் திருமணம், தாழ்ந்த சாதியினருடனான சமபந்தி போசனம், தேநீர் அருந்துதல் முதலிய மனிதாபிமான நடத்தைகளினூடாக சாதியப் பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என நம்பினர். யாழ்ப்பாண சமூக நிலைப் பேறடைந்துள்ள சாதிய அமைப்பு முறையினையும், அதனுடன் தொடர்புபட்டுள்ள உற்பத்தியமைப்பினதும் தாத்பரியங்களை விஞ்ஞானபூர்வமான தத்துவார்த்த அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் திராணியற்றவர்களாய் இவர்கள் காணப்பட்டமையால், வெறுமனே முரண்பாட்டின் வெளித் தோற்றத்தினைக் கண்டு அதனை மனமாற்றத்தினால் தீர்த்துவிடலாம் எனக் கனவு கண்டனர். பண்டைய காலம் தொடக்கம் இன்றுவரை சாதியம் தொடர்பாக ஆங்காங்கே கூறப்பட்ட மனிதாய கருத்துக்களை வைத்துச் சாந்தியும் சமாதானமும் பேசிய இவர்கள் தீண்டாமையை எதிர்த்துப் போராடாதே என்ற தத்துவத்தைப் போதிப்பவர்களாக இருந்தனர். மந்திரத்தால் மாங்காய் விழாது என்பதனை போல மனமாற்றத்தால் சாதியமைப்பினை மாற்றிவிடலாம் எனக் கனவு காண்பது வக்கற்ற புலம்பல்களுக்கு இட்டுச் செல்வதாக அமைந்திருந்தது.

இவ்விடத்தில்தான் மற்றப் பிரிவினர் முக்கியத்துவம் உடையவர்களாகக் காணப்பட்டனர். கலை இலக்கியத்தை சமுதாய விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தலைப்பட்டவர்களாக இவர்களைக் குறிப்பிடலாம். இப்போக்கானது சுபைர் இளங்கீரனின் ``தென்றலும் புயலும்'' என்ற நாவலுடன் தொடங்குகிறது எனலாம். செ.கணேசலிங்கனின் நீண்ட பயணம் (1965), சடங்கு (1966), போர்க் கோலம் (1969), செ.யோகநாதனின் காவியத்தின் மறுபக்கம் (1976), முதலிய நாவல்களையும் இப்பண்பில் இணைத்துப் பார்க்கத்தக்க ஒன்றாகும். இந்நாவல்களிடையே அரசியல் வேகம், தெளிவு, கலைநயம் என்பனவற்றில் வேறுபாடுகள் உள்ளன என்ற போதினும், சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்டு சுரண்டல், வறுமை என்பனவற்றிற்கு உட்பட்ட மனிதர்களை தாங்களும் மனிதப் பிறவிகள் என்ற வகையில் போர்க்குணம் வாய்ந்த பாத்திரங்கள் அணிதிரண்டு ஐக்கியப்பட்டுஉரிமைக்குரல் எழுப்ப முனைவதை இப்பிரிவினர் அழகுறவே சித்திரித்துள்ளனர். டானியலின் நாவல்களும் இத்தகைய மானுட அணியிலேயே கால் பதித்து நிற்பதுடன் அவற்றிற்கு எதிரான மக்கள் இயக்கங்களில் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு சமூகப் பேரணியாகவே அவர் காணப்பட்டமையால், யாழ்ப்பாண தலித் மக்களின் உணர்வுப் போராட்டங்களையும், போராட்டடங்களையும் வீச்சுடன் இலக்கியமாக்கியுள்ளனர்.

டானியலின் நாவல்களில் - சமூக அரசியல் உணர்நிலைகளும் போராட்டங்களும்.

டானியல் தலித்தாக இருந்தமையால், அவரைப் போன்று யாழ்ப்பாண தலித் மக்களின் வாழ்வியல் அனுபவங்ளை வெளிப்படுத்துகின்ற பண்பு மேற்குறித்த எழுத்தாளர்களை விட டானியலில் மிக நுண்ணயத்துடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். ஒரு பெண்ணின் மகப்பேற்று வேதனை அப் பெண்ணைப் போன்று உள்ளார்ந்த அம்சங்களோடு விளக்குவது போல யாழ்ப்பாணத்தவர் மகளின் வாழ்வியல் அம்சங்களிலும், போராடங்களில் டானியலால் கவலைப்படப்பாக்கப்பட்டுள்ளது. அச்சமுதாய அமைப்பில் உள்ள பல வர்க்கங்களின் புறவியல்புகளையும், மனவியல்புகளையும் டானியல் ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் அறிந்து வைத்தமை யினாலேயே அவ்வகையான நாவல்களை எழுத முடிந்தது எனக் கூறலாம். இவ்வாறு இங்கு மக்களின் புறவியல்புகளையும், மனவியல்புகளையும் கணக்கிலெடுக்கும் பொழுது உள்ளார்த்தமான இயல்பின் வெளிப்பாடான கலகத்தையும், எதிர்ப்புண ர்வுகளையும்அவரது நாவல்கள் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளன? அவற்றின் பலமான அம்சம் என்ன? பலவீனமான அம்சம் என்ன? என்பவைகள் குறித்து ஆராய முற்படுபோம்.

டானியலின் பஞ்சமர் வரிசை நாவல்களில் முறையே பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள்? கானல், தண்ணீர் ஆகிய நாவல்கள் குறிப்பிடத் தக்கவையாகும். தவிரவும் முருங்கையிலைக் கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர்கள் அகிய குறுநாவல்களும் குறிப்பிடத் தக்கவையாகும். இந்நாவல்களிலும், சாதிய ஒடுக்கு முறைகள், என்பன எவ்வாறான வகையில் வெளிப்படுத்திருந்தாலும், சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கி வைத்திருந்த விபச்சாரிகள், அலிகள், மாமா வேலை செய்வோர் போன்ற உதிரி வர்க்கத்தினர் பற்றி டானியலின் பார்வை படர்ந்துள்ளது. இருளின் கதிர்கள் என்பதனை இக் குறுநாவல் எடுத்துக்காட்டுகின்றன. பேராளிகள் காத்திருக்கின்றார்கள் என்ற அவரது பிறிதொரு நாவல் மீனவ மக்களின் வாழ்க்கை முறைகளையும், சம்மாட்டியாரின் ஆதிக்க தன்மைகளையும் விபரிக்கின்றது. அன்பை போதிக்க வந்த மதங்கள் பின்னர் மக்களை ஒடுக்குவதற்கு அதிகார வெறியர்களின் கைத்தடியாக எவ்வாறு பயன்படுகின்றது என்பதையும் விளக்குகின்றது.

மனிதவுணர்வுகள் அவர்களின் ாலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரப் பண்பாடுகள் என்பன எல்லோருக்கும் பொதுவானவை என்று சிலர் தத்துவம் பேசினாலும் கூர்ந்து நோக்கின் அவையும் மனிதர்களது வர்க்க நிலைப்பாடுகளுக்கு அமையாது செயற்படுவது தெளிவாகும். யாழ்ப்பாண சமூக அமைப்பில் வர்க்க அடக்கு முறை என்பது பெரும்பாலும் சாதிய வடிவிலேயே அமைந்திருந்தது. யதார்த்தமான பாத்திர படைப்புக்கு இந்த சமூகவியல் நியதியை மெத்தாளர்கள் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். இப்பண்பு டானியலில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை எடுத்துக்காட்ட ''என்னைப் பற்றி நான்'' என்ற தலைப்பில் அவர் எழுதிய குறிப்பொன்றின் பந்தியை அவசியம் கருதி இங்கொருமுறைக் குறித்துக் காட்டுகின்றேன்.

''கிராமத்தில் பிறந்து கிராமத்திலேயே வாழ்ந்த எனக்கு கிராமப் புறங்களையும், கிராமப்புற மக்களையும் சந்தித்துப் பேசி பழகிக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் கிடைத்தன. அத்துடன் 20 வயதளவில் நான் ஏற்றுக்கொண்ட அரசியல் வேலைகள் என்னை கிராமப்புறத்திற்கு இழுத்துச் சென்றுஎனது பெரும் பகுதி கவனத்தை யெல்லாம் அதில் வைத்திருக்கச் செய்தன. இது கிராம புறங்களில் நான் பல நன்பர்களைப் பெற துணைபுரிந்தது.

கிராமப்புற மக்களிடம் கற்றுக் கொள்வதற்கு எவ்வளவோ இருந்தன. இன்று இருப்பது போல் அல்லாமல் அன்று அரசியலை மக்களிடமிருந்தே கற்றுக் கொள்ளவும் அவர்களிடமே அவைகளை பரிசோதனை செய்து சரியானவைகளை ஏற்றுத் தவறானவைகளை நிராகரித்துத் தான் அரசியல் அனுபவங்களை பெற வேண்டும்.

இவ்வாறான அவரது அனுபவங்கள் ஒருபுறமிருக்க அவரது நாவல்களில் கடதாசி விளையாட்டு, வானவிளையாட்டு, உயர்சாதி இளைஞர்களின் மேன்மையும், திமிரையும் காட்டும் இளந்தாரி திருவிழா பஞ்சமர் மக்களுக்கு தனியிடம் ஒதுக்கியிருத்தல், அறிவிப்பு மலரை மாட்டல், (பஞ்சமர்) பந்தயம் என்ற பெயரில் தேங்காய் உடைத்தல், கோழி கொக்கரி சண்டை, (அடிமைகள்) நாய் வளர்க்கும் முறை, வேட்டை, ஏராக்கள் குடித்து தாய்மை எய்தும் சந்தர்ப்பம் (கோவிந்தன்) பிள்ளை வயிற்றுடன் ஒருவன் இறந்தால் அவரை பிள்ளையுடன் புதைக்க முனைவது தந்தைக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற நம்பிக்கை(உயர் சாதியினர் மட்டுமே சுமை இறக்கும் வழக்கத்தினையும் உரிமையினையும் பெற்றிருந்தனர்) தாழ்த்தப்பட்டோரின் திருமண நடைமுறைகள் (தண்ணீர்) ஒருவரை ஒதுக்கிவிடுவதற்கு அல்லது இறந்து விட்டதாக நினைத்துக் கொள்வதற்கு முருங்கை இலைக் கஞ்சி வைத்தக் கொடுத்தல் (முருங்கையிலைக் கஞ்சி) சைவ, கிறிஸ்தவ மதப் பண்பாடுகளிலான சடங்கு முறைகள், தாழ்ந்த சாதியினர் தாவணி அணியக் கூடாது (கானல்) தாழ்ந்த சாதியினர் இறந்தால் பிணத்தை எரிக்க முடியாது. பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளல் கூடாது. உயர் சாதியினர்களின் கோயில்களுக்கு செல்ல முடியாது. உணவு வேறுபாடுகள், உணவுப் பரிமாறல் என்பது சாதிக்குரிய பாத்திரங்களை கொண்டே கொடுத்தல் (பொதுவாக எல்லா நாவல்களிலும்) போன்ற விடயங்கள் யதார்த்த உணர்வுடன் படைப்பாக்கப்பட்டுள்ளன.

இவ்விடையங்களை மையமாக கொண்டு நோக்குகின்ற போது சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளையும் கலாச்சாரத் தளத்தினையும், ஒன்றாக இணைத்து நோக்குகின்ற பண்பினை காணலாம். அக் கலாச்சார பண்பாட்டு தளங்கள் எவ்வாறு சாதிய ஆதிக்கத்திற்கு உட்பட்டு செயல்படுகின்றன என்பதனையும் டானியல் எடுத்துக்காட்டத் தவறவில்லை. இவ்வகையில் முரண்பாடுகளை இலக்கிய படைப்பாக்கி தந்த நாவலாசிரியர் அதற்கு எதிரான தாழ்த்தப்பட்ட மக்களின் மனவுணர்வுகளையும், கலகக் குரல்களையும் நாவலினுடாக

வெளிக் கொணர்ந்துள்ளமை இவரது யதார்த்த நோக்கிற்கு தகுந்த எடுத்துக்காட்டாகும். உதாரணங்களுக்காக கானல் நாவலில் வரும் சின்னி தாவணி அணிந்திருந்தமையால், உயர்சாதி பெண்களால் தாக்குதலுக்கு உட்படுவதையும் அதற்கெதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றினைந்து கலகம் செய்வதையும் ஆர்ப்பாட்டமாக சின்னிக்கு தாவணி அணிந்து உயர் சாதியினருக்கென ஒதுக்கப்பட்ட வீதியிலேயே ஊர்வலமாக சென்றமையும், அடிமைகள் நாவலில் தலித்துகள் கோயிலுக்குள் செல்ல விடாது கயிறு கட்டி வைத்தல், அந்த சூழலுடன் ஒத்துப்போகும் கந்தன் முதலிய பாத்திரங்களும் அதற்கு எதிராக கிளர்ந்து போராட முனையும் சின்னப்பன் முதலானோரையும், பஞ்சமர் நாவலில் சித்தரிக்கப்படும் கோயில் பிரவேசம், போராட்டம், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் பிரேதத்தை எரிக்க முனைதல் முதலிய விடயங்களை குறிப்பிடலாம்.

சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்டு, சுரண்டல், வறுமை என்பனவற்றுக்கு உட்பட்ட மக்கள் அவற்றுக்கு மூலமான மூலதனக் காரர்களும், ஒடுக்குமுறையாளர் களுமான வேலுப்பிள்ளை(பஞ்சமர்) தம்பாப்பிள்ளையார் (கானல்) இளையதம்பி நாயினார் (பஞ்சகோணங்கள்) முதலிய கமக்காரர்களுக்கு எதிராக எழுச்சி பெறுவதையும், இயக்கமாக இணைந்து போராட முனைவதையும் டானியலின் நாவல்களில் காணக் கூடியதாக உள்ளது. இப் போராட்டங்களை அவர் தனிநபர் போராட்டமாகவோ, அல்லது குழுப் போராட்டமாகவோ சித்தரிக்காமல், பரந்துபட்ட மக்களின் வெகுசன போராட்டங்களாக சித்தரித்தமை, டானியலின் பலமான அம்சமாகும்.

இக்காலக் கட்டங்களில் சாதியடக்கு முறையினதும், தீண்டாமையினதும் பிரதான மையங்களாக ஆலயங்களும், தேனீர்க் கடைகளும் திகழ்ந்தன. எனவே அத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களை தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் முன்வந்தது. இதன் செல்வாக்கினை நாம் டானியலின் நாவல்களில் காணக்கூடியதாக உள்ளது என்பதில் இருநிலைப்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

இவ்வாறாக வெளிப்பட்ட போராட்டமானது பரந்துபட்ட உழைக்கும் மக்களைக் களமாகக் கொண்டிருந்ததுடன், இவற்றுடன் இணையக்கூடிய தேசிய ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் தன்னுள் உள்ளடக்கியே முன்னெடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதுபோல, சாதி விடுதலைப் போராட்டத்துடன் இணையக் கூடிய நல்லெண்ணங்கொண்ட உயர்சாதியினரையும், இப்போராட்டங்கள் தன்னகத்தே வரித்திருந்தது எனலாம். டானியலின் நாவல்களில் ஐயாண்ணர், சுப்பையா வாத்தியார் முதலிய பாத்திரங்களை இவற்றுக்கு உதாரணங்களாக எடுத்துக் கூறலாம். தவிரவும் அவரது கோவிந்தன் நாவல்களில் வரும் பின்வரும் பந்தி முக்கியமானது.

'நானும் ஒரு விஷயம் சொல்லப் போறன். உள்ளதுகளை நாங்கள் மறைக்கப்படாது. எங்கடை ஆக்களுக்குகையும் சில பொடியள் அவங்கடை பக்கத்துக்கு நிக்கிறாங்கள் எண்டு கேள்வி. தனித் தனியே ஆக்களின்ரை பேர்களைச் சொல்ல நான் விரும்பேல்லை. அதையும் நாங்கள் கணக்கெடுத்துக் கொள்ள வேணும்' என்ற சண்முகப்பிள்ளையின் உணர்வுகளும்,

'என்னடா கணவதியன் உங்கடை பகுதியிக்கை ஏதும் புதினமே?'

'அப்படி ஒண்டுமில்லையாக்கும், எங்கட பொடியளும் ஐயா அவையின்ர நயின்னாப் பொடியளும் சேர்ந்து ஒரு சங்கம் வெச்சவை'

'என்னடாப்பா சங்கமோ? ல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம்! ஆரடாப்பா தலைவர்?

'எங்கடை சங்கக்கடை மனேச்சற்றை நடுவிலுத்தம்பி தான் தலைவர். என்ரை அண்ன் மோன் தான் காரியதரிசி'

'என்னடா உன்ரை அண்ணன்ர மோனோ?' சின்னத்துரையன் எண்ணிறது என்ன?'

'ஓமாக்கும். அவன் தான் ஊருப்பட்ட புத்தகமெல்லாம் படிச்சிக் கொண்டு திரியான் ஏனெண்டு கேட்டா ஏதோ எல்லாம் சொல்லுறான். எங்களுக்கு விளங்காமைக் கிடக்கு'

என அவருக்கும், பரியாரி கணவதிக்கும் இடையில் நடைபெறுகின்ற உரையாடல் மூலமாக, காலமாற்றத்தினையும், புதிய சிந்தனைகளின் வளர்ச்சியினையும், ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் அதன் நேச சக்திகளும் இணைந்து செயல்படுவதனையும் காணக் கூடியதாக உள்ளன.

சாதியத்தின் கொடுமைகளையும், தீண்டாமையையும், அவற்றுக்கு எதிரான போராட்டங்களையும், சித்திரிக்க முனைகின்ற டானியலின் நாவல்கள் இயன்றவரை நடப்பியலை புரிந்து கொண்டு நியாயத்தின் பக்கம் நின்று எழுத முயன்றிருப்பதனை காணலாம். இவ்விடத்தில் தான் அவரது பலமும் பலவீனமும் வெளிப்படுகின்றது. யாழ்ப்பாண சமூக பின்புலத்தினையும், அவற்றிழையாக தோன்றும் மூலதரணக் காரர்களின் மனோபாவம், செயல் ஆகியவற்றின் மூலம் வர்க்க முரண்பாடுகளும், அவற்றினடியாக எழும் கருத்தோட்டங்களும், பெறுமதிகளும், உணர்வுகளும், நுண்ணயத்துடன் தீட்டப்பட்டுள்ளன. இவற்றை அநாவசியமான அலங்காரங்களும், வார்த்தை ஜாலங்களுமின்றிப் பொருளுக்கேற்ப மொழி நடையிலும், உருவச் செறிவுடனும், டானியல் இலக்கியப் படைப்பாக்கி தந்துள்ளார். மனித உணர்ச்சிகள், உறவுகள் என்பன கோட்பாடாக விபரிக்கப்படாமல் மனிதவுறவுகளினடிப்படையில் நாவலாக்கியுள்ளமை டானியலின் நாவல்களுக்கு உள்ளடக்கத்துக்கேற்ற கலைத்துவத்தை வளம்படுத்தியுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்டங்களை வெளிக் கொணர்வதில் டானியலின் பஞ்சமர் நாவலுக்கு முக்கிய பங்குண்டு. பெரும்பாலான சம்பவங்கள் உரையாடல்களாக இந்நாவல் வெளிப்படுகின்றன. இதன் காரணமாக கலைத்துவ சிதைவு ஏற்பட்டு, பிரச்சார தன்மை மேலோங்கியிருப்பதையும் உணரலாம். நாவலின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றான ஐயாண்ணர் பாத்திரத்தை கள்ளுக் கொட்டிலில் இவ்வாறு அறிமுகம் செய்கின்றார்.

'என்ன மாணிக்கம் ஐயாண்ணர் வந்திட்டுப் போட்டுதே'

'இல்லைச் செல்லப்பாண்ணை ஆள் வாற நேரந்தான்'

'அது பாவி இல்லாட்டி இஞ்சை வந்து போறது போல பிற சாதிக்காரன் எண்டு முகம் பார்க்காத சீவன். என்னன்டுதான் உந்தாளுக்கு இந்த உலகத்து புதினங்கள் தெரிகிறதோ கடவுளுக்குத்தான் தெரியும்!'

'இதன் பின் ஐயாண்ணர் வருகை தந்து அவரால் கூறப்படும் புதினமும் சாதி மீறிய பாலுறவும், அதனால் ஏற்படும் கொலை பற்றிய கதையும் தான். இதுவும் சாதிக் கொடுமைகளில் ஒன்று தான். ஆனால் டானியலைப் போன்ற எழுத்தை ஆயுதமாக ஏற்றுக் கொண்ட ஒரு எழுத்தாளன் பரந்த நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட ஒரு போராட்டத்தை தத்துவ வழிப்படுத்தும் குமாரவேலன் என்னும் பாத்திரமும் 'வேலுப்பிள்ளை கமக்காரனின் பேரன். சின்னக் கமக்காரர்களுக்கு இருட்டுக்கை பெத்த பிள்ளை குடத்தினைப் பள்றி வளர்த்த மகன்' (பஞ்சமர் - பக்.129) என்றே படைக்கப்படுகின்றான். வர்க்கச் சுரண்டல்கள், ஒடுக்குமுறைகள், இவற்றுக்கு மேலாக பாலியல் உணர்வுகளை முதன்

மைப்படுத்தும் இப்போக்கு பஞ்சமரில் இல்லை. பஞ்சமர் தொடர் நாவல்கள் அனைத்திலும் பாதிப்பை செலுத்தியுள்ளது. (க. தணிகாசலம் - 1997) இதுபற்றி பிறிதொரு இடத்தில் நோக்க உள்ளதால் இதனை இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

டானியலின் 'இருளின் கதிர்கள்' என்ற குறுநாவல் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களை விபச்சாரிகள், மாமா வேலை செய்வர் பற்றியது. 'ஆசை' என்ற டானியலின் சிறுகதையே இக் குறுநாவலாக விரிவாக்கம் அடைந்திருக்கின்றது.

விபச்சாரிகளின் கொடூரமான வாழ்வியல்களையும், சமூகம் அவர்கட்கு வழங்கியுள்ள ஸ்தாபனங்களையும், அவரைச் சுற்றி வாழ்வோரின் போலித்தனங்களும், இரக்கமின்மையும் அவரைச் சுரண்டி வாழத் தூண்டும் என்ற உணர்வுகளும் குறுநாவலாக்கப்பட்டுள்ளது. மனித உறவுகளிலும், சிந்தனைப் போக்குகளிலும் பணத்தின் ஆதிக்கம் எவ்வளவு தூரம் புரையோடிப் போயிருக்கின்றது என்பதனை அழகுற எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

பெரும்பாலான கதையாசிரியர்களினால் இவ்வகையான பாத்திரங்கள் படைக்கப்பட்டாலும், அவை நடுத்தர வர்க்கத்திற்குரிய பார்வையிலேயே படைக்கப்படுகின்றன. அவை பெரும்பாலும் அம்மனிதர்கள் குறித்த நையாண்டி பான்மையில் படைக்கப்படுகின்றன. டானியல் அத்தன்மையிலிருந்து சற்றே அந்நியப்பட்டு, அப் பெண்ணின் உணர்வு நிலை நின்றே தமது நாவலை எழுதியிருந்தார். பொன்னம்மாளுக்காக அனுதாபப்படும் நோஞ்சி மாமா (மாமா வேலை செய்பவர்) வர்க்க, குணாதிசயத்தை உணர்ந்து சித்திரிக்கப்பட்டிருக்கும் பாத்திரம் படைப்பாரும், இவ்வகையில் டானியலின் இக்கதை பொன்னீலனின் 'இடம் மாறி வந்த வேர்கள் (1978) என்ற கதையுடன் ஒப்பிட்டுக் கூறத்தக்க தொன்றாகும்.

டானியலின் நாவல்களில் 'கானல்' நாவல் முக்கியமானதாகும். அவரது ஏனைய நாவல்கள் யாவும் கானல் எழுதுவதற்கான பயிற்சிகளமாகவே அமைந்திருந்தது எனக் கூறலாம்.

'சமயப் போர்வையிலே இதுவரை கால சாதியப் பிரச்சனைகள் நோக்கப்பட்டு வந்தமையால் மிக சமீப காலம் வரை அதாவது நவீன காலப்பகுதிகளிலும் பலர் சமய அடிப்படையில் இப்பிரச்சனைக்கு விடிவு காண எண்ணினர். கிறிஸ்தவர், பௌத்தம் முதலிய சமயங்களை சேருவதால் சாதியப் பிரச்சனைக்கு (தம்மளவிலே) தீர்வுக் காண்பதாக பலர் கருதியிருக்கின்றனர். பிரச்சனை என்பது ஒரு முரண்பாட்டின் உருத்தோற்றமாகும். அம் முரண்பாட்டை இயக்கத்தினால் அதாவது செயலினால் போராட்டத்தினால் தீர்க்கலாமேயன்றி, அதிலிருந்து நழுவுவதனால் தீர்க்கவியலாது. அவ்வாறு வேறு மதங்களை சார்ந்த பின்னரும் வேறு வகையான ஏற்றத் தாழ்வுகளும், முரண்பாடுகளும் தோன்றக் காணுகின்றோம். எனது நிவாரணம் தவறாக இருக்கின்றது என்பதனை உணர்கின்றோம். (க. கைலாசபதி - 1969)

டானியல் தனது 'கானல்' நாவலில் இப்போக்கினை மிகச் சிறப்பாக படைப்பாக்கியிருக்கின்றார். 'உலக சகோதரத்துவத்தை அடிப்படையாக கொண்ட கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுவதன் மூலம் தங்கள் அவல நிலையை போக்கிக் கொள்ளலாம் என பல ஒடுக்கப்பட்ட மக்கள் கருதினார்கள். நாவலில் வரும் ஞானமுத்து பாதிரியாரும் அப்படியே நம்பி செயற்பட்டார். இறுதியில் பசி என்ற நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் மனிதர்களிடம் அவர் தோற்றுப் போகின்றார் என்ற விடயத்தினை யதார்த்தமாக சித்திரித்துள்ளார் டானியல். நாவலில் வரும் ஞானமுத்து பாதிரியார் பல ஆண்டுகளுக்கு முன்னர் தாம் பணிபுரிந்த சுவாமி ஞானப்பிரகாசரை நினைவுபடுத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக உள்ளது. தமிழில் தோன்றிய மிகச் சிறந்த நாவலாக 'கானலைக்' குறிப்பிடலாம். பாட்டாளி வர்க்க அடையாளத்துக்குள் சாதியம் கரைவதால் இழிவு நீங்காது என்ற வாதத்தை முன் வைக்கும் இராஜ் கௌதமன் போன்றோருக்கு, 'கானல்' உயர்சாதி சார்பு கொண்ட நாவலாக தென்படுவது தற்செயல் நிகழ்ச்சியல்ல.

டானியலின் நாவல்களை ஆதாரமாகக் கொண்டு அவரது பல்துறைசார்ந்த பங்களிப்புகளையும், ஆற்றல்களையும் நோக்கிய நாம் அவரது நாவல்களில் காணப்பட்ட சில பலவீனமான அம்சங்கள் குறித்து நோக்கத் தூண்டியது இன்றியமையாததாகின்றது.

டானியலின் நாவல்களில் வெளிப்படும் பலவீனங்கள்.

இபபோராட்டம் (தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்க போராட்டம் - கட்டுரையாசிரியரின்) இடம்பெற்ற வேளையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உத்தியோக பொருளாதார வசதி படைத்த சிலர் ஒதுங்கி நின்று கொண்டு இவையெல்லாம் தேவையில்லாத வேலைகள் என்று பிரச்சாரம் செய்தார்கள் என்பது குறிப்பிட வேண்டிய தொன்றாகும். 'ஏன் அவர்களுடைய கோவிலுக்குத்தான் போக வேண்டுமா?' என்றும் 'கடையில் ஏன் தேனீர் குடிக்க வேண்டும், வீட்டில் குடிக்கலாம் தானே? என்றெல்லாம் போராட்டத்தில் இருந்து தூர விலகிக் கொண்டார்கள். ஆனால் போராட்டங்கள் வெற்றி பெற்ற பின்பு மாவிட்டபுரத்தில் கடவுளுக்கு அருகில் நின்று அருள் பெற முன்நின்றவர்களும், தேனீர் கடைகளில் மிக இருந்து களைப்பாறியவர்களும் அதே மனிதர்கள் தான் என்பதை இப்போது பார்க்கக் கூடியதாக வுள்ளது. (வெகுஜனன் - இராவணா89), தலித் என்ற பிரகடனத்தினூடாக தனது கம்பீரத்திற்கும், வயிற்றின் பிழைப்புக்கும் வழி தேடிக் கொண்ட பாராளுமன்றக் கனவானான திரு இராஜலிங்கம் முதலியோரும் இப்போராட்டத்திற்கு எதிராக நின்றனர். இம்மனிதர்கள் பற்றி டானியல் தமது பஞ்சமர் நாவலின் முன்னுரையில்:

'சாதிய முறைக்கு எதிரான அடிக்கருவையும், 'இழிசனர் வழக்கு' மொழி வழியையும் விட்டு விட்டால் இவர்களுக்கு வேறு சாதியில்லை' என்று என்னையும், என் போன்றோரையும் நையாண்டி செய்பவர்கள் நமது இலங்கைத் திருநாட்டில் நிறையவே இருக்கின்றார்கள். கண்ணீரும் கம்பலையுமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் இந்த மக்களுக்காகவும், இவர்களோடொத்த பிரச்சனைகள் உள்ள வேறு மக்களுக்காகவும், பிறப்பின் அடிப்படையில் பேனை பிடித்து எழுத வேண்டிய கடமைப்பாடுடைய எழுத்தாளர்கள் சிலரும் (மேற்குறித்த மனிதர்களையும் உள்ளடக்கியுள்ளது - கட்டுரையாசிரியர்) இந்த நையாண்டிக் காரர்களுடன் சேர்ந்து கொண்டிருப்பதனை என்னால் இன்று உணரக் கூடியதாக உள்ளது'.

எனக் கூறும் டானியலின், 'கானல்' நாவலின் முன்னுரையில் வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அடைவதற்கான மனித இனத்தின் யுத்தத்தினால் எடுத்தாளப்படும் ஆயுதங்களில் ஒன்றாக கலை இலக்கியங்களும் இருக்க வேண்டும்' என தனது நிலைப்பாட்டை மேலும் வலியுறுத்துகின்றனர்.

டானியல் ஐம்பதுகளில் எழுதிய சிறுகதைகள் யாவும், சாதியம் கலந்த வர்க்க ஐக்கியத்தையும், ஒடுக்குமுறைக்கு எளிதான தாழ்த்தப்பட்டவர்களின் போர் குணாதிசயங்களையும் அழகுற சித்திரித்துக் காட்டியள்ளது எனலாம். அவரது நாவல்களின் முன்னுரையில் வெளிப்பட்ட சமூக யதார்த்தம் அவரது சிறுகதைகளில் வெளிப்பட்டதனை போன்று, நாவல்களில் வெளிப்படவில்லை எனலாம்.

சாதியமும், வர்க்கமும் ஒன்று எனக் கருதியதன் விளைவாக அவரது நாவல்கள்

இத்தகைய பலவீனங்களை வெளிப்படுத்தியது எனலாம். தலித் முதலாளியை, அல்லது தலித் ஒருவர் முதலாளியானால் அவரை எந்த வர்க்கத்தினுள் சேர்ப்பார் என்பது போன்ற தெளிவீனங்கள் அவரது நாவல்களில் காணப்படுகின்றன. பஞ்சக் கோஷங்கள் நாவலின் ஓர் இடத்தில் செல்லி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை திருமணம் முடிக்க முனைகின்ற சுப்பையா வாத்தியார் 'நானும் செல்லியும் ஒரு வர்க்கம் தானே எனக் கூறுவது வர்க்கம் பற்றிய அவரது குழப்பகரமான சிந்தனைக்கு தக்க எடுத்துக் காட்டாகும். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் போராட்டத்திற்கு எதிராக நின்ற தலித் பாராளுமன்றக் கனவான் பற்றி செ. யோகநாதனின் 'தலைவர்கள் (1984)என்ற குறுநாவல் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

டானியல் சாதி மீறிய பாலுணர்வு சமூக யதார்த்தமாக வெளிப்படுத்துகின்ற போது அதனை ஆணாதிக்க சிந்தனையுடனேயே எழுதுகின்றனர். 'உயர்சாதி ஆடவர்கள் கீழ்சாதிப் பெண்களைப் போகப் பொருளாக நினைக்கும் யதார்த்தப் போக்கிற்கு இலக்கிய பழிவாங்கலாக உருமாறி ஒரு போலி மனநிறைவைத் தர முயல்கிறது. இத்தகைய போலி மனநிறைவுகள் புரட்சிகர இயக்கத்திற்கு பலம் சேர்க்காது. புதினத்தை கொண்டு சொல்வதற்குரிய சுவாரசியமான கலையுத்தி என்ற அளவில் கூட இதை பயன்படுத்துவதில் தவறு உண்டு' (கோ. கேசவன் - அடிமைகள் முன்னுரையில்) எடுத்துக்காட்டாக பஞ்சமரில் வரும் கமலாம்பிகை, விதானையார் மனைவி, கோவிந்தனின் அழகப்பை வாத்தியார், தண்ணீரில் வரும் அன்னப்பிள்ளை நாச்சியார் என பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். அடிமை நாவலில் வரும் அன்னம்மா பாத்திரத்தை விதிவிலக்காக கொண்டால் அவரது நாவல்களில் வரும் உயர் சாதி பெண் பாத்திரங்கள் யாவும் சோரம் போவதாகவே சித்திரிக்கப்படுகின்றது. இவ்வாறான விடயங்கள் அவரது நாவல்களை பலவீனப்படுத்தியுள்ளன எனலாம்.

அறுபதுகளில் சாதிய எதிர்ப்பு போராட்டம் தேசியத்தின் வடிவமாக இருந்தது போன்றே தமிழ் தேசிய இனவிடுதலைப் போராட்டமும் முனைப்புப் பெற்றிருந்தது. இதனை தமிழ் முதலாளித்துவ சக்திகள் இனவாதத்தினுள் அழுத்திச் சென்றனர். இதன் காரணமாக தமிழ் ஜனநாயக சக்திகளில் ஒரு பகுதியினர் அந்த அணியை நாடத் தூண்டியவர்களாக இருந்தனர். இது சாதி இயக்கம் இவ்வணியினரை வென்றெடுக்கக் கூடியவகையில், தமிழ் இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுதல் என்ற அம்சத்தினையும் இணைத்திருக்குமாயின், அந்த ஜனநாயக சக்திகளின் ஒரு பகுதியினரை வென்றெடுத்திருக்க முடியும். டானியலிலும் இந்தவூறு வெளிப்பட்டது. அவரது பஞ்ச கோணங்கள் நாவலில் 'இந்த வாலிபர்கள் தாங்கள் தூக்கிய இந்த ஆயுதங்களை உயர்த்திக் கொண்டு புரட்சியை நோக்கிச் செல்லும் வர்க்கங்களின் பின்னால் அணிவகுத்துச் செல்லும் காட்சியும், இலங்கைத் தீவின் இனங்கள் யாவும் கைகோர்த்துக் கொண்டு குதூகலித்துக் கொண்டாடும் காட்சியும்... என்ற வரிகளும் 'போராளிகள் காத்திருக்கின்றார்கள்' நாவலில் இன வன்முறைகளினால் காதறுக்கப்பட்ட சம்மாட்டியாரின் மகன் அதற்கு பழிவாங்க சிங்கள தாய் பெற்ற பிள்ளையான அலக்ஸின் காதினை அறுத்து விடுவதனையும், அவரினைக் கொல்ல முனைவதனையும் நாவல் சித்திரிக்கின்றது. இதற்கு எதிராக அவனுடன் தொழில் புரியும் மீனவர்கள் எல்லோரும் கிளர்ந்தெழுவதனையும் காணலாம். முன்னர் குறிப்பிட்டது போன்று சிங்களவர்களுடன் ஐக்கியப்படுத்தல் என்பதனை அழகாய், படம் பிடித்த டானியலின் எழுத்துக்கள் தமிழ் இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுதல் என்ற பார்வையை முன்வைக்கத் தவறி விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானியலின் இத்த வறு அக்காலச் சூழலில் வைத்து ஆராய தக்கதொன்றாகும். அவ்வாறே எண்பதுக ளின் பின்னர் காட்டு மிராண்டித்தனமான இன வன்முறைகளால், தமிழ் மக்கள் கொல்லப்பட்டதனையும் ஓர் இடதுசாரிக்கு ரிய சிந்தனைத் திறனுடன் பார்க்கவும், அதற்கு எதிரான தத்துவார்த்த போராட்டத் தினையும் முன்னெடுக்கத் தவறி விடுகின்றார்.

டானியலின் முக்கியத்துவமும், சாதனையும்

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்விய லையும், போராட்ட உணர்வுகளையும், பிரதிபலித்து நிற்கின்ற டானியலின் நாவல் களை நோக்குகின்ற போது ஓர் சந்தர்ப்பத் தில் அறிஞர் பிளெக்னோவ் கூறியமை இவ்விடத்தில் நினைவு கூறத்தக்க தொன்றாகும்.

'மனிதர்களை மாபெரும் சமுதாயப் பிரச்சனைகள் எதிர்கொள்கின்றன. மற்றவர் களை விட யார் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக அதிகம் பணி புரிகின்றார்களோ அவர்களைத்தான் மகா புருஷர்கள் என்று அழைக்கின்றோம்'. வட இலங்கையின் சாதிய ஒடுக்கு முறைக்கு உட்பட்டு, அதற்கு எதிரான வெகுசன மக்கள் போராட்டங்கள் ஊடாக விடை காண முற்பட்ட டானியல் எம்முன் மகா புருஷனாகவே தென்படுகின்றார். அதே சமயம் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் பார்வையுடன், டானியலின் நாவல் களை ஒப்பிடுகின்ற போது, சிற்சில இடங்க ளில் பலவீனராகவும் எம்முன் காட்சியளிக்கி ன்றார். அவ்வகையில் டானியல் விமர்சனப் பார்வையுடன் உள்வாங்கத் தூண்டியவர் என்பதும் இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கதாகும்.

முடிவுரை

அண்மையில் அன்பர் ஒருவர் 'துப்பா க்கி நிழலில் சாதிகள் மறைந்து கிடக்கின் றன. மரித்து விடவில்லை' என்ற கருத் தினை முன்வைத்துள்ளார். பல்லவர் காலத் தில் நிலவுடமை வர்க்கம், வணிக வர்க்கத் திற்கு எதிராக அடிநிலை மக்களை தம் பக்கம் ஈர்க்கும் பொருட்டு சாதிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர். நிலவுடமை வர்க்கம் வெற்றிப் பெற்று சோழ சாம்ராஜ்யத்தை அமைத்த பின்னர் மீண்டும் சாதியம் மிகப் பலம் வாய்ந்த ஒடுக்கு முறைக் கருவியாக மாற்றமடைந்த வரலாற்று நிகழ்வு மேற் குறித்த கூற்றின் வலிமையை எமக்கு உணர்த்துகின்றது. எனவே சாதிய விடுத லைப் போராட்டத்தினை உழைக்கும் மக்கள் நலன் சார்ந்த போராட்டத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கு டானியல் பற்றி ஆய்வுகள் அவசியமானவையாகும்.

டானியலை தனிமனித காழ்ப்புணர்வு களால் நிராகரிக்க முற்படுவதும், அவரது பலவீனங்களை தமக்கு சாதகமாக பயன் படுத்தி வர்க்கப் பார்வையை சிதைப்பதான சாதிய தீவிரவாதத்தில் அடையாளப்படுத்த முனைவதும், அடிப்படையில் தலித் மக்க ளின் விடுதலைக்கு எதிரான குரலாகும்.

அவ்வகையில் டானியலை மக்கள் நலன் சார்ந்த பார்வைகளின் அடிப்படை யில் ஆய்வுக்குட்படுத்தி சுரண்டலற்ற மனித த்துவத்தை இலக்காக கொள்வோமாக.

(16.6.2000 அன்று மல்லிகைப் பந்தல் ஏற்பாடு செய்திருந்த டானியல் சொற் பொழிவு நிகழ்வில் வாசிக்கப்பட்ட கட்டுரை, கலந்துரையாடலின் போது திரு.சி. வன்னியகுலத்தின் கருத்துக்கள் இக்கட்டு ரையின் செழுமையாக்கத்திற்கு பெரிதும் உதவின. தவிரவும் செங்கையாழியான், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, தி. ஞானசேகரன், விஜயன், கே.எஸ். சிவகுமா ரன் போன்றோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.)

தூண்டில்

டொமினிக் ஜீவா

சிறுகதையில் சொல்லாட்சி என்பது புதிய சொற்களைப் பயன்படுத்துவதா? அல்லது கதைக்கு ஏற்றவாறு சொற்களைக் கையாள்வதா?

புத்தளம், எஸ்.எம்.ராபி

கற்பனை வளமுள்ள, நூல் பயிற்சி பெற்ற ஓர் எழுத்தாளனுக்கு அவன் தேர்ந்தெடுத்துள்ள கதைக் கருவும் பாத்திரப் படைப்புமே மொழியை இயல்பாக நல்கி, தகுந்ததோர் சொல்லாட்சியை உருவாக்கித் தரும். சொல்லாட்சியை மாத்திரம் நம்பிப் படைப்புக்களை சிருஷ்டிக்க விரும்பும் எழுத்தாளனின் படைப்பு ஓர் எழுத்துக் கூட்டமாக மிளிருமே தவிர, ஒரு படைப்பாக ஏற்றுக் கொள்ள இயலாது என்பதே எனது கருத்தாகும்.

ஒவ்வொரு மனிதனும் தான் செய்வதே சரி என வாதிடுகிறான். தவறுகளைச் சுட்டிக் காட்டினாலும் ஏற்றுக் கொள்வதில்லை. என்ன செய்யலாம்?

கிளிநொச்சி க. இரத்தினசிங்கம்.

இப்படியானவர்களுடன் நீங்களேன் நேரத்தைச் செலவிடுகிறீர்கள்? அவர்களது வழிக்கே அவர்களை விட்டுவிடுங்கள். உங்கள் மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

உங்களது சுயவரலாறு நூலை ஒரு தடவைக்குப் பல தடவைகள் ஆழ்ந்து படித்தேன். அதன் தொடரான அடுத்த நூலை எப்பொழுது வெளியிடுவீர்கள்?

ஜாஎல - அ. கணேசராஜ்

உங்களுக்குத்தான் தெரியுமே, எனது வேலைப் பளுவின் அழுத்தத்தைப் பற்றி. ஞாயிற்றுக்கிழமைகளில் கூட வேலை செய்பவன் நான். எனது சுயவரலாறின் இரண்டாம் பாகத்தை எழுதக் கூடிய ஆயத்த வேலைகள் அனைத்தையும் செய்து விட்டேன். எழுத்தில் எழுதி முடிப்பதுதான் பாக்கி. கூடிய கெதியில் அதை நூலாகத் தயாரித்து உங்களைப் போன்ற ஆர்வலர்களின் கரங்களில் தந்து விடுகிறேன்.

மல்லிகையின் 35 வது ஆண்டு மலர் பலராலும் வியந்து பாராட்டப்படுகிறதே. அதைப் பற்றிய புதிய அனுபவம் என்ன?

அ.புரம். எஸ்.சந்திரன்

எத்தனையோ நாடுகளில் இருந்தெல்லாம் மல்லிகை மலர் கேட்டுக் கடிதங்கள் வருகின்றன. எனக்கே கொள்ளை மகிழ்ச்சி. ஒரு சிற்றிலக்கிய ஏட்டின் 35 - வது ஆண்டு மலர் என்பதே ஒரு வரலாறுதான். இனி 36 - வது ஆண்டுமலர் பற்றி யோசிப்போம்.

சிலர் உங்களைத் திட்டுகிறார்களே. நீங்களோ தொடர்ந்து அது சம்பந்தமாக மௌனம் சாதிக்கிறீர்களே. என்ன காரணம்?

நீர்கொழும்பு ஆர். தவவேந்தன்.

ஏதோ ஒரு வகையில் என்னைத் திட்டித் தீர்த்துத் தமது மன அரிப்பைப் போக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவர்களை நான் என்றுமே கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. தமது இருப்பை என்னைத் தாக்குவதன் மூலம் காட்டிக் கொள்பவர்கள் இவர்கள். அவர்கள் தாக்கி எழுதுவது வெறும் பேப்பர் எழுத்து. எனது மல்லிகை எழுத்தை உங்களது பேரனோ அல்லது அவருடைய மகனோ பல்கலைக்கழக நூலகத்தில் ஆய்வுக்காக எடுத்துக் கையாளும்போது அந்த எழுத்துக்கள் ஓர் ஆவணமாகப் பயன்படுத்தப்படும். அப்படி ஆவணப்படுத்தப்படப் போகும் எழுத்தில் இவர்களது நாமமும் இடம் பெற்றுவிடக் கூடாது என்ற நெடு நோக்குக் காரணமாகவே நான் சிலரின் கருத்துக்கள் பற்றி அலட்சியம் காட்டி நிராகரித்து வருகின்றேன்.

மாத்தளைச் சிறப்பிதழ் வெளியிட்டிருந்தீர்களே. அதன் பெறுபேறுகள் என்னென்ன?

மாத்தளை எம்.கனகசபை

அங்கு வாழும் பலரின் நட்பு எனக்குக் கிடைத்துள்ளது. எனக்குக் கிடைத்துள்ள பெரும் பேறுகளில் ஒன்று. எனது இதயத்தைத் தமது அன்புப் பன்னீரால் குளிப்பாட்டி வரும் பீர் முகம்மது, மரைக்கார், ஹமீட் ஹாஜியார், சிவஞானம், பண்ணாமத்துக் கவிராயர், புவாஜி, மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் மாரிமுத்துச் செட்டியார் போன்றோர்களின் நட்பும் நெருக்கமும் கிடைத்தது பெரும் கொடை, எனக்கு. அது தவிர அங்குள்ள கல்லூரி அதிபர்களின் பேராதரவு மல்லிகைக்கு ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. திக்குவெல்லைக்கு அடுத்தபடியாக இன்று மாத்தளை இலக்கிய உலகில் பேசப்படுவதற்கு மாத்தளைச் சிறப்பு மலரும் ஒரு காரணம். துரைவி பதிப்பக விஸ்வநாதனும் இன்னொரு காரணம். ஆரோக்கியமான இலக்கியம் பேசப்படும் காலம் வரைக்கும் மாத்தளையின் பெயர் நிலைத்து நிற்கும்.

கவிஞர் அஷ்ரஃப் அவர்களது பேரிழப்பு உங்களையெல்லாம் பெரிதும் பாதித்திருக்குமே. இப்பொழுது உங்களது நிலை என்ன?

கல்முனை எஸ்.எம் ரகூஷ்

உண்மையைச் சொல்லப் போனால் இன்றும் எனக்குள் மௌனமாக அழுதுகொண்டிருக்கிறேன். ஓர் இலக்கியக் கூட்டத்திற்கு வந்திருந்தவரிடம் எனது சுய வரலாறு நூலை அவசர கதியில் கொடுத்து வைத்தேன். இரவே அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டார். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. ஏழு தடவைகள் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்ள முயன்றுள்ளார். அமைச்சர்களைத்தான் தொடர்பு கொள்ள முடியாது என்று நினைத்தேன். ஓர் எழுத்தாளனையும் பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ள இயலவில்லையே!' என ஒரு நேர்ச்சந்திப்பில் நகைச் சுவையாகக் குறிப்பிட்டார் கவிஞர் அஷ்ரஃப். 'உங்களை நேரில் சந்தித்து இதை எழுதின கரங்களை முத்தமிட வேண்டும் போல் அந்த நேரம் எனக்குள் ஒரு உணர்வு தோன்றியது. அதற்காகத்தான் அத்தனை முயற்சியும் எடுத்துக் கொண்டேன்!' எனச் சொன்னார். அந்தப் புத்தகத்தின் கொழும்பு வெளியீட்டு விழாவுக்கு அழைப்புத் தராமலே நேரில் வந்தார். 'இப்படியான அரசியல்வாதிகளை இலக்கியக் கூட்டங்களுக்கு அழைத்தால் அடுத்த அடுத்த நாள் வரும் பேப்பர்களில் அவர்களது உரைக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பார்கள். எழுத்தாளன் என்பவன் காணாமலே போய்விடுவான்!' என அக் கூட்டத்திலேயே அறிவித்தேன் நான். அமைச்சராக அல்ல, ஒரு கவிஞனாகவே அழைப்பில்லாமல் ஜீவாவின் எழுத்தைக் கௌரவிப்பதற்காகவே இங்கு வந்துள்ளேன்.' எனக் கூறிய அவர் மேற் சொன்ன கருத்துக்களையும் அக் கூட்டத்திலேயே தெரிவித்தார். என் உடல் புல்லரித்தது. சிலிர்த்தது.

இப்படியாக எழுத்தாளர்களைக் கௌரவித்துக் கனம் பண்ணிய மாமனிதனின் இழப்பு இலக்கிய உலகிற்கே மிகப் பெரிய நஷ்டம். என்று கருதுகின்றேன்.

அந்த மனிதனுக்குள்ளே ஒரு கவிஞன் எப்பொழுதுமே கனன்று கொண்டிருந்தான்.

மல்லிகைப் பந்தல் மூலம் அடிக்கடி இலக்கியச் சந்திப்புக்களை நடத்துகிறீர்களே. எங்களையெல்லாம் அந்தச் சந்திப்புக்கு அழைக்கக் கூடாதா?

மருதாணை எம். பரஞ்சோதி

முதலில் என்னுடைய நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மல்லிகைப் பந்தலில் கூடுவது பொதுக் கூட்டமல்ல. சுமார் 20 - 30 ஆட்கள்தான் வசதியாக இருக்கக் கூடிய இட வசதி கொண்ட ஓர் அறை தான் காரியாலயம். ஒன்று கூடல் பிரபலப் படப்படச் சில சிரமங்களுக்கு உட்பட வேண்டியுள்ளது. வரவு அதிகரிக்க அதிகரிக்க, வந்தவர்கள் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அது மனதுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. எல்லா இலக்கிய நெஞ்சங்களையும் அரவணைத்துப் போகத்தான் எனக்கு விருப்பம். ஆனால் சூழ்நிலை இடம் தரமாட்டேன் என்கிறது. இதைப் புரிந்து கொண்டால் எனக்குள்ள சிரமங்கள் உங்களுக்கு விளங்கும்.

மல்லிகையில் வெளிவந்த நல்ல சிறுகதைகளைத் தொகுத்து மல்லிகைச் சிறுகதைகள் என்றொரு நூலை வெளியிட்டால் என்ன?

பதுளை ம. ராமனாதன்

ஏற்பாடுகள் செய்து சிலரிடம் தொகுப்பு வேலைகளை ஒப்படைத்துள்ளேன். உங்களது ஆலோசனைக்கு நன்றி.

மல்லிகைப் பந்தலின் வெளியீடுகள் ஒட்டுமொத்தமாக எனக்குக் கிடைக்க நான் என்ன செய்ய வேண்டும்.

திருமலை த. சிவநேசன்.

மல்லிகையுடன் தொடர்பு கொள்ளுங்கள். நமது நூல்களின் விலைகளையும் பெயர்களையும் தந்துதவுவோம். அப்புறம் பணமனுப்பினால் நூல்கள் உங்களது முகவரியைத் தேடி வரும்.

சமீபத்தில் தான் உங்களது சுயசரிதை நூலைப் படிக்க நேர்ந்தது. அந்த எழுத்தின் மூலம் தான் உங்களது வாழ்வின் வேரைப் புரிந்து கொள்ள முடிந்தது. எத்தனை எத்தனை அவமானங்கள் அவகேடுகளுக்கு மத்தியில் நீங்கள் உங்களை உருவாக்கிக் கொள்ள முடிந்தது என்பதை விளங்கிக் கொண்டேன். அந்த நூலைப் படிக்கும் போது ஒரு தமிழ் நூலை நான் படித்துக் கொண்டிருப்பதாக உண்மையில் நான் கருதவில்லை. கர்நாடக, கேரள எழுத்தாளன் ஒருவனின் வாழ்க்கைப் பின்னணியைப் படிப்பதாகவே நான் நினைத்துக் கொண்டு படித்தேன்.

எம். ராஜன் கேகாலை

ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். எனது சுயவரலாறு காலம் காலமாக வாழப் போகின்ற வாழ்வு இலக்கியம்: ஆய்வு இலக்கியம். ஜப்பானிலோ அல்லது அமெரிக்காவிலோ வாழ்ந்தவனல்ல. இதன் ஆசிரியன். யாழ்ப்பாண மண்ணில் உருவாகி, அந்த மண்ணினால் மனிதனாக வனையப்பட்டவன் என வரலாறு நிரூபிக்கும். இதை எழுதிய நான் மறைந்து விடலாம். ஆனால் காலம் காலமாக இந்த நூல் எனது பெயரை நிலைத்து நிற்கச் செய்யும் என உறுதியாக நம்புகின்றேன்.

மல்லிகைப் பந்தலின் புதிய வெளியீடுகள் எப்பொழுது வெளிவரும்?

மட்டக்களப்பு ந. நவநிதி

நான்கு நூல்கள் தயார் நிலையில் உள்ளன. தேர்தல் காலம். அச்சக நெருக்கடி. இந்தச் சூழ்நிலையைக் கடந்ததும் உங்களைத் தேடிப் புதுப் புத்தகங்கள் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா மாதம் மல்லிகை வெளிவராமல் தொடர்ந்து இடை விட்டு வருகிறதே. என்ன காரணம்?

பசறை எஸ். கணேசவேல்

மல்லிகைக்கு என்றுமே பொருளாதார நெருக்கடி இருந்ததில்லை. பல நல் நெஞ்சங்களின் அரவணைப்பு மல்லிகைக்கு என்றுமே கிட்டி வருகிறது. சங்கடம் என்னவென்றால், மல்லிகைக்கு விஷயதானம் கிடைப்பதில்தான் சிக்கல் எனலாம். யாழ்ப்பாணத்தில் ஒழுங்காகக் கதை, கட்டுரைகள் கிடைத்து வந்தன. இங்கே பல சிரமங்களுக்கு மத்தியில் தான் உள்ளடக்கம் கிடைக்க வழி சமைக்க வேண்டியுள்ளது. இதுதான் நமக்குள்ள சிக்கலே.

ஒரு கடத்தல்கார வீரப்பனைப் பிடித்து அடக்க இயலாத தமிழக அரசாங்கம் எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என நம்பலாமா?

ஜா எல எம். பரந்தாமன்.

உலகப் பெரும் புதினம் என்ன வென்றால் அது இதுதான். ஒரு கொடிய சந்தன மரக் கடத்தல்காரன் பல ஆண்டுகளாகவும் தமிழக, கர்நாடக, கேரள மாநில அரசுகளுக்கே தண்ணி காட்டி வருகிறான். சினிமா நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது புதிய திருப்பம். இந்த மாநில அரசாங்கங்கள் கையாலாகாத நிலையில் இன்று செயலற்றுப் போயுள்ளன. எங்களது பிரச்சினை ஒரு பக்கமிருக்கட்டும். தங்களது இப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க முன் வரட்டும். அல்லது ஆட்சி அதிகாரத்தை விட்டு வெளியேறிப் போகட்டும்.

யாழ்ப்பாண மண்தான் மல்லிகைச் செடிக்கு பசளையிட்டு வளர்த்துச் செழிக்க வைத்தது. மல்லிகை யாழ்ப்பாணத்திற்கு ஒழுங்காகப் போகின்றதா?

கொழும்பு - 6 ஆர். சோமநாதன்.

அந்த நன்றி உணர்ச்சி எப்போதுமே எனக்கு உண்டு. எதிர்பார்த்தபடி போகவில்லை. தபால் கணக்கும் வேறு சம்பந்தப்பட்டவர்கள் அந்த அந்த முகவரிகளில் வசிப்பார்களோ என்ற சந்தேகம். கடிதத் தொடர்பு அறுந்த நிலை. எப்படியும் மல்லிகையை நேசிப்பவர்களுக்கு மல்லிகை கிடைக்க ஆவன செய்து வருகிறேன் இதுவரை.

நவம்பர் 2000
மலர இருப்பது

அவுஸ்திரேலியச் சிறப்பு மலர்

புதிய அழகுடன்
புதிய உள்ளடக்கத்துடன்

201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு முகவரியைக் கொண்டவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான திரு டொமினிக் ஜீவா அவர்களுக்காக கொழும்பு 13 விவேகானந்தா மேட்டிலுள்ள யுகே அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மல்லிகை இலக்கிய இதழ்
கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக
வெளி வந்து கொண்டிருக்கும்
இலக்கிய சஞ்சிகை. அதன் வளர்ச்சி
கண்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம்.

SURIYA
TEXTILES & MILLS (PVT) LTD.

32/34, 3rd Cross Street,
Colombo-11

Fax:438531
T:P336977,
438494, 449105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைக்கு எமது வாழ்த்துக்கள்

PARA EXPO PRODUCTS (PVT) LTD.

Exporters of
Non Traditional
Sri Lankan Foods

30, Sea Avenue,
Colombo - 3.
Tel : 573717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org